
அறிஞர்
அண்ணா 65
தொகுப்பு
கவிஞர் மருதவண்ணன்
விலை
ரூ. 2/-


# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 3.6, அண்ணா சாலை, சென்னை-35.

**சேமிக்கும் அனைவருக்கும் வீடுகள்**

**"புதிய திட்டம்"**

## எல்லோருக்கும் வீடு

**கவர்ச்சி மிக்க வீடு கட்டும் திட்டம் தங்களைத் தேடி வருகின்றது!**



சின்னஞ்சிறு சேமிப்புகளின் மூலம் வீட்டுமனை, இணைந்த வீடு (Flat) வீடு ஆகியவற்றில் தங்களுக்கு விருப்பமான ஒன்றினைப் பெற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொன்னான வாய்ப்பினை வழங்குகிறது. இத்திட்டத்தில் சேரும் ஒவ்வொரு சேமிப்பாளரிடமிருந்தும் தவறுமல் சேமிப்பு பணத்தை அவரவர்கள் வீட்டிலேயே பெற்றுக் கொள்வதற்கான திட்டத்தை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் 'இந்தியன், வங்கியின் உதவியுடன் உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்களுக்கு வீடுகள், இணைந்த வீடுகள், வீட்டு மனைகள் முதலியவற்றை அளிப்பதும், சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதும் ஆகும்.

**சட்ட திட்டங்கள் பின் வருமாறு:**

1. தமிழ் நாட்டில் எந்த இடத்திலும் இணைந்த வீடோ, வீடோ அல்லது வீட்டு மனையோ சொந்தமாக இல்லாத 18 வயது நிரம்பிய எவரும் இத்திட்டத்தில் சேர தகுதி உடையவர்களாவார்கள்.

2. இத்திட்டத்தினுல் பயனடைய விருப்பமுள்ளவர்கள் தினமும் ஒரு ரூபாயோ அல்லது அதன் பன்மடங்கோ 5 ஆண்டுகளுக்கு செலுத்தி வர வேண்டும்.

. இச்சேமிப்பினை தினமோ வாரத்திற்கு ஒரு முறையோ. அல்லது மாதம் ஒரு முறையாகவோ செலுத்தலாம்.

4. இந்தியன் வங்கியின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் வீடு வீடாக வந்து தொகையை பெற்றுக் கொள்வர். சேமிப்பாளர்கள் இருப்பிடத்தில் வங்கியின் கிளை இல்லாவிட்டால், அருகிலுள்ள வங்கியின் கிளையில் சென்று தங்கள் சேமிப்பை குறிப்பிட்ட காலம் வரை செலுத்த வேண்டும்.

5. ஐந்து ஆண்டு காலத் தவணை முடிந்ததும் கட்டப்பட இருக்கும் வீடு, இணைந்த வீடு அல்லது மனைக்கட்டு முதலியற்றின் முழு விபரத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சேமிப்பாளருக்குத் தெரிவிக்கும். அதன் பிறகு, ஐந்து ஆண்டுகளாகச் சேமித்த பணத்தைப் போல் நான்கு பங்கு அதிக மதிப்புள்ள வீட்டை / இணைந்த வீட்டை / மனைக்கட்டை வாரியம் வழங்கும்.

6. சேமிப்பாளர் ஐந்து ஆண்டுகளாகச் சேமித்த தொகை போக, மீதியுள்ள வீடு/ இணைந்த வீடு மனைக்கட்டு, வழங்குவதற்காக செலவழிக்கப்படும் தொகையை வட்டியுடன் சேர்த்து ஐந்து/பத்து பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளில் மாதத் தவணையாக வீட்டு வசதி வாரியத்துக்குச் செலுத்த வேண்டும்.

7. சேமிப்பு காலமாகிய ஐந்து ஆண்டுகளில் பணத்தை எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்க இயலாது.

8. ஐந்து ஆண்டு காலத்துக்குள் மேற்கொண்டு இத்திட்டத்தில் நீடிக்க விரும்பாவிட்டாலும், அனுமதிக்கப்பட்ட மனைக்கட்டு/வீடு/ இணைந்தவீடு ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அவர் செலுத்தின தொகைக்கு 3% வட்டியுடன் சேர்த்து ஐந்தாவது ஆண்டு முடிவில் திருப்பிக் கொடுக்கப்படும்.

9. இத்திட்டத்தில் சேர விரும்பும் ஒருவருடைய விண்ணப்பத்தை எந்தக் காரணமும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை வீட்டு வசதி வாரியத்துக்கு உண்டு.

10. இத்திட்டத்தில் சேர்ந்த சேமிப்பாளர், இத்திட்டத்தின் சட்ட திட்டங்களையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அவ்வப்போது மாற்றப்படும் அல்லது சேர்க்கப்படும் சட்ட திட்டங்களையும் படித்து புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

கே, லட்சுமிகாந்தன்பாரதி ஐ. ஏ. எஸ்.
தலைவர்,
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
சென்னை-35.

நன்னெஞ் சினிய
புலவர்-பெரியர்
மா. நன்னன்
அவர்கட்கு
நன்றியுடன்
முருகுவண்ணன்
14.1.7



# கலைஞர் வாழ்த்துகிறார்

வாய்மையே வெல்லும்

முதலமைச்சர்

15—9—1973

நாலரைக் கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களிலெல்லாம் கொலு விருக்கும் அருமை அண்ணன்,

நம் ஊனோடும், உயிரோடும், உணர்வோடும் ஒன்றிக் கலந்துவிட்ட இதய மன்னன் அண்ணன் பிறந்த நாள்—நம்

அகக்கண் திறந்த நாள்!

அண்ணன் பிறந்தார்—செந்தமிழ் சிரித்தது!
அண்ணன் பிறந்தார்—தமிழகம் செழித்தது!
அண்ணன் பிறந்தார்—தமிழினம் களித்தது!

பொற்காலம் படைத்த அண்ணனுக்கு கவிஞர் முருகுவண்ணன் பொன்மலர் படைக்கின்றார்!

மலர் மணம் பெற வாழ்த்துகிறேன்!

அண்ணன் புகழ் வாழ்க!

அண்ணா வழியில் அயராதுழைக்க இந்நாளில் சூளுரைத்து செயல்படுவோமாக!

கவிஞர் முருகுவண்ணன்,
சென்னை—11.

இரா. நெடுஞ்செழியன்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-9

15—10—1973

''அறிஞர் அண்ணா அறுபத்தைந்து'' என்னும் மலர் வெளியிட விருப்பதறிந்து பெருமகிழ்வெய்துகிறேன்.

நமக்கெல்லாம் வழிகாட்டியாக வாழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று நம்மத்தியில் இல்லை எனினும், இறந்தும் இறவாப் புகழோடு அனைவரது நெஞ்சங்களிலும் நிலைத்து வாழ்கின்றார்.

இன்சொல்லாலும், உயர்பண்பாலும் மாற்றாரின் மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்த அண்ணா அவர்கள், தமிழ் வாழ. தமிழர்தம் நிலைஉயர அல்லும் பகலும் அயராது பாடுபட்டார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தினை தம் உயிர் மூச்சாகக் கொண்டு இலட்சியப் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நடப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

மலர் சிறக்க எனது நெஞ்சுகந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இரா. நெடுஞ்செழியன்)

பெறுநர் :

கவிஞர் முருகுவண்ணன்,
பெரம்பூர், சென்னை-600011.

மன்னை ப. நாராயணசாமி
உணவு,
கூட்டுறவுத் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-600009.

5—9—1973.

அன்புடையீர் !

''அறிஞர் அண்ணா அறுபத்தைந்து'' மலர் அண்ணா அவர்கள் பிறந்ததினத்தன்று வெளிவர இருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஏழை எளிய மக்களின் ஒளிவிளக்காக விளங்கிய அண்ணா அவர்களின் இலட்சியத்தினின்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து என்றென்றும் அண்ணா வழி நின்று செயல்பட இந் நன்னாளில் சூளுரைப்போம்.

அண்ணாவின் அழியாப் புகழ் வாழ்க !

அன்புள்ள,

(ப. நாராயணசாமி)

பெறுநர் :
கவிஞர் முருகுவண்ணன்,
42 அ, துளசிங்க முதலி தெரு,
பெரம்பூர், சென்னை-600011

---

ப. உ. சண்முகம்
பொதுப்பணித்துறை அமைச்சர்

முனிவர் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009

நாள் : 14—9—1973

வாழ்த்து

அண்ணனின் புகழ்பாட, கவிஞர் முருகுவண்ணன் தொடுத்திடும் மலர் மாலையில் என் வாழ்த்து இதழைச் சேர்ப்பதில் பெருமை கொள்கிறேன்.

புகழ்மணம் பரப்பிய அப்பெருமகன் அழியா நறுமணம் பரப்பிட மீளா துயில் கொண்டார் சந்தனப் பேழையில். அத்திருமகன் உறங்கும் திசைநோக்கி வணங்குவோம்.

கற்பனைக் கெட்டாத கவிதை உள்ளம் நீள்துயில் கொண்டாலும், அவர் வகுத்த வழியிருக்கிறது நாம் நடக்க, அவர் தந்த ஆயுதம் இருக்கிறது இடர் தவிர்க்க—அச்சம் நமக்கு எதற்கு ?

(ப. உ. சண்முகம்)

Tel : "COTTON"

Phone : Office : 216 & 321
Residential : 310 & 311
Bhavani

# Sundaram Spinning Mills

Post Box No. 25

**Komarapalayam Post (Via) Erode S. India**

Leading Exporting Mill in the South

Proudly announce that their export performance of cotton yarn for 1972-73 is

**Rs. 1,55,50,500.**


Country - wise export details :

| | |
|---|---|
| Czechoslovakia | Rs. 1,31,39,780/— |
| Poland | Rs. 9 03.000,— |
| United Kingdom | Rs. 7,77,520/— |
| Bangla Desh | Rs. 7,30,200/— |
| Total | Rs. 1,55,50 500/— |

Managing Partners : J. K. K. Angappan
J. K. K. Sundaram
J. K. K. Natarajah
J. K. K. Munirajah



**With the best compliments from:**



# HOTEL SHRILEKHA (P) LTD.,

**11-A/5, MOUNT ROAD, MADRAS-600002**

Phone: 810081

Grams : Your Choice

# Tamil Nadu Co-operative Housing Society Ltd., No. X-406.

**MADRAS-7.**

"Venkataswamy Vagheesam Nilayam"
No. 14, Ritherdon Road, Vepery,
Madras-600007.

Telegrams : "House Bank" Post Box No. 486 Telephone No. 30800

*President :*

Thiru Palanivel Rajan, B. Sc., B. L., M. L. A.,

*Vice-President:*

Thiru P. Kasthuri Pillai.

*Treasurer :*

Thiru S. Palaniswamy, M. A.,

| | | |
|---|---|---|
| Authorized Share Capital | ... | Rs. 2·5 crores |
| Paid up Share Capital | ... | Rs. 1,93,80,800/- |
| Loan outstanding against primary House Mortgage Societies and Building Societies. | | Rs. 10,82,41,928/- |

Long term loans for Construction of New Houses, Additions and Improvements Etc, Repayable in Twenty years are granted to individuals through the Primary House Mortgage Societies and the Various Types of Building Societies in Tamilnadu for the following purposes,

| | | Maximum Individual loan |
|---|---|---|
| 1. | Construction of New Houses — | Rs. 25,000/— |
| 2. | Improvements, Additions and Alterations to the Existing Houses. | Rs. 10,000/— |
| 3. | For Minor Repairs. | Rs. 1,000/— |

P. K. Pathmanathan B.A., H. D. C.
*Joint Registrar/Secretary.*

*With best compliments from :*

## Steel Sales Organization

(Southern Zone)

**1/39, Sembudoss St., Madras-600001.**

Grams : Steel Yard.
Telex : 041-7355

Phone { Office : 26019
Res : 29448

WITH BEST COMPLIMENTS FROM :

## THE MADRAS MEDICAL & GENERAL SUPPLIES

DRUGGISTS AND CHEMISTS,

**BROADWAY, MADRAS-600001.**

# The Mylapore Hindu Permanent Fund Limited

(ESTD. 1872)

Branches :

**471, Mint Street,**
**Park Town, Madras-3.**
**138, Thiruvothiyur High Road,**
**Washermenpet, Madras-21.**

Regd. Office :

**30-31, South Mada Street,**
**Mylapore,**
**Madras-4.**

Accepts (Savings) Recurring Deposits for 48 and 84 Months with guaranteed interest at 7·56% per annum.

Receives Fixed Deposits :
For 6 Months at 6% per annum
For 1 year at 7% per annum
For 2 years at 7½% per annum
For 3 years at 8% per annum

(Half-a-percent interest more on Fixed Deposits Above Rs. 10,000/- and One percent interest more on fixed deposits for Rs. 25,000/- and above) Interest on Fixed Deposits is payable quarterly and on Fixed Deposits for Rs. 10,000/- and above, monthly.

Loans are Granted :

On 22 carat Gold Jewels at Rs. 130 per Soverign and on Silver Articles at Rs. 2/— per 10 grams.

T. V. RAMAMURTHY, J. P.
President.

1. G. JANAKIRAM CHETTIAR
2. G. RAJARATHNA NAICKER, M.C.
Vice-presidents

M. RAJARAMAN, B.A., B.L.
Secretary

*WITH BEST COMPLIMENTS FROM:*

# M. A. M. MEERA SAHIB & CO.,

IRON MERCHANTS

**No. 89, Angappa Naicken Street, Madras-600001.**

வண்ணமிகு படைப்புகள் - வர்ணமய உலகம்

## அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுக்கள் பிரமாதம். நெசவோ நெஞ்சையள்ளும்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்

குர்தாக்கள்

பெல்பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

சேரளிகள்

மற்றும்

க்ளாசிக் சர்ட்டுகள்

## உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்

## சகாயமான விலை ஆதாயமான உழைப்பு

# தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

34/1-ஏ, பாந்தியன் சாலை, எழும்பூர்,

சென்னை 600008




# மலரும் மணமும்

அண்ணா !

அருவமாக எங்கும் நிறைந்து
அனைத்திலும் அளாவியுள்ள
அறிவுருவம் பெற்று வந்தவர் தாங்கள் !
அண்ணா!
அகமும்—புறமும்

இணைமோனையாக
இதயமே அன்பாக
இரசிகமே உணர்வாக;

ஈவாகத் தங்களையே
இருந்தமிழ்க்குத் தந்தவராக
உகரச் சுட்டென இடம்—எல்லை—காலம்
என்ற மூன்று நிலையும் கடந்து நின்றவ
ராக

ஊழினையும் உட்பக்கம் காணும் ஒரு
பெரும் வலிமையினதாக

எண்ணற்குரிய எண்ணாக / எண்ணமாக;
எழுச்சியாக—எழுச்சியோடு

ஏற்றமாக—ஏற்கத் தகுந்தவராக

ஐயந்திரிபற்றதாக—இயற்கையில் உள்ள
ஐம்முதற்பொருளாக—ஐந்திணையாக—
பாட்டியலின் ஐந்துறுப்புகளாக—ஐம்
பொறிகளாக—ஐம்புலனாக எல்லாம்
அமைந்த ஐந்தின் அடையாளமாகிய
ஐந்து எழுந்துகொண்ட பெயராக

ஒப்புவமையினராக
ஓங்கும் புதினமாக—
ஔவியம் அற்றவராக

அஃதா இஃதா எஃது எனப் பகுத்தறிய
வொண்ணாமல் சார் பெழுத்தான—ஃ
போலும், பொருண்மையாக—அருவ
மாகஆற்றலாக உள்ள அணுவினைப்
போல்உள்ள ஃ எனப்படும், மூலமுதற்
பொருண்மையின் கடைசிக் கூற்றின்
மும்மைபோல் அமைந்த முச்சுழி
போல, அனைவரையும் சார்ந்து அனை
வரும் அணுகத் தகுந்தவராக—
அண்ணாவாக – அகரமாக – ககரமாக
அஃதாவது உயிர்மெய்யாக தமிழர்
தம் அகமாக அமைந்துவிட்ட அண்ணா
உங்களுக்கு தண்மலர் – தமிழ்மலர்
ஒன்றுவெளியிட தனிப்பெரும அவா
வுற்றேன் ; உற்ற அப்பேரவா என்
அகத்துள் மலர்ந்தது ..மலர்ந்த அம்
மலர் அனைவரது கரங்களிலும்
கமழ்ந்திட……

ஏடும் எழுத்தும்கொண்ட வண்ண மலராக உருவாக்கிட விழைந்தேன்—முயன்றேன்.

அடியேன் என் முயற்சி கண்டு தொடக்கத்திலேயே எனது மனத்திற்கும் எழில் உரு பெற்றுதரும் இம்மலருக்கும் இடையே நிகழ்ந்த கருத் த ரங் கினை—தங்கள் திருமுன்னர் கொணர்ந்து நிறுத்துகிறேன், உருவகக் காட்சியாக...காணுங்கள் அண்ணா...

''கோட்டுப் பூவும் அல்ல; கொடிப்பூவும் அல்ல; நிலப்பூவும அல்ல; நீர்ப்பூவும் அல்ல; இந்நால்வகைப் பூவிற்கும் அப்பாற்பட்ட பூவாக மலர்ந்திடப் போகும் என்னில் வண்ணமாம்—அ ண் ணா அவர்களைப்பற்றியஎண்ணம் தருவாருண்டோ கவிஞனின் மனமே?

உண்டு! உலக வழக்கழிந்தொ ழி யா து சீரிளமையோடு உள்ள தமிழ் பேசும் மக்கள் இந்த உருள்சுழல் உலகமெங்கும் பரவியுள்ளனர். அவர்களெல்லாம்......

குறிப்பாகச் சொல்......

குறைவறப் படித்துப்பட்டம் பெற்றார் நிறைவுற பொருளீட்டி பெருமைபட வாழ வேண்டும் என்ற எண்ணம் விடுத்தார்; தமிழும் தமிழினமும் தமிழ்நாடும் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்ற துணிவும் முடிவும் கொண்டார். தமிழரெலாம் இன்று பெற்றுள்ள ஏற்றத்திற்கு அவர் தான் காரணம் என்பதற்குத் தேவையான தொண்டெல்லாம் ஆற்றியுள்ளார் அண்ணா அவர்கள்......அது குறித்தெல்லாம் எண்ணம் நல்கிட எத்துணையோபேர் உள்ளனர்.

அவர்கள் மறுப்பரேல்......

அடக்கத்தோடு சொல்கிறேன் கேள் மலரே!

அன்னைத் தமிழ் மொழியை இந்த உலகின் அரங்கிலேற்றி வைத்திட அடுக்குமொழியை அழகு நடையை, இனிய எளிய கருத்துரையை சொல்லால் எழுத்தால் மறுமலர்ச்சி பெற்றிடச் செய்தாரே அவருக்கு முந்திய நாள்வரை இல்லாத அளவில், தமிழை, உலகுக்கு உலக மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாரே... மொழி நூலறிஞர்கள் அது குறித்தெல்லாம் எழுதித் தாராரோ?

தரவில்லையேல்..... ?

குறுக்கிடாதே! கூறிக்கொண் டே வருகிறேன் கேள் மலரே!

### அன்பகம்

அன்னையின் கண் ஊற்றுப்பெருக்காகி அனைவருள்ளும் பெருகிடினும் எங்கோ எப்போதோ எவரிடமோ தான் சொல்லில மொழியில்—செயலில் தென்படுகிறது கண்களுக்குத் தெரியாத அன்பு! அத்தகு அன்பினை. அரசியல் துறையிலும் கொண்டுவந்து நிலை நிறுத்தினரே அந்தப் பேரன்புத் தாயுள்ளத்தைப் பற்றி அன்பகத்தைப்பற்றி அன்புள்ளம் கொண்ட ஆன்றோர் எழுதிடுவர்......

### எதிர்க்கட்சியை மதித்த ஏந்தல்

அரசியலில் எதிர்க்கட்சிகளை, எதிரிக்கட்சிகளாகவே எண்ணி நடந்துவந்த நிலைமைகள் உண்டு! அவற்றை மாற்றி எதிர்க்கடசியும் மக்களாட்சியில் தக்கதோரங்கம என்பதனை எடுத்துரைத்து மதித்து நடந்து வந்தாரே...... அதனையெல்லாம் அரசியல் மாண்பமை அறிஞர்கள் எழுதுவர்! அவர்களுக்கு நேரமின்மையால் எழுதிட இயலாமல் போகும்! அரசியல்துறை அன்றோ!

### குறளகம்

கற்றதோடு அடங்கிடாமல் கற்றவழி நின்று, கணக்கில்லாதவராக நம் நாட்டில் கல்லாராயுள்ள அனைவரும் கற்றிட வேண்டும் என்று கல்வி வேட்கையினை பெருக்கியவராயிற்றே...அஃதும் அந்த வேட்கையினை, கேட்டாரும் பிணிக்கு கேளாரும் தகையவாய் வேட்ப மொழிவதாஞ் சொல்' என்றனே வள்ளுவன் அந்தக் கருத்திற்கேற்ப சொல் வன்மை பெற்று சொற்பொழிவாற்றியதன் வாயிலாகவே உண்டாக்கினரே! அந்தக் 'குறளகம்' பற்றி எழுதிக் குவித்திடுவார்கள்.

### எடா தம்பி எடடா பேனா!

'எழுத்துலகம்' உறங்கும் உலகை எழுப்பி விடும் என்பதனைச் சுட்டிக் காட்டி, எழுச்சியூட்டி, தன்னைப் பின்பற்றி எல்லோரும் எழுத்தாளராக வேண்டும் என்று விரும்பி 'ஏடா தம்பி'' எடடா பேனா!'' என்று அழைப்பு விடுத்து ஆயிரம் ஆயிரம் எழுத்தாளர் அணியை உருவாக்கிக் காட்டினரே! அதுபற்றி எல்லாம் எழுத்துலகம் எழுதிட மறந்திடுமா?

### ஏ தாழ்ந்த தமிழகமே

திருப்பள்ளி எழுச்சியெனப்பாடி, ''தாழ்ந்த தமிழகமேவிழி! எழு' என்பதுபோன்ற சொற் பெருக்கினல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினரே! உறக்கத்திலிருந்த தமிழுலகை எழுப்பி விழிப் புலகின் முன் நிறுத்தினரே.....நினைவிருக்காதா நீடுதூலில் நீங்கிய தமிழினத்துக்கு?

## திரேவர் அடில்ஸ்டனும் திருக்கச்சிஅண்ணுவும்

'இருண்ட கண்டம்' நிலநூலில் இதற்கு விளக்கப்படம் ஆப்பிரிக்கக் கண்டம்! அந்தக் கண்டத்து மண்ணடியில் மஞ்சள் பொன் மண்டிக் கிடந்தும் ஏனோ மக்கள் மட்டும் செம் பொன்மேனி பெறுமல் கரும் பொன் மேனி பெற்றுள்ளனர். அந்தக் கண்டத்து மக்களின் உடல், வண்ணம் இருள்போலவேஉள்ளத்திலும் இருள் மண்டிக் கிடந்ததை அகற்ற அரும் பாடு பட்டார்—ட்ரேவர் ஹடில்ஸ்டன. (Trever Hudleston) என்பவர், அவரைப்போலவே தங்கவயல் அனைய தமிழகத்தில் தமிழர்கள் தங் கள் கண்டத்தில்-நெஞ்சத்தில் இருளை. அறியா மையை பழமையை மூடப் பழக்க வழக்கத்தை கொண்டிருந்ததனை அகற்ற தங்கவான் எழுந் துதிக்கும் இளஞாயிறு என உதித்து உழைத் தாரே அண்ணு அவர்கள். அதனை புத்துலகம் காணும் புதிய தலை முறைகள் புகலாதோ?

## செஞ்சிலுவை சங்கமும் தி.மு.க. கழகமும்

ஏற்றுக்கொண்ட (பயணம்) செலவு வணி கத்திற்காக! இத்தாலி நாட்டின் வடபுலத்தில் சென்றுக்கொண்டிருக்கிறுர் ஒருவர்! வழி தவறி விடுகிறுர். போய்ச் சேரும் இடத்தில் அழுகையும் ஓலமும், ஒருவர் இருவர் அல்லர். ஓராயிரமா...இன்னும் பல ஆம்! போர்; சால் பரீனு (Salforino) போர். அந்தப்போரில் வெட்டுண்டு வீழ்ந்துகிடந்தவர்களின் ஓலம் தான் அது! கேட்டுவிட்டு வந்த வழியே திரும் பிடவில்லை அந்த இரக்கமனம் கொண்ட மானிடன். அண்டை ஊர் ஒன்றுக்குப் போகி றுன்; அங்கிருந்தவர்களையெல்லாம் அழைத் துக்கொண்டுபோய் உதவிபுரிகிறுன். ஊர் சேர்க்கிறுன். உலகில் மீண்டும் மீண்டும் இப்படி நடக்கும்; நடக்கும் போதெல்லாம் இப்படிப் போர்புரிந்தோரின் நிலை இதுவாளுல்? சிந்திக்கின்றுன் சிந்திக்கின்றுன்...?

அன்றே அல்ல ஆண்டுகள் சில கழிந்தபின் காண்கிறுன், செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) அந்த மானிடப் பேரன்புப் பண்பு கொண்டவன் ஜீன் ஹென்ரி ட்யூனன் (Jean Henry Dunant) அவரைப்போலவே, ஆனல்......

இனமொழி மத கோண்மைப் பிடியில் சிக்கிச் சீரழிந்து சிதைந்து கிடந்த தமினத் தைக்கண்டு சிந்தை நொந்தார். செந்நீர் சிந் தினர். அறிவுக்கரம் கொண்டு, அருமைத் தம்பிமார்கள் அணியைக் கொண்டு. சீரழிந்து சாகாமல் ஓலமிட்டுக் கொண்டிருந்த தமிழ் மக்களை சீர்பட வைத்தார் அண்ணு அந்த மானிடப்பேரிரக்க பண்பன்பு மனிதாபிமானம், பற்றி பகர்ந்திடாதார் பார்க்கமுடியுமா?

## இராமலிங்க அடிகளும் அண்ணுவின் பரிவும்

வாடிய பயிரைக் கண்டும் வாடிய வடலூர் இராமலிங்க அடிகளாரை நினைவிற்கொண்டு, தமது சொற்பொழிவில் ''இராமலிங்கவிலாஸ்'' என்று பெயர்ப்பலகையை வாசலிலே தொங்க விட்டு, உள்ளே, ஊர்வன பறப்பன நடப்பன ஆகிய அத்தனை உயிர்களின் உடற்பகுதிகள் அனைத்தையும் சமைத்து அளிக்கப்படும் உணவு விடுதிபற்றி என்ன நினைப்பது?' என்று குறிப்பிடுவார்கள். அண்ணு புலால் உண்ணும் பழக்கத்திற்கு ஆட்பட்டவராயினும், புலால் மறுப்பும் கொல்லா நோன்பும் பூத்த பேரன்பு உள்ளம் அண்ணு உள்ளம் என்பதனை அறிந்த உள்ளங்கள் அறிஞரின் அன்பு—இரக்கதலைதப் பற்றி எழுதித்தருவர்!

## தமிழிசை நெஞ்சம்

''குறிஞ்சி, நாட்டை, நாட்டைக் குறிஞ்சி, சுருட்டி, செஞ்சுருட்டி'' என்று விரல் விட்டு எண்ணிடக்கூடிய அராகங்களின் பெயர்தவிர, பிறபெயர்கள் எல்லாம் வடமொழியில்தானே உள்ளன? பண்ணத்தி, பாலை என்றெல்லாம் பண்களின் திறம் அறிந்தவர் எத்தனை பேர்? தமிழில் இசைப்பாடல்கள் இல்லையா? தமிழ்ப் பாடல்கள் இயற்றித் தரவல்ல பாவளம் மிக்க காவியச் செல்வர்கள் இல்லையா? என் றெல்லாம் முழங்கியதைக் கேட்ட இசையுள் ளம் கொண்டோர் அண்ணு அவர்களுக்குள்ள தமிழ் இசையுள்ளம்பற்றி எழுதிடுவர்!

## நாடக மேதை

நாட்டகத்தே நிலைநாட்டி நிற்கும் நலிவு கள் மெலிவுகள், பழமைகள் மூடப்பழக்க வழக்கங்கள் எல்லாம் விரட்டப்பட வேண்டும் என்று எண்ணி, தாமே எழுதியும் நடித்தும் வந்த நாடகங்கள் எத்தனை எத்தனை? நாடகத் தின் அறிவியல் இடமாற்றமான திரை ஒவியத் துறையிலும் அண்ணு செய்த மாற்றம் ஏற்றம் குறித்து எல்லாம் எழுதிடாரோ இயல் இசை நாடக விற்பன்னர்கள்?

## எண்ணத்தின் முத்திரைகளாம் அண்ணுவின் கை அசைவுகள்

ஆயிரம் ஆயிரம் மேடைகளில் ஆண்டு பல வாக சொற்பொழிவாற்றியவர் அல்லவா அண்ணு அவர்கள்? அவர்கள் சொற்பொழி வாற்றுகையில்,

''பிண்டியும் பிணையலும்''

''எழிற்கையும் தொழிற்கையும்'

என்றெல்லாம் ஆடலாசிரியனிடம் அமைந்தி ருக்கவேண்டிய பல்வேறு ஆற்றல் நயங்கள்... அஃதாவது ஒருகை அசைத்து நடித்தலும் (பிண்டியும்) இருகைகள் அசைத்து நடித்த

லும் (பிணையலும்) அழகுபெற கைகளை அபி நயத்துக் காட்டுதலும் (எழிற்கையும்) செயல்கள் புலப்படும்படி கைகளால் சாடை காட்டுவதும் (தொழிற்கையும்) அண்ணா விடம் அமைந்து புலப்படுமே! அதனையெல்லாம் கண்ட தமிழகத்து மக்கள் இலக்கக் கணக்கானவர்கள் அதுபற்றியும்,

கூத்தில் ஒரு வகையான 'நுண்மாயம்! என்பார்களே அது போலவே, பொடிவைத்துப் பேசிட, அது கேட்ட மக்கள் ஆரவாரம் செய்திட அதுபோது யாரும் அறியாவண்ணம் பொடி போடுவாரே அதனைக்கண்டவர்கள் எழுதிடுவார்கள்......

## D. N. A., R. N. A., C. N. A.

நமது இந்தியத் துணைக்கண்டத்து விஞ்ஞையர் கரோனு! வேலையின்றி வேற்றுநாடாம் மேலை நாடு சென்றார்; ஆராய்ச்சிகள் செய்தார்— பிறப்பியல் பற்றி! அவரோடு உடன் ஆராய்ச்சி செய்தவருக்கும் நோபல் பரிசு அளிக்கப் பட்டது. விளங்கக்கூறின்,

DEOxy

கருவாகிடும் தாதில் D. N. A. (~~Dioxide~~ 'Neucleic Acid) மற்றும் R. N. A. (Ribo ~~Flavine~~ Neucleic Acid) இரண்டையும் கொண்டு ஆண் அல்லது பெண், வெள்ளை அல்லது கருப்பு நிறம் என்று முடிவு செய்து விடலாமாம். அந்தப் பிறப்பியல் முறைக்கு (Genetic Engineering) என்று பெயர். அதற்காக கரோனுவிற்கு நோபல் பரிசு! நற்றமிழ் ஆய்ந்த நல்லறி வியலாரிக்கு நகைப்புதான் வந்திடும் "கருவில் அமைந்ததிரு" ஆறு! அறிவு இளமை பிணி பேறு மூப்பு சாக்காடு என்பன அவ்வாறு!

இத்தனையும் கருவிலேயே அமைந்துவிடுகின்றன. இரண்டைமட்டும் இந்த நூற்றாண்டில் சொன்னவர்க்கு நோபல் பரிசு! அது கிடக்கட்டும்!...... C. N. A. ஆன அண்ணா அவர்கள், எந்த இயலையும் கைக்கொள்ளாமல் அமிழ்தச் சொற்பெருக்கினுல் மட்டுமே கடந்த...நிகழும் தலைமுறையை மாற்றிவிட்டிருக்கிருரே. எடுத்துக்காட்டாக ஒலி அலைகள் அளக்கும் சொற்கள் வாயிலாக ஒலி யூடே ஒளியளந்து உயிரளந்து உடலளாவி உளப்பண்புகளை புதியவனவாக மாற்றி, விழிப்புணர்ச்சி புதுமைகாணல் அடிமைத்தனமாற்றல், வீறுகோண்டு எழல், இன உணர்வு, தாய் மொழிப்பற்று ஆகியவற்றை ஏற்படுத்திக் காட்டியுள்ளாரே...அது குறித்தெல்லாம் பிறப்பியல் துறை கற்றறிந்தாய்ந்த அறிவியலார் எழுதாமல் போகார்

## முன்னேற்றக் கழகமும் சுவிசேஷமுத்துவின் விளக்கமும்

கலைத்துறைகளின் மூலம் இறைபணி என்ற நோக்கோடு மக்கட்புணியும் ஒருங்கே ஆற்றி வரும் நிலையம் கிறிஸ்தவக் கலை-தொடர்பு நிலையம். அதன் இயக்குநர் அருட்திரு சுவிசேஷ முத்து அவர்கள். என் போன்ற பல கவிஞர்கள் எழுத்தாளர்கள் நடிகர்கள் ஆகியோருக்கு இயேசுகிறிஸ்துவானவர் தமது மலைச்சொற பொழிவ்வ் குறிப்பிட்டுள்ளது போல 'அன்றன்று வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக் குத்தாரும் என்ற குறையிரத்தல் வரிசளுக்கு ஒப்ப, உதவி வருகின்ற நிலையம் அதனைப் பார்வையிட, பல வேறு மேலை நாட்டு இறையியற் வித்தகர்கள் வந்தனர். தமிழ் நாட்டு நிலை கேட்டுக் கொண்டனர். அதுபோது அவர்களுக்கே வியப்பு.. வினு தொடுக்கின்றனர் "DMK's Impact with people" மக்களிடம் திமுகவிற்கு உள்ள பற்று பிடிப்பு எத்தகையது? என்பது வினு. அதற்கு விடையாக அருட்திரு சுவிசேஷமுத்து அவர்கள் இறையியல் மட்டுமன்றி, தத்துவம், உலகியல், அரசியல் எல்லாம் அறிந்தவர் ஆதலால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க மூதல் இன்று வரை தொடர்ச்சியாக நான்கு மணிநேரம் விளக்கியுள்ளார். அதனை மீண்டும் சொல்ல சொல்லி தொகுத்தாலே போதாதா?

இவ்வளவேன், தமிழ்க்கவிஞர்களின்-எழுத்தாளர்களின் சங்கப் பலவகையாகவுள்ள முரசொலி, என்னையும் வளர்த்தது! தமிழ், தமிழினம்—தமிழ்நாடு முன்னேற்றத்திற்காக முரசொலிக்கும் அம்முத்தமிழ் ஏட்டின் வாயிலாகத் தான் ஏட்டுக்கும் நாட்டுக்கும் அறிமுகமானேன். அந்த எழிலார ஏட்டில் மட்டும் வெளியான எனது கவிதைகள் பல. அவற்றுள் அறிஞர் அண்ணா என்னும் சொல் விரவி வரும் கவிதைகளைமட்டும் தொகுத்தால் போதாதோ மலர் ஆகாதோ?

## அறிஞரைப் பற்றி கலைஞர்

இத்துணையேன், நான்கைந்து நாள் முரசொலியைப் புரட்டினுல் போதும். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த காலத்தில் அறிஞர் அண்ணா பேசியதையும் எழுதியதையும் தமது சொற்பொழிவுகளின் இடையிடையே எடுத்துமேற்கோள் காட்டி வருகின்றதெல்லாம் முரசொலியில் வெளியிடப் பெறுகிறது. அவையெல்லாம் குவளை மலர் வாயிதழ்கள் பிலிற்றும் கொஞ்சுதமிழ்த்தேன் அடைகள் ஆகும். கவிதை இதாகையாகும்!

அவற்றைத் தொகுத்தாலே அருமையான மலராகும்.

"கொட்டிக் கிடக்கும் செங்கல் நான்; கட்டி முடிக்கப்பட்ட கோபுரம் அவர் என்று ஒருவரோடு தங்களை ஒப்பிட்டுக் கூறினீர்கள். ஆனால் தங்கள் அறிவினால் உழைப்பினால் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம் மட்டும அல்ல. கொட்டிக் கிடந்த செங்கல்போன்று சிதறிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைக் கோபுரமாக்கினீர்; உலகுக்கு அறிமுகப்படுத்தினீர் அண்ணா தாங்கள்! ஒப்பற்றச் சமுதாயச் சிற்பி அண்ணா தாங்கள்" என்று மானிடப்பண்புள்ளோரெல்லாம் மறவாது பாராட்டுகின்றார்கள்! உள்ள படியே சமுதாயத்திற்காக அண்ணா அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரும்பணிகள்! அவையெல்லாம் அருந்தமிழ்ச் சமுதாயத்திற்கே மன்பதைக்கே அழகுசெய்யும் புகழ் அணிகள்! அவையெல்லாம் தொகுக்கப்பெற்றால்?

## என் இதயத்தில் அண்ணா!

புராணப்படங்களையே கண்டு வந்த தமிழ் உலகின் கண்முன் 'வேலைக்காரி'யை கொண்டு வந்து நிறுத்தி தமிழ் விளங்கும் நல் உலகில் மட்டுமன்றி திரையுலகிலேயே மகத்தானப் புரட்சியை—சீர்திருத்தத்தை உண்டாக்கிக் காட்டி புத்துலகு காணவைத்தவர்கள் அண்ணா! திரையுலகில் காட்சி அமைப்புகளில்—கதை அமைப்புதனில்—கருத்துறையும் கற்கண்டு உரையாடல்களை எப்படி எப்படியெல்லாம் தமது திறமையைக் காட்டியுள்ளார் என்பதுபற்றி திரைக்கதை வசனகர்த்தா என்னும் கோணத்தில் தனது இதயத்தில் எப்படி இடம் பெற்றார்கள் அண்ணா என்று எத்தனையோ முறை எடுத்துச் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பார், எனது அருமை நண்பரும் அகம் நிறைந்த அன்பருமான கதை வசன கர்த்தா திரு. சாம். டி, தாசன்! அவர்களைக் கேட்டால் எழுதித் தருவார்கள்!

•

## தலையாயக் கொள்கை

"தமிழன் யாருக்கும் தாழாமல்—யாரையும் தாழ்த்தாமல்; எவரையும் சுரண்டாமல் எவராலும் சுரண்டப்படாமல்; யாருக்கும் எசமானாக இல்லாமல்—உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை" என்று அண்ணா அவர்கள் அறிவித்த தலையாய கொள்கையும் அண்ணா அவர்களின் அரசியல் வாழ்வின் கடைசி வேட்கையாம் மாநிலத் தன்னாட்சிபற்றிய கட்டுரையும் முதல் நூல் எனலாம். அந்த முதல் நூலுக்கு வழி நூலாக நாடாளுமன்ற உறுப்பினரும் முரசொலி ஆசிரியருமாகிய திரு. மாறன் எம், ஏ. அவர்கள் மாநில சுயாட்சி என்னும் நூலை யாத்திருக்கிறார்கள்! அதிலிருந்து ஒரு சில பகுதிகளைத தொகுத்தாலே போதும்.

## கலப்புத் திருமணம் அளிக்கும் பரிசு

சாதிபேதம் ஒழிந்திட கலப்புத் திருமணம் வேண்டும் என்பதைப் பேசியும் சட்டமன்றில் வாதிட்டும் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கலப்பு மணத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையான சட்டம் கொண்டு வந்தும் நிறைவேற்றினார்கள். கசப்பு மணமாகக் கருதப்பட்டுவந்த கலப்பு மணம் இனிப்பு மணமாகியது. "சட்டப்படி 1967-ஆம் ஆண்டு முதல்" என்று இருந்ததனை, அதற்கு முன்பு கலப்புமணம் செய்துக் கொண்டவர்களுக்கும்" என்று சட்டத்திருத்தம் செய்திட வேண்டும் என்று விரும்பம்—வேட்கை கொண்டோர் பலர்! "அண்ணா அவர்கள் இல்லை என்றால் என்ன? கலைஞர் இருக்கிறார்களே! நமது வேண்டுகோளை விருப்பத்தைத் தெரிவிப்போம்!" என்று தெரிவித்தார்களாம். டாக்டர் கலைஞர் அவர்களும் அவர்கள் விருப்பத்தினை வேண்டுகோளை ஏற்று நிறைவேற்றினார்களாம். அது குறித்து தலைமைச் செயலக வாசலில் ஒருநாள் வில்லிவாக்கம் முத்தமிழ் மன்றத்தைச்சார்ந்த வில்லாளன், கருணாகரன் சாமிநாதன் என்போர் பெருமையோடு உரையாடிக் கொண்டிருந்ததனைக் கேட்டுப் பூரித்துப்போனேன். இவ்வாறு அண்ணா அவர்கள் தொட்டபணிகளை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றாரே கலைஞர் அவர்கள்! அவையெல்லாம் அறிஞர் பெருந்தகைக்குச் சூட்டப்படும் புகழாரங்கள் அல்லவோ? இப்படி இன்னும் எத்தனையோ?

தலைமைக் கழகத்திற்குசென்று அன்பர்கள் தேவராசன் அவர்கள் சண்முகம் அவர்கள் ஆகியோரைக் கேட்டால் எத்தனையோ சொல்வார்கள்!

என்போன்றோரும் அடிக்கடி சந்திக்கவும் உரையாடவும் வாய்ப்பு கிடைத்திடச் செய்யும் மாண்புமிகு அமைச்சர் க. ராசாராம் போன்றவர்களிடம் அணுகிக் கேட்டால் எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சொல்வார்களே! அவை போதாதோ?

அன்புரைகளாக அறிவுரைகளாக-நெறி முறைகளாக, அறிவகமாம் அண்ணாவின் சொற்பொழிவுகளில் விரவிவரும். எடுத்துக்காட்டாக:

## அண்ணாவின் சமுதாயநெறி

"அறிவும் ஆராய்ச்சித் திறனும் காரண காரியமிக்க சிந்தனையும் செயல்முறைகளும் போற்றி வளர்க்கப்படல் வேண்டும். அதுவே சமுதாய நெறியாகவும் வாழ்க்கை முறையாக வும் அமைந்திடல் வேண்டும்! இத்தகு அறிவின் ஆட்சியும் அன்பின் மாட்சியும் எங்கணும் எத் திசையும் பரவிப் பூத்துக் குலுங்கிடக் காண் போமாக" என்பனபோன்ற அண்ணாவின் பொன்னான மொழிகளை தொகுத்தாலே போதும்...இன்னும் ஏதாவது கேட்கவேண்டு மானால் மலரே கேள்......

"எத்துணை சொல்லியும் என்ன? மனத் தழகு இருந்தால் மட்டும் போதாது; பணப் பொழுது வரவேண்டும் நான் மலர்ந்திட!"

பணப்பொழுதும் வரும்; நீயும் மலர்ந்திடு வாய்!" இப்படியெல்லாம் என் மனத்துக்கும் மலருக்கும் போராட்டம் அண்ணா!

மலர் எள்ளி நகையாடியது போன்று பணப் பொழுது வரவில்லை...பகலவனைச் சுற்றி வரும் கடப்பாட்டினில் பிறழாது உலகம் இருந்த தனால் நாட்கள் நகர்ந்தன! திங்கள் கடந்தன! "அறுபத்தைந்து போயிற்று அறுபத்தாறும் பிறந்த நாளும் வரப்போகிறது அப்போதேனும் மலர் வருமா?' இது ஒரு சிலரின் ஏளனக் கேள்வி!

"அறுபத்து நான்கு தான் கலைகள்; அறிஞர் அண்ணாவையும் எண்ணினால் அறுபத்தைந்து" என்று விளக்கம் தந்ததோடு, அண்ணா, தங்கள் தோற்றம் சொல் எழுத்து, நடை ஆகியவற்றை ஆறு வெண்பாக்களில் சொல்லி ஏழாவது வெண் பாவில், ஏன் அண்ணாவை அறுபத்தைந்தாவது கலையாக எண்ணக்கூடாது?" என்று அறிவு-கலை யுலகுக்கு கேள்வி விடுத்தேன். மலருக்குத் தந்த தலைப்பாம், "அறிஞர் அண்ணா அறுபத் தைந்து" என்பதனை தகுந்த தலைப்பாக்கி வைத்தேன்.

## கடமையை எண்ணிச் செய்யும் கட்டளை கலைஞர்

இப்போதெல்லாம் கலைஞர் அவர்கள் 'உடன் பிறப்பே!" என்று விளித்து கழகக் குரலில் மடல் ஒன்று எழுதுகிறார்கள். 16-6-74 'சழகக்குரல்' இதழில்,

"என் அன்பே! இந்த ஆண்டு நீயும் நானும் கடல் கடந்து வாழும் நமது உடன் பிறப்புக்க ளும். மகிழ்ச்சியும் எழுச்சியும் உணர்ச்சியும் மாறிமாறி அலைபாயும் ஒருநிலைக்கு ஆளாகப் போகிறோம்—உனக்குத் தெரியுமா?

செப்டம்பர் 15-நம் இரத்தத்தின் இரத் தம்—நம் உடலின் உயிராம் கண்ணின் ஒளியாம் அண்ணனின் அறுபத்தைந்தாவது பிறந்தநாள் விழா என்றெல்லாம் கலைஞர் எழுதியுள்ளதைக் கண்டேன். எத்துணை எத்துணை கடமைகளுக்கு இடையிலும் எவ்வளவு கணக்கு தவறாமல் இருக்கிறார் என்று எண்ணிப் பார்த்தேன். இந்த ஆண்டு (1974) செப்டம்பர் 15-ம் நாள் தான் தங்கள் அறுபத்தைந்தாவது பிறந்தநாள் விழா. மகிழ்ச்சிப் பெருக்கு! மலரின் தலைப் புக்கு மற்றொரு பொருத்தம்,

"இத்தனை இடர்ப்பாடுகளுக்கும் ஈடுதந்து எனக்கொரு மலர் வெளியிட வேண்டுமா? என்று தாங்கள் கேட்பதாக உணர்வு!

எங்களுக்கெல்லாம் 'தரவ'ல்லவா? தங்கள் மொழிகளை ஏற்று நடப்பதோடு எடுத்துச் சொல்லிப் பரவிடும்

தாழிசை யல்லவா நாங்கள்...! தாங்கள் விடுத்துச்சென்ற பணிகளை முடித்திடும் பொறுப் பில் உள்ள டாக்டர் கலைஞர் அவர்களும் உடன் அமைச்சர்களும் எண்ணற்ற தொண்டர்களும் சுற்றி சுற்றி முடிக்கும் 'சுரிதகம்' அல்லவோ? எங்கள் அகத்தில் கொஞ்சிடும் தங்கள் நினைவு களுக்கிடையே வந்துறும் கலிதீர்க்கும் 'பா' அல்லவா தாங்கள்... எங்கள் கலிதீர்த்து எங் கள் அகம் கொஞ்சும் பாவான கொஞ்சகக் கலிப்பா அன்றோ! தாங்கள் தங்களுக்கு மலர் ஒன்று வெளியிடுவதில் எனக்கு பொருள் இழப்பு பெரிதெனினும் அக மகிழ்ச்சி அதனினும் பெரிது அண்ணா!

தாங்கள் பிறந்த நாளன்றே மலர்ந்திடாத குறையேதவிர, காசுறு மலர் பணமலர் அல்லவே தவிர மணமலர் என்பதில் குறைவிருக்காது. இன்று மலரும் மலர்ந்தது; என் மனமும் மகிழ்ந் தது;

மொத்தத்தில் இம்மலராம் என்னில் உன் னுடைய எண்ணமும் கைவண்ணமும்தான் மிகை" என்கிறது அண்ணா மலர்!

என் நிலைக்கு தகுதிக்கு என்னுடைய எண் ணமும் அதனால் உருவான மலரில் அமைந்த கைவண்ணமும் மிகைதான் என்ற பொருளில் கூறுகிறதோ? அல்லது தலையங்கம் முதல் கடைசி பக்கம்வரை அடுத்தடுத்து உனது கட் டுரை கவிதைகளே நிரம்ப உள்ளது என்கி றதோ தெரியவில்லை.

எப்படியோ தமிழ் நெஞ்சங்களால் மலர்ந் தது மலரும்; மகிழட்டும் தங்கள் மனமும்!

தமிழும் தமிழினமும், தமிழ்நாடும் மணக்க அதனால் இந்த தரணியே மணக்க மலர்ந்த தங் களுக்கென்று மலர்ந்த மலர்களுள் இஃதும் ஒரு மலர்! மணக்கட்டும் இம்மலரை தொட்டெ டுக்கும் கரமும்! மகிழட்டும் படித்திடும் மனமும்!

வாழிய நீ அண்ணா!

# அமெரிக்காவில் அண்ணா

**அமைச்சர் க. இராசாராம்**

67-ல் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வேலையாக ஏழை நடுத்தர மக்களின் தேவைகள் என்னென்ன என்று தேடி ஆராய்ந்து அதை உடனடியாக நிறைவு செய்யும் பணியில் இரவு பகல் பாராது உழைத்தார்கள். சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனின் துன்பங்களை துயரங்களை முடிந்தவரை துடைக்க வேண்டும் என்கிற உணர்வு ஆட்சிக்கு வந்த பிறகு அல்ல— அதற்கு முன்பே இருந்தது. இதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம்.

அந்தக் காலத்தில் நடைபெற்று வந்த தேவி நாடக சபா எனும் நாடகக் கம்பெனி வசூல் இன்றி வறுமையால் தவிக்கும் போதெல்லாம் அண்ணா அவர்களை அழைத்து தலைமை தாங்கச் செய்து அவ்வப்போது ஏற்படும் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும். ஒருமுறை அக்கம்பெனி நீலகிரி மலையின் அடிவாரத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தில் முகாம் செய்திருந்தது. நாடகத்திற்கு வசூல் குறைந்த போது வழக்கம போல் அண்ணா அவர்களை அழைத்திருந்தார்கள்.

சென்னையிலிருந்து அண்ணா அவர்களும் நானும், நண்பர் சி. வி. ராஜகோபாலும் இலட்சிய நடிகர் அவர்களின் பிளைமவுத் காரில் மேட்டுப்பாளையத்துக்குச் சென்றோம். பெரிய கார் ஆனதால் பெட்ரோலுக்கு மட்டும் 200ரூபாய்க்கு மேல் ஆனது.

''ராஜுவிடம் இந்தக் காரை வாங்கிக் கொண்டு வந்தது தவறு. இதற்குப் பெட்ரோல் போடும் பணத்தை நாடகக் கம்பெனிக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும்'' என்று வருந்தினார் அண்ணா.

அந்த நேரத்தில் அண்ணா அவர்களுக்கு உடல் நலக்குறைவு வேறு. அதோடு அவர்கள் பயணம் செய்து நாடகத்திற்குத் தலைமை தாங்கினார். நல்ல வசூல்—ரூபாய் இரண்டாயிரத்துக்கு மேல்! அந்தத் தொகை அந்நாளில் நாடகத்திற்குப் பெரிய வசூலாகக் கருதப்பட்டது

திரும்பும்போது நான் கேட்டேன் 'ஏன் அண்ணா இவ்வளவு சிரமப்பட்டு இத்தனை தூரம் நாடகத்திற்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டீர்கள்?'' என்று

''முடிந்தவரை இதுமாதிரி சின்னஞ்சிறு நாடகங்களுக்கு உதவவேண்டும். இதுபோன்ற கம்பெனிகளுக்கு நாம உதவவில்லையென்றால் நாடகக் கலை அழிந்து போகும்— முத்தமிழும் இருக்காது'' என்றார்

* *

அந்தக்காலத்தில் நாவலர் வரிசையாகக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டு மாதக் கணக்கில் சுற்றுப் பயணம் செய்து திரும்புவார். வந்ததும் அண்ணாவைப் பார்க்க வருவார். ''நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம முடித்துத் திரும்பியிருக்கிறார் கையில் நிறைய வைத்திருப்பார்'' என்று நண்பர்களுடன் அவரை ஓட்டலுக்கு அழைத்துச் சென்று ஸ்பெஷல் உணவு கொண்டு வரச்சொல்லி சாப்பிட்டு விட்டு 'பில்லை' நாவலர் கையில் கொடுத்து விட்டு வந்து விடுவார் அண்ணா. இதுதான் நாவலரிடம் அவர் செய்யும் வேடிக்கை

* *

இன்றைய நமது மேடைகளிலும், சிறப்பு விழாக்களிலும், பிறந்தநாள் விழாவிலும் நடைபெறும் ''கவியரங்கம்'' என்ற நிகழ்ச்சியை முதன் முதலில் கழக மேடையில் அறிமுகப்படுத்தியவர் அண்ணா அவர்கள் தான்.

1959-ல் காரைக்காலில் கழகமாநாடு நடத்த ஏற்பாடு செய்தார்கள். அது கழக மாநாடு என்ற பெயரில் வேண்டாம். ''முத்தமிழ் மாநாடு'' என

மாற்றி அமையுங்கள் என்றார் அண்ணா. அந்த மாநாட்டின் தலைவராக மா. கி. தசரதனும் சிறப்பாளராக நானும் பணியாற்றினோம்.

அண்ணா அவர்களின் யோசனையின் பேரில் கவியரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கவிஞர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற இருந்த கவியரங்கம் அவர் வராததால் கவிஞர் ஆனந்தம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

* *

அண்ணா அவர்கள் வாழ்க்கையில் அவருக்கு முன்பாகவே அவருடைய உருவப்படம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இது மாதிரி திறப்புவிழா நிகழ்ச்சிகளில் விழாவுக்கு உரியவரே கலந்து கொள்ளுதல் தவறில்லை என்பதற்கும் அந்நிகழ்ச்சி உதாரணமாக அமைந்தது.

சேலத்திற்கு அருகில் உள்ள தாரமங்கலத்தில் அண்ணாவின் திரு உருவப் படத்தை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் திறந்து வைத்தார். எப்படி கலைவாணர் சிலையைத் திறந்து வைத்தது தான் அண்ணா அவர்களுக்குக் கடைசிப் பொது நிகழ்ச்சியோ அதுபோலவே அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்ததுதான் கலைவாணர் அவர்களின் கடைசிப் பொது நிகழ்ச்சி.

தாரமங்கலத்தில் அண்ணா படத்தைத் திறந்து வைத்து கலைவாணர் பேசுகையில் 'அண்ணாவுக்கு நான் இரு கடமைகள் செய்யவேண்டும். அதை நான் இன்னும் நிறைவேற்றாது இருக்கிறேன் எப்படியும் இனிவிரைவில் நிறைவேற்றி விடுவேன்'' என்றார்.

கூட்டம் முடிந்து அண்ணா ஓய்வாக இருந்த போது கேட்டேன் "ஏனண்ணா! கலைவாணர் உங்களுக்கு இரு கடமைகள் செய்யவேண்டும் என்கிறாரே; அதுஎன்ன? என்று

"நல்லதம்பி'' படத்திற்கு நான் கதை வசனம் எழுதியதற்குப் பணம் தரவில்லை அடுத்து அவர் வாங்கித் தந்த காரை நான் திரும்பக் கொடுத்து விட்டேன் அதைவிட நல்ல கார் வாங்கித் தருவதாக அடிக்கடி கூறுவார் அதுவாகத்தான் இருக்கும்'' என்றார் அண்ணா

"அப்படியானால் இது இரண்டும் நிறைவேறாது அண்ணா'' என்றேன் நான்

''என்ன அப்படிச் சொல்கிறாய்?'' என்று வியப்போடு கேட்டார் அண்ணா

"காரில் வரும்போது அவர் பட்ட வேதனையை நான்தான் அண்ணா கவனித்தேன் அவர் வயிறு வீங்கியிருந்தது உணவே செரிப்பதில்லையாம் வலி தாங்காமல் காரில் துடித்துக் கொண்டு வந்தார் உங்கள் படத்தைத் திறக்க வேண்டும் என்கிற ஆவலினால்தான் அவர் சென்னையிலிருந்து வேதனையையும் பொருட்படுத்தாது வந்ததாகக் கூறினார்'' என்றேன்

அண்ணா கண்களிலிருந்து கண்ணீர் பன்னீர் முத்துக்களாக உதிர்ந்தது.

'நான் அவரைக் கவனித்ததிலிருந்து சொல்லுகிறேன் இன்னும் ஒரு இருபது நாட்களுக்குத்தான் தாங்குவார் என்று நினைக்கிறேன்'' என்றேன்.

''சொல்லாதே! அப்படி சொல்லாதே!' என்று என்னைக் கண்டித்தார் அண்ணா ஆனால் இயற்கையின் கொடுமையை யாரால் தடுக்க முடியும்? 15-ந்தே நாட்களில் கலைவாணர் காலமானார்

காலம் சில நேரங்களில் ஆச்சரியமான— இப்படியும் நடக்குமா? என்னும்படியான காரியங்களைச் செய்துவிடும் அண்ணா அவர்களின் இறுதிக் கட்டத்திலும்— கலைவாணரின் முடிவு நேரத்திலும் அப்படிப்பட்ட நிலைதான் ஏற்பட்டது

அண்ணாவின் திருவுருவப் படத்தைக் கலைவாணர் நோயின் வேதனையோடு தான் திறந்து வைத்தார்— பின் சில நாட்களில் மறைந்தார் அதேபோன்று கலைவாணர் சிலையைத் திறக்குமுன் அண்ணா வாந்தியெடுத்தார்— மயங்கிய நிலையில் இருந்தார் அந்த நிலையிலும் டாக்டர்கள் சொன்னதையும் மீறி கலைவாணர் சிலையைத் திறந்தார் பின் சில நாட்களில் மறைந்தார்

*

எத்தனை பெரிய பிடிவாதக்காரர்களையும்— மாறுபட்ட கருத்துக்களையும் அண்ணாவின் அமைதியான நடவடிக்கைகளால் வழிக்குக் கொண்டு வந்துவிடுவார்.

ஒருமுறை அண்ணா, இரா. செழியன் எம். பி., நான், வி. பி. ராமன் ஆகியோரும் நாகர்கோயிலில் நடைபெறும் கழக மாநாட்டிற்கு காரில் சென்று கொண்டிருந்தோம். அப்போது பண்டித நேருவுக்குக் கறுப்புக் கொடி பிடிப்பது பற்றிய விவாதம் ஏற்பட்டது. பிடிக்க வேண்டும் என்பது என்னுடைய வாதம். அண்ணாவும் என்னை ஆதரித்துப் பேசினார்.

கூடாது என்பதற்காக செழியனும், வி. பி. ராமனும் கடுமையான வாதங்களைக் கூறி மறுத்து வந்தார்கள் அண்ணு அதற்கான மறுப்புரைகளைக் கூறியும் அவர்கள் இருவரும்— அவர்களின் கருத்திலிருந்து நாகர்கோயில் வரை. பிடிக்கக்கூடாது என்ற முடிவையே வற்புறுத்தி வந்தார்கள்.

மறுநாள் மாநாட்டில் கறுப்புக் கொடி பிடிக்கும் தீர்மானம் நிறைவேறியது

''கறுப்புக் கொடி பிடிக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் இரா. செழியன் எம். பி., வழிமொழிந்தவர் வி. பி. ராான். எதிர்த்தவர்களையே ஏற்றுக்கொள்ளச் செய்வது தான் — அண்ணுவின் ராஜதந்திரம்.

* *

அண்ணுவுக்கு தமிழும் ஆங்கிலமும் தான் தெரியும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவருக்கு தெலுங்கிலும் சொற்பொழிவாற்றத் தெரியும். அதை கேட்டு மகிழும் வாய்ப்பினையும் ஒருமுறை நான் பெற்றேன்.

ஆந்திராவில் உள்ள தெனுலி என்ற பகுதிக்கு அண்ணு அழைக்கப்பட்டிருந்தார்கள். தெனுலி சுதந்திராக் கட்சியைச் சார்ந்த ரங்காவினுடைய ஊர். தெனுலிக்கு அண்ணு அவர்களுடன் நானும், சி. வி. ஆரும், தர்மலிங்கம் எம். பி. யும் சென்றிருந்தோம்.

தெனுலியிலும் அண்ணுவின் பேச்சைக்கேட்க ஆயிரக்கணக்கில் தெலுங்கர்களும் தமிழர்களும் குழுமியிருந்தனர். அண்ணு ஒரு அரைமணி நேரம் ஆந்திரர்கள் கைதட்டி மகிழும் வண்ணம் தெலுங்கில் பேசிவிட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் பேசினுர்.

* *

ஒருமுறை அண்ணு அவர்கள் ஜெய்ப்பூர் யூனிவர்சிட்டி நடத்திய வட்ட மேஜை மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் நானும் உடன் சென்றிருந்தேன் நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளின் தன்மை பற்றியும் ஆராய்ச்சி செய்வதே அந்த மாநாட்டின் நோக்கம்.

அந்த மாநாட்டில் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்களும் இலக்கிய ஆராய்ச்சி செய்தவர்களும் மொழி முதிர்ச்சியாளர்களும் நிறைந்திருந்தனர்

அங்கு போய் அமர்ந்ததும் முதலில் அண்ணுவைப் பேச அழைத்தார்கள் அண்ணு பேச ஆரம்பித்த முதல்வார்த்தையிலேயே மண்டபமே அதிரும்படியான கையொலி எழுந்தது. மிகக்குறைந்த நேரமே பேசினுர் அண்ணு— ஆனல் பேசி முடிந்ததும் அனைவரும் வந்து அண்ணுவின் கையை குலுக்கிப் பாராட்டுத் தெரிவித்தார்கள். தன் பேச்சாற்றலால் சில மணித் துளிகளிலேயே அனைவரையும் கவர்ந்து விட்டார் அண்ணு. கூட்டம் முடிந்த பின்னர் சொற்பொழிவை ரசித்த மாணவர்கள் கூட்டமாக வந்து ராஜஸ்தானில் தி. மு. கழகம் ஆரம்பிக்கிறேம் உதவுவீர்களா? என்றுர்கள்.

''தி. மு. கழகம் வேண்டாம்— ராஜஸ்தான் முன்னேற்றக் கழகம் ஆரம்பியுங்கள் — அதுதான் நல்லது' என்று கூறினுர்.

அன்று இரவு எம். ஏ. பட்டதாரி மாணவர்கள் 500 பேருக்கு தி மு. கழகம் என்ருல் என்ன என்று விளக்குவதற்காக ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அண்ணு ஆங்கிலத்தில் கட்சி வரலாற்றை சுவைபடச் சொல்லிக்கொண்டு வந்தார். திடீரென மின்விளக்கு அணைந்து விட்டது. விளக்கு அணைந்து விட்டதே; மாணவர்கள் இனி அமைதியாக இருந்து கருத்துரை கேட்பார்களா? என்று எண்ணிய போது மாணவர்களில் ஒருவரே மெழுகு வர்த்திகொண்டு வந்து ஏற்றி வைத்துப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

மின்விளக்கு நின்ற பின்னர் மெழுகுத்திரி வெளிச்சத்தில் ஏறத்தாழ இரவு பத்து மணிக்கு மேல் — மீண்டும் ஒன்றரை மணி நேரம் பேசினுர் அண்ணு. அதுவும் தி. மு. கழகத்தின் வளர்ச்சி பற்றி மட்டுமே பேசினுர். அதனை மாணவர்கள் அத்தனை அமைதியாக இருந்து விரும்பி ரசித்துக் கேட்டனர். அந்தச் சொற்பொழிவு என் வாழ்நாளில் நான் கேட்ட மறக்க முடியாத சொற்பொழிவுகளில் ஒன்ருகும்.

* *

அண்ணு அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்த போது ஒருநாள் அங்குள்ள மிகப்பெரிய மியூசியம் ஒன்றுக்குப் போனேம் அங்கு இத்தாலியில் 700ஆண்டுகட்கு முன்னர் இயேசு பற்றி எழுதப்பெற்ற சுவர் ஓவியங்கள் பலவற்றை நேப்பிள்ஸ் நாட்டிலிருந்து கொண்டுவந்து வைத்திருந்தார்கள் அது பல வீடுகளில் எழுதப்பட்ட சித்திரங்கள் ஒருசமயம் புயல் வெள்ளத்தில் வீடுகள் பாதிக்கப்பட்டபோது சித்திரங்கள் கெடாமல் காப்பாற்றி அப்படியே எடுத்து பலநாட்டு மியூசியங்களுக்கும் அதை அனுப்பி இத்தாலி நாட்டுக் கலைப்பெருமையையும், அதே சமயம் கிறிஸ்தவ மதத்தின் சிறப்பையும் சித்தரித்திருந்தார்கள்.

அந்தச் சித்திரங்களைப் பார்ப்பதற்கு மட்டும் ஆளுக்கு ஒருடாலர் (ரூ. 7 – 50)கொடுத்தோம் கலைஆர்வ உணர்ச்சியால் ஏறக்குறைய நூறு படிக்

கட்டுகள் ஏறி அக்காட்சியை ரசித்து ரசித்துப் பார்த்தார் அ ணா! பிறகு சொன்னார்:—

"நம் நாட்டிலும் எவ்வளவோ சித்திரங்கள் வரலாற்றை நினைவூட்டும் ஓவியங்கள் இருக்கின்றன அதையெல்லாம் எடுத்து பெரிய ஏற்பாடுகளைச் செய்து நமது பழைய நாகரீகமும் ப ஊ பாடும் உலகறியச் செய்யவேண்டும்" என்ருர்

மியூசியத்தை விட்டு வெளியேறும்போது அச்சித்திரங்கள் பற்றிய விரிவான தகவலுடைய புத்தகம் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது அதனை இர டு டாலர் கொடுத்து வாங்கினார் அ ணா

"அமெரிக்கா ஒரு புது நாடு, அதனால் பழமையை விரும்புகிறது நமது பழமைகளையும் இத்தாலி நாட்டுக்காரர்கள் செய்துள்ளது போன்று செய்தால் அந்நியச் செலாவணியும் கிடைக்கும் அதோடு நம் நாட்டின் பெருமையும் உயரும். நாம் திரும்பியதும் அதற்கான காரியங்களில் ஈடுபடவேண்டும்" என்ருர் அந்த மியூசியத்திலுள்ள ஒரு தனி இடத்தில் இதுபற்றியே ஒண்ணேகால் மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தோம்

இங்கே திரும்பியதும் அவர் அதனை நினைத்து பார்க்கக் கூட முடியாவண்ணம்இயற்கை அவரை எடுத்துக் கொண்டது

டாக்டர் முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனையுடன் அமெரிக்க மியூசியத்தில் அண்ணா விரும்பிக் கூறியதை இங்கு செயல் படுத்தலாம் என இருக்கிறேன்

*

---



ஈரோட்டுப் பாதை இனியதென் றெண்ணி நடந்தயிவர்
பாரேற்றும் காஞ்சிப் பகலவன் அண்ணா யிடம்பயின்ருர்!
பாரோச்சும் மன்ற உறுப்பினர் ஆகியே பாடுபட்டார்!
தேரோச்சும் ஆரூர்க் கலைஞர்தேர்ந் தார்செங்கோல் சீரணிக்கே!
இசையா ரெனினும் இசைந்திடச் செய்யும் இசையுணர்வில்
இசைந்து புலனைந்தும் ஒன்றிட விட்டின்பம் எய்தும்இவர்
இசைபட வாழ்தமிழ் ஆங்கிலம் ஆம்இவ் விரண்டிலுமே
விசைதரும் பேச்சில் எழுத்தில் திறம்மிகு வித்தகரே!
சேலத்துத் தீஞ்சுவை மாங்கனி போல்எண்ணத் தித்திப்பவர்;
ஞாலத்தைச் சுற்றிஞ் ஞாலத்து ஞானத்தைப் பெற்றிட்டவர்;
ஆலைவாய்க் கன்னல் நிகர்தொழி லாளர் நலத்தமைச்சர்!
பாலைப்போல் நெஞ்சர்—க. ராசாராம்! பார்த்தோர்பண் பாடுவரே!

---

# கண்டதும் கொண்டதும் ஒரே தலைவரைத்தான்!

பேரறிஞர் அண்ணா

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான்!

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார்-நான் அவருடன் இணைந்தபோது! முப்பதாண்டுகளுக்கு முன்பு! அதற்கு முன் முப்பதாண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார். இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்.

திடுக்கிட வைக்கிறாரே!
திகைப்பாக இருக்கிறதே!
எரிச்சலூட்டுகிறாரே!
ஏதேதோ சொலகிறாரே!

என்று கூறியும்,

விட்டுவைக்கக்கூடாது.
ஒழித்துக் கட்டியாக வேண்டும்.
நானே தீர்த்துக் கட்டுகிறேன்

—என்று மிரட்டியும் தமிழகத்திலுள்ளோர் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்' மறுப்புரைத்தனர். ஆனால் அவர் பேச்சைக் கேட்டவண்ணம் இருந்தனர்-மூலையில்நின்றாகிலும்-மறைந்திருந்தாகிலும்! அந்தப் பேச்சு 50 ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது.

எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர்.

கொதித்தவர்கள் அடங்கினர்!
மிரட்டினோர் பணிந்தனர்!
அலட்சியம செய்தோர்
அக்கரை காட்டினர்!

அவருடைய பேச்சோ தங்குதடையின்றி வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது; மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு—காடுகளை கழனி வளம் பெறச் செய்து கொண்டு ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன் அவர் பேச்சு வெளி வந்து கொண்டிருக்கிறது.

அங்கே பேசுகிறார்; இங்கே பேசுகிறார்; அதைக்குறித்து பேசுகிறார்; இது குறித்துப் பேசுகிறார்—என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறி வருகிறது.

மனதில் பட்டதை எடுத்துச் சொல்வேன்—எது நேரிடினும் என்ற உரிமைப் போர் அவருடைய வாழ்வு முழுவதும்; அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருககு மட்டும் கிடைத்திடவில்லை.

இன்று அனைவரும் பெற்றுள்ளனர்—அந்த வெற்றியின் விளைவுகளை!

இந்தத்தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அறிவுப் புரட்சியின் முதல் கட்ட வெற்றி இது!

இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார்!

இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரிது.

பெரியார்—அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும் எந்த வடிவிலே காணப்படினும், எத்துணை பக்க பலத்துடன் வந்திடினும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை.

அவர் கண்ட களம் பலப்பல.
பெற்ற வெற்றிகள் பல.
அவர் தொடுத்த போர்
நடந்தபடி இருக்கிறது.

அவர் வயது 89; ஆனால் போர்க்களத்திலே நிற்கின்றார்.

[தந்தை பெரியார் 89' வது ஆண்டு பிறந்த நாள் 'விடுதலை' மலருக்கு அறிஞர் அண்ணா எழுதியது.]

# அண்ணா ஒரு வேதம்

கவிஞர் கருணாதாசன்

முன்னைமூ வேந்தர்நம் தமிழுக்கு முடிசூட்டி
முச்சங்கம் வைத்துப் போற்ற!
அன்னைநந் தமிழுக்கு அளவற்ற புலவோர்கள்
அணியென்னக் கோடி யாக்க!
கண்ணெனக் காத்ததைக் கடல்கொள்ள; புலவோரைக்
காலமும் கொண்டு செல்ல!
பின்னையோர் தலைவனைப் புலவனைப் பெற்றநம்—
பேறுதான் எங்கள் அண்ணா!

பண்பெனப் பகர்ந்தவை யனைத்தையும் அவன்ஒளிப்
பார்வையில் கண்டு கொள்ள;
அன்பென்ன ஆக்குமென் றறியாத பேரெலாம்
அவன்செயல் கண்டு கொள்ள;
நுண்ணறிவு அறிந்திட நூல்கோடித் தேடாமல்
நொடியினில் புரிந்து கொள்ள;
இன்னதே தலைவனின் இலக்கணம் என்னுமோர்!
இலக்கியம் எங்கள் அண்ணா!

பாவலன் பாட்டிலே ஊட்டிடும் உணர்ச்சியை
பேச்சிலே ஊட்டி நின்று;
காவலன் சட்டத்தில் காணாத கருணையைக்
கடமையில் காட்டி நின்று;
கோவலன் கண்ணகி காலத்து நீதியைக்
கொள்கையில் ஏற்று நின்று
பூவலம் வந்திட்டப் புதியதோர் தலைமுறைப்
புதுமையே எங்கள் அண்ணா!

சமுதாயச் சந்தணம் சமதர்மக் குங்குமம்
சாக்கடை நீரில் வீழ்ந்தும்!
அமுதான காவியப் பண்பெலாம் பொல்லாத
அடிமையென் தீயில் தீய்ந்தும்!
குமுறுத நெஞ்சமே! கோலற்ற தமிழனே!
கொண்டுவீ றெழுக! வென்று
நமதான ஆட்சியில்—நமதான தலைமையின்—
நலம்யாவும் எங்கள் அண்ணா!

தலைமுறைக் கொன்றென இரண்டெனத் தோன்றிய
சரித்திரம் இருந்து என்ன?
விலைமதிப் பில்லாத வீரத்தால் தியாகத்தால்
விருதுள்ள பலரும் என்ன?
மலையன்ன கொள்கைக்குக் கடலன்னப் படைகொண்ட
மாமன்னன் சரிதை காண—
வெளிநாட்டுக் காரரே வரவேற்றுப் போற்றிய
மேதையே எங்கள் அண்ணா!

இருபது ஆண்டாட்சிப் பேரிருள் நீக்கிட
எழுந்தசெங் கதிரவன்போல்!
ஒருபெருஞ் சமுதாயப் பயிர்வாழச் சமயத்தில்
உதவிடுங் கொண்ட லைப்போல்!
முதுபெரும் மொழிகாக்க முடியாத அணிசேர்க்க
முழங்கிடும் முரசமும்போல்!
இதுவரை வாழ்ந்தவன், எம்பிள்ளை தலைமுறை—
ஏற்றமும் எங்கள் அண்ணா!

அறம்பொரு ளின்பமென மூன்றிலும் வள்ளுவன்
அறைந்துள்ள நீதி என்ன?
கடமையுங் கண்ணியங் கட்டுப்பா டெனும் அண்ணன்
கழகத்தின் நீதி யேதான்!
இருவருந் தரும்நீதி மக்களும் மன்னர்போல்
இசைபட வாழ்வ தற்கே—
மறுபடி பிறந்திட்ட மாபெருந் தகையன்ன
வள்ளுவன் எங்கள் அண்ணா!

புத்தனின் முடிவினைத் தவருகக் கொள்வோர்க்கும்
போதனை அமைதி யாக!
சத்தியக் காந்தியின் இலட்சியம் பொய்த்தாலும்
தத்துவம் சாந்தி யாக!
உத்தமர் நபிகளின் ஏசுவின் மொழியாவும்
உலகுய்யச் சொன்ன தாக—
அத்தனை பேர்களின் மொத்தநல் வடிவமே
அறிஞரே எங்கள் அண்ணா!

அளவற்ற சாதனை ஆயிரம் வடிவத்தில்
அரசியல் உலகில் அண்ணா!
கலைமகள் புதுமையாய்க் கொண்டதோர் மகுடமாய்க்
கலையெனும் உலகில் அண்ணா!
நிலவெறி நிறவெறி நீடித்த உலகத்தில்
நித்தமோர் கீத மாகி;
உளவெறி யனைத்தையும் ஒழிக்கும்ஓர் வேதமே—
உலகத்தில் எங்கள் அண்ணா!

இலக்கியத் தேர்ச்சி;
இருந்தமிழ்ப் பாக்கள்
இலக்கணத் தேர்ச்சி;
இருந்தும்-தலைக்கனம்
காண்டற் கரும்கருணா
தாசன்-கவிஞரிவர்
காண்டற் கெளியவர்
காண்!

*

நண்ணத் தகுந்த,
நலஞ்செய் எழுத்தாளர்;
நண்பர்; நவமணி
நாளேட்டில்—எண்ணத்
தகும் செய்தி ஆசிரியர்;
தன் மறுப்புப் பண்பு
மிகும் அன்பர்! சொன்னால்
மிகை!

*

நகைச்சுவை; தத்துவம்;
நாட்டு நடப்பு;
பகல்வேடப் பொய்யர்
பரப்பும்—பகட்டு,
கவர்ச்சி-மயக்கந்தீர்
கட்டுரைகள்: தீட்டல்
கவிஞரிவர்க் கின்பக்
கலை!



# அண்ணு எனக்கும் தலைவரே!

சர். ஏ. ஆர். முதலியார்

62ல் அண்ணுவை காஞ்சிபுரத்தில் தோற்கடித்தார்கள். அதற்கு அவர்கள் கையாண்ட முறைகளைச் சொல்லவும் கூசுகிறது, அதன் விளைவு அண்ணு, மாநிலங்கள் அவைக்குச் சென்ருர். அங்கு அவர் ஆற்றிய முதல் பேச்சே டில்லியை குலுக்கியது. ''தி.மு.க கணிப்பில் கொள்ளத்தக்கதொரு சக்தி'' என்று நேரு தன் தோழர்களிடம் சொன்ஞர். அன்று துவங்கியது அண்ணுவின் ஏற்றம்.

இயற்கையின் அருளால் அண்ணுவின் தலைமையில் இயங்குகின்ற ஒரு நல்ல அரசாங்கத்தை இங்கே பெற்றிருக்கின்ருேம். இல்லா விட்டால் நம்மால் அழிவைத் தவிர்த்திருக்க முடியாது.

அண்ணு என்ன சொன்ன போதிலும் அது குறித்தெல்லாம் கவலைப்படாது மேல் நோக்கிச் செல்வோம், மத்திய அமெரிக்காவில் குமுறி அடங்கி இப்போது கூட புகைகக்கிடாத பழைய எரிமலைகள் உண்டு. அது போல பதவி இழந்தோர் இருக்கின்றனர். அவர்கள் ஏச்சுக்களைப்பறக்கணித்து உறுதியோடும் வலிவோடும் மேல் நோக்கி முன்னேறுவோம்.

காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்த தலைவர் அண்ணு அவர்கள்.

நம் தலைவர் .............. ஆமாம் அண்ணு அவர்கள் உங்களுக்கு மட்டுமல்ல...எனக்கும் தலைவரே: அவருக்கு விதிக்கப்பட்டுள்ள உயர் நிலைமை இன்னும் அவர் அடைந்திட வேண்டும். இந்தியா முழுவதற்கும் பொறுப்பிணை அண்ணு எற்றிடும் அந்நாளைக் காண நான் ஆவல் உள்ளவஞக இருக்கிறேன்.

## சோதனை வாழ்க்கை

அண்ணுவின் பாதை கடுமையாக இருந்தது. சோதனை மிக்க நாட்களை அவர் கடந்து வந்தார். எல்லாவற்றையும் விட்டுத் தனிமையில் அவர் ஒதுங்கிட எண்ணியதுண்டு. ஆனுலும் தனது விடா முயற்சியின் காரணமாக இன்றைய உயர்நிலையை அடைந்துள்ளார். ஆப்ரகாம் லிங்கன் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும் போது அவர், மரக்குடிசையிலிருந்து வெள்ளைமாளிகைக்குச்சென்ருர் என்பர். அது போல அண்ணு வாழ்க்கையும் அமைந்துள்ளது.

தமிழகத்திற்குப் பெருமையும் மதிப்பும் தேடியுள்ள அவர் இதன் மூலம் இதர தென் மாநிலங்களும் மதிப்பைப் பெறச் செய்தார்.

(அண்ணு சிலை திறப்பு விழாவில்.)

# எந்நாளும் நிலைத்திருக்கும் அண்ணுவின் திருப்பெயர்

முரசொலி மாறன் எம். பி.

அறிஞர் அண்ணு ஒரு கட்சியின் நிறுவனர்; ஒரு மாநிலத்தின் முதல்வர்-இவ்வளவுதானு அவரது பெருமை? இவைகளுக்காகவா இத்தனைப் பாராட்டு? அல்ல; அல்ல! அறிஞர் அண்ணு, "இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தமிழர்!" அறிஞர் அண்ணு தமிழ் சொற்ருெடர் அமைப்பிலே ஒரு பதிய நடை கண்டு எழுத்துத் தமிழுக்கு ஏற்றம் தேடியவர், எனவே அறிஞர் அண்ணுவின் பெயர் தமிழ் எழுத்து உள்ள வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணு மேடைப் பேச்சிலே ஒரு புதிய அமைப்புக் கண்டு பேச்சுத் தமிழுக்கு பெருமை சேர்த்தவர். எனவே அண்ணுவின் பெயர் தமிழ்ப் பேச்சு உள்ள வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணு, திரை நாடகத் துறைகளிலே மறுமலர்ச்சிக்கு வித்திட்டு நாடகத்தமிழுக்கு ஏற்றம் தந்தவர். எனவே அண்ணுவின் பெயர் நாடகத் தமிழ் உள்ள வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணு நடிப்புக் கலைக்கு அதற்குரிய கண்ணியத்தை மீட்டுத் தந்து பெருமை சேர்த்தவர்; எனவே அண்ணுவின் பெயர் நடிப்புக்கலை உள்ள வரை நிலைத்திருக்கும்.

இவை அனைத்திற்கும் மேலாக- அறிஞர் அண்ணு உலகெங்கிலுமுள்ள தமிழினத்தோரின் தனித்தன்மையை அறிவுறுத்தி அவர்கள் தலைநிமிர்ந்து நடக்க வழி வகுத்தவர்; எனவே அண்ணுவின் பெயர் தமிழினமும் தமிழ் மொழியும் உள்ள வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணு 'கடமை, கண்ணியம் கட்டுப்பாடு,' என்னும் செயல் முறையை வாழ்க்கைமுறையாகக் காட்டியவர்; எனவே அண்ணுவின் பெயர் உலகில் இக்குணங்கள் மதிக்கப்படும் வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணு ஆளப்படுவோர்க்கும் ஆள்வோருக்கும் இடையே இருந்த இடைவெளியை இல்லாமல் செய்த ஒப்பற்ற ஜனநாயகவாதி. எனவே, அண்ணுவின் பெயர் உலகில் ஜனநாயகம் உள்ள வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணு உலகிலேயே முதன் முறையாகக் குடும்பப் பாச உணர்வை அரசியலில் ஊட்டியவர்: எனவே அண்ணவின் பெயர் பாச உணர்ச்சி மனிதனுல் மதிக்கப்படும் வரை நிலைத்திருக்கும்.

(அறிஞர் அண்ணு 61-மலரிலிருந்து)

# இதுதான் அண்ணாயிசமா?



அமைச்சர்: டாக்டர் நாவலர்

பழைய கால சங்கப் புலவர்கள் இலக்கியத்தில் எழுதி வைத்துள்ளதைப் போன்ற பெருநாளாக அண்ணா விழா கொண்டாடப்படுவது பொருத்தமாக உள்ளது.

பிறந்த நாள் எல்லோருக்குமே வரும். அது பல பேருக்கு எப்பொழுது வருகிறது என்று தெரிவதே இல்லை சிலர் ஏன் வருகின்றது என்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர் இவன் ஏன் பிறந்தான் என்றும் அவனுடைய பிறந்த நாளின்போது பேசுகிறார்கள். நான் ஏன் பிறந்தேன் என்றும் ஒரு சிலர் கேட்டுக் கொள்கிறார்கள்.

விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலருடைய பிறந்த நாளைத்தான் உலகம் நினைவில் வைத்துக் கொண்டு இருக்கிறது.

அண்ணாவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்படுவது சமூகத்தின் மதிப்பீடு; யார் மக்களின் இதயத்தில் இடம் பெற்று இருக்கிறார்களோ அவர்களுடைய பிறந்த நாள்தான் கொண்டாடப்படுகிறது.

இதயத்தில் இடம் பெறுவது கடினம்: பணம் பதவி கூட வந்துவிடும். பாமர மக்கள் பணக்காரர்களாக மாறிவிடலாம். செல்வர்கள் ஏழைகளாக மாறிவிடலாம். அன்னக் காவடிகள் தங்கக் காவடிகளாக மாறலாம். நாட்டின் அதிகாரத்தைக் கூடக் கைப்பற்றி விடலாம். மற்றவர்கள் இதயத்தில் இடம் பெறுவது மட்டும் மிகவும் அரிது.

அந்த வகையிலே அண்ணா தமிழக மக்களின் இதயத்தில் இடம் பெற்றார்: அண்ணா ஒரு தனி மனிதனாக இருக்காமல் ஒரு ஆற்றலாக, அறிவுக் களஞ்சியமாக, கருத்துக் கருவூலமாக விளங்கினார்.

மற்றவர்களை எல்லாம் ஈர்க்கும் குணம் படைத்தவராக இருந்தார். அரசியல் பொருளாதாரத்தில் அவருடைய பேச்சும் எழுத்தும் வலுவு ஏற்படுத்தி வீழ்ச்சி அடைந்த தமிழகத்தை எழுச்சி பெறச் செய்தது. ஜனநாயக முறை வளர்ந்ததைவிட ஜனநாயகப் பண்பு வளர வேண்டும் என்றார் அண்ணா ஒவ்வொரு வரும் கருத்தில் வேறுபடலாம். கொள்கையில் வேறுபடலாம். மனிதனை மனிதன் மதிக்காமல் இருப்பதை மாற்றி மதிக்கக் கற்றுத் தந்த நாகரீக அரசியல்வாதி அவர். ''போராட்டத்தைக்கண்டு பயப்படவும் மாட்டேன். அது அப்படி நிகழ நேர்ந்தாலும் எங்கும் ஓடி ஒளிய மாட்டேன்'' என்றார் அண்ணா.

எம். ஜி. ஆர். தன் கட்சிக் கொடியில் அண்ணாவின் படத்தைப் போட்டு அண்ணாவையே பறக்க விட்டு விட்டார். அந்த கொடி கிழிய, கிழிய அண்ணாவின் உருவமும் சிதைந்து கீழே விழுந்து காலால் மிதிபட்டுச் சிதையும் அளவிற்கு அவமானத்தை. இழுக்கை அண்ணாவிற்கு ஏற்படுத்தி இருக்கிறார்.

அவர் உருவம் கிழியலாமா? அவர் படம் கிழியலாமா? இதுவா இவர் அண்ணா மீது காட்டும் பாசம்.

இந்தியாவில் உள்ள பற்பல மாநிலங்களில் குழப்பமான ஆட்சி நடைபெற்று வருகிறது.

ஆனால் தமிழகத்தில் மட்டும் எதிர் கட்சியாக இருந்த ஒரே கட்சி ஆட்சிக்கு வந்து சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறது.

அண்ணா ஆரம்பித்த கழகத்தை—ஆட்சியை ஒழிப்பதுதான், அண்ணாயிசமா?

நாங்கள் கருத்துக்களை சிறந்த கொள்கைகளை வைத்து அரசியல் நடத்துகிறோம். ஒரு தனி மனிதனின் கவர்ச்சியை வைத்து அரசியல் நடத்தவில்லை. அது அவருடன் இன்னும் கொஞ்ச நாளில் போய்விடும். எனக்கும் கலைஞருக்கும் வழிகாட்டியும் தலைவரும் அண்ணாதான். நெடுஞ்செழியன் இறந்தாலும் இந்தக் கழகத்திற்கு வழிகாட்டி அண்ணாதான். திரளாக என் எதிரில் உட்கார்ந்திருக்கிற உங்களுக்கும் வழிகாட்டி நானோ கலைஞரோ அல்ல. அண்ணாதான் வழிகாட்டி. அண்ணா இல்லாமல் கழகம் இல்லை. கழகம் இல்லாமல் அண்ணா உண்டு. அவருடைய அறிவும் ஆற்றலும், எழுத்தும் பேச்சும் எல்லோர் இதயத்திலும் இடம் பெற்று இருக்கிறது.

நெடுஞ்செழியன் கழகத்தில் இருந்தால் அவருக்குதான் மதிப்பு. நான் இல்லை என்று லும் கழகம் உண்டு. கடசிதான் முக்கியமே தவிர, அதில் இருக்கின்ற ஆள் முக்கியமல்ல. நானே இந்தக் கட்சியை விட்டுப் போனாலும்கூட கட்சியை யாராலும் அசைக்க முடியாது.

---

பாவேந்தர் எனப்பேர் பெற்ற
பாரதி தாசன் பாக்கள்,
நாவேந்தி நாட்டில் நாளும்
மக்கள்தம் சிந்தை தன்னில்
பூவேந்தும் தேனுய்ப் பாய்ச்சிப்
பொற்புறும் பணியைச் செய்த
நாவேந்தர் நாவ லர்—நம்
நெடுஞ்செழி யன்தான் என்பர்!

ஆரியப் படைக டந்த
நெடுஞ்செழி யனைப்போல் தோற்றம்!
நேரிய நடத்தை! வெள்ளை
நெஞ்சொடு சொல்லில் வாய்மை!
மாரிதான் இலக்கி யச்சொற்
பொழிவினில்! கல்வி வல்லார்!
பேரறி வாளர், அண்ணா
சுவடுபின் பற்றும் தம்பி!

---

(சென்னை பல்கலைக் கழகத்தில் பெரியார் படத்தைத் திறந்துவைத்துபேசிய அமைச்சர் க. ராசாராம் குறிப்பிட்டது).

நமது அறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடன் இருந்து தொண்டாற்றியவர் என்பதை அனைவரும் அறிவார்கள். அண்ணா அவர்கள் அய்யா அவர்களின் கொள்கையினை லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு தமக்குக் கிடைத்த முதல்வர் பதவியை ஒரு சாதனமாகக் கருதி ஆட்சி பீடத்தில் அமர்ந்து இருந்தார்.

## உதறிவிட்டு வரட்டுமா?

ஒரு சமயம் அய்யா அவர்களுடன் அண்ணா அவர்கள் தாம் முதலமைச்சர் ஆன பிறகு நாகரசம்பட்டி என்ற ஊரிலே பள்ளிக்கூட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்:

“அய்யா அவர்களே நீங்கள் செல்லுகின்ற வேகத்திற்கு என்னாலே வர முடியவில்லை. காரணம் நான் வகிக்கும் பதவி அப்படி என்பதை தாங்கள் அறிவீர்கள்.

நான் இங்கேயே இருந்து தங்கள் பணியினை செய்யட்டுமா? அல்லது இதனை உதறித் தள்ளிவிட்டு உங்களோடு வந்து சுதந்திரமாக பணியாற்றட்டுமா” என்று கேட்டார்.

உடனே அய்யா அவர்கள் “வேண்டாம், வேண்டாம். நீங்கள் அங்கேயே இருங்கள். அங்கேயே இருந்து எனது பணியை நீங்கள் செய்யுங்கள். நான் வெளியே இருந்து நீங்கள் செய்யவேண்டிய பணியைச் செய்கின்றேன்” என்று சொன்னார்கள்.

---

# பூம்பாதம் போற்றுகின்றோம்

புலவர் வா. மு. சேதுராமன்

ஆயிரம் ஆண்டு காலம்
நோற்றதால் தமிழ் ஆம் ஞானத்
தாயவள் ஈன்றுள் அன்பும்
அறிவும் சேர் அண்ணா உன்னை!
தாயவள் மாட்சி ஆட்சி
தாரெலாம் கமழ வைத்தாய்!
ஓயாது வையம் ஓங்கி
உளவரை உன்பேர் வாழும்!

தமிழ்வாழ தமிழர் வாழ
நீகண்டு தந்து சென்ற
தமிழ் ஆட்சி கவிழ்க்கப் பார்க்கும்
தலையிலார் போட்டி யிந்நாள்?

உமிழ்ஒளிக் கதிர்போல் உன்றன்
உயிர்க்கதிர் எங்க ளுக்குள்
கமழ்வதால் கவிழா வண்ணம்
காலமும் காத்து நிற்போம்!


தீங்கனி கண்டு பாகு
திகழ்சத்துப் பருப்பும் சேர்ந்த
பூந்தேனைப் போலும் எங்கள்
புலன்களில் உயிர்ச்சொல் வார்த்து
மாந்தராய் ஆக்கி எம்மை
உயர்த்திஎம் உயிரில் வாழ்நின்
பூம்பாதம் போற்று கின்றோம்
ஐம்பொறி செயல்இ ணைத்தே!

---

எனதுபணி என்றும் தமிழ்ப்பணிதான் என்றே
இனிதுபணி செய்புலவர் ஏறு—தனக்கினிமை
செந்தமிழ்த் தொண்டென்னும் சேதுரா மன்—தொண்டு
நந்தமிழ்க்குச் சேர்க்கும் நலம்!

---

# அறிவுக்கு விருந்தளித்த அண்ணா



"மயிலை சீனி வேங்கடசாமி"

பகுத்தறிவு இயக்கத்தையும் சுயமரியாதை இயக்கத்தையும் தோற்றுவித்து தமிழ் மக்களின் சிந்தனையைச் சொற்பொழிவுகள் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் பிரசாரஞ் செய்தவர் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள். அவர் வளர்த்த அந்த இயக்கங்கள் நாட்டில் பரவி வளர்ந்தன. அந்தக் காலத்தில் பல தொண்டர்கள் அந்த இயக்கங்களில் சேர்ந்து பிரசாரஞ் செய்தார்கள். அந்தக் காலத்திலே மாணவராக இருந்த சி. என். அண்ணாதுரை, கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு இந்த இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார். குடியரசு விடுதலை பத்திரிகைகளின் ஆசிரியராக அமர்ந்து கட்டுரைகளை எழுதியதோடமையாமல் எழுச்சிமிக்க சொற்பொழிவுகளைச் செய்து இயக்கத்தை வளர்த்தார். அவருடைய வளமான எழுத்தாற்றலையும் செயலாற்றலையும் அறிஞர்கள் வியந்து போற்றினார்கள். அதனால், சி. என். அண்ணாத்துரை என்னும் பெயர் மறைந்து அறிஞர் அண்ணா என்னும் பெயர் நிலைத்தது.

அறிஞர் அண்ணாவின் பேச்சுகளும் எழுத்துகளும் பகுத்தறிவை வளர்த்தன. அறிவுக்கும் சிந்தனைக்கும் எழுச்சியையுண்டாக்கின. அந்த காலத்தில் சென்னைமாகாண ஆட்சியை ஏற்று நடத்தின இராஜாஜி அவர்கள் 1937-ல் பாடசாலைகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார். அப்போது பெரியார், ஈ. வே. ரா. அவர்களும் அறிஞர் அண்ணாவும் மற்றும் தலைவர்கள் எல்லோரும் கட்டாய இந்தியை எதிர்த்துக் கடுமையாகத் தாக்கினார்கள். இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவெடுத்து நாட்டில் தீவிரமாகப் பரவிற்று. நாள்தோறும் பொதுக் கூட்டங்களில் தலைவர்கள் கட்டாய இந்தி கூடாது என்பதை விளக்கி அதைக் கண்டித்துப் பேசினார்கள் அக்கூட்டங்களில் அறிஞர் அண்ணாவும் ஒய்வு ஒச்சல் இல்லாமல் பேசினார். அவருடைய பேச்சுகள் மக்கள் மனத்தைக் கவர்ந்து ஈர்த்தன. கட்டாய இந்தித் திணிப்பு ஒய்ந்தது.

1942-ல் திராவிடக்கழகம் தோன்றியது. இந்த கழகத்தின் நோக்கங்களைப்பற்றி அறிஞர் அண்ணாவும் பலப்பல கூட்டங்களில் விளக்கிப் பேசினார். அவருடைய முழக்கம் பாமரர் பண்டிதர் முதலான எலலோருடைய உள்ளங்களையும் கவர்ந்தன. அதுமட்டுமன்று, மாணவர்களுடைய மனத்தையும் ஈர்த்தது. 1943 முதல் கல்லூரி மாணவர்கள் அவரைக்கல்லூரிகளில் அழைத்து அவருடைய சொற்பொழிவுகளை ஆர்வத்தோடு கேட்டார்கள். அண்ணாவின் பேச்சுகள் வழக்கம்போல ஆழமான கருத்துக்களைக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் சுவையுள்ளனவாகவும் இருந்தன. அவருடைய சொல் விருந்துகள் மனதுக்குத் தெவிட்டாத இனிமையுள்ளனவாக இருந்தன. சொந்தக்கட்சிக்காரர்கள் மட்டுமல்ல மற்றக் கட்சிக்காரர்களும் வந்து அண்ணாவின் அறிவு விருந்தைச் சுவைத்து ரசித்தனர். கேட்டு மகிழ்ந்தவர்கள் மெச்சிப் புகழ்ந்ததைக் கேட்டு, கேளாதவர்களும் அவருடைய சொற்பொழிவைக் கேட்டு வந்தார்கள்.

கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க்கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்

என்னும் குறள் மொழிக்கேற்ப அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள் கேட்டாரைக் கவர்ந்து கேளாதாரையும் ஈர்த்தன. அவருடைய சொற்பொழிவுகள் தெவிட்டாமல் மேலும் மேலும் கேட்பதற்கு விருப்பத்தையுண்டாக்கின. இவ்வாறு அறிஞர் அண்ணா தமிழைப் புதுச் சுவையுள்ளதாக வளர்த்தார். அவருடைய பேச்சு நடையைப் பின்பற்றிப் பல மாணவர்கள் பேசத் தொடங்கினார்கள்.

17-9-1949ல் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவினார். தி.மு.க வைச் சேர்ந்தவர்களும் அண்ணாவைப் போல் பேச்சுத்திறமையுள்ளவர்களாகத் திகழ்ந்தனர். அண்ணாவைப்போல ஆற்றலும் வலிமையும் சுவையும் உள்ளனவாகப் பேசத் தொடங்கினார்கள். தி.மு.க. வின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் வெற்றிக்கும் காரணமாக இருந்தவை அக்கழகத்தாருடைய பேச்சுத்திறமையும் சொல் வன்மையும் ஆகும்.

திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இவைகளின் தமிழ் மொழித் தொண்டுகளைப் பாராட்டி அயல் நாட்டறிஞர்களும் எழுதியுள்ளனர்.

"But the last two dedades in particular have witnessed a significant change. The Dravidian movement, and especially the D. M. K., has contributed profusely (if not richly) to modern Tamil Literature. Many of the leaders of the D. M. K. which was (and still is to a large extent) a non-Brahmin movement, are popular literary figures. Among other things, they have sought to restore to the Tamil language its pristine vigour by eliminating from it what they consider to be superflous Sanskritic accretions. Quite apart from their literary merits, the writings of authors such as Annadurai and Karunanidhi (both top leaders of the D. M. K.) have a very wide social appeal.

The influence of creative literary writers and also of Journalists is, on the whole, diffuse; this is true of even such committed political writers as Karunanidhi and Annadurai".

Page 237, India and Ceylon: Unity and Diversity, Edited by Philip Mason. 1967.

துர்க்கிஷ்ட வசமாக அறிஞர் அண்ணா மறைந்துவிட்டார். அவருடைய ஆற்றல் மிக்க சுவையுள்ள இனிய அறிவு விருந்தை நாம் பெற முடியாமல் இருக்கிறோம். அவருடைய உடம்பு மறைந்துவிட்டாலும் அவருடைய புகழ் உலவிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணாவின் பெயரையும் புகழையும் சிறப்பையும் உயர்வையும் என்றென்றும் நிலைக்கச் செய்தவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள். சென்னை நகரத்தின் நல்லதோரிடத்திலே, அழகான சென்னைக் கடற்கரையிலே, தூய கூவம் ஆறு கடலில் கலக்கிற புகர் முகத்துக்கு அருகிலே புகழ் பெற்ற சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கு எதிரிலே அறிஞர் அண்ணாவின் சமாதியை நிறுவி அங்கு அழகான நினைவுச் சின்னத்தையும் சூழலையும் அமைத்த தனித் திறமையும் பெருமையும் கலைஞர் கருணாநிதிக்கேயுரியதாகும். எண்ணிப்பாருங்கள். அறிஞர் அண்ணாவின் உடம்பை எங்கோ ஒரு மயானத்தில் அடக்கஞ்செய்து அங்கு என்ன தான் பெருமையுள்ள கட்டடங்களை அமைத்தாலும், இந்த கடற்கரைச் சின்னம்போல் சிறந்து விளங்குமா? கடற்கரையிலே அண்ணாவின் சமாதியும் நினைவுச் சின்னமும் அமைந்திருப்பது தனிப்பெருஞ் சிறப்பாகும். தமிழகத்துக்கப்பாலுள்ள வெளிநாடுகளிலிருந்தும் பிற தேசங்களிலிருந்தும் சென்னை நகரத்துக்கு வருகிறவர்கள், உலகப் புகழ்பெற்ற சென்னை கடற்கரையைப் பார்க்க வரும்போது அறிஞர் அண்ணாவின் நினைவுச் சின்னத்தைக் காணமற் போகமுடியாது. அண்ணாவின் நினைவுச்சின்னம் அவருக்குத் தகுதியான நல்லதோர் நினைவுச் சின்னமாகும். அதை அமைத்த பெருமை தி. மு. கவுக்கும் சிறப்பாக அதன் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதிக்கும் உரியதாகும். அந்த இடத்தில் அறிஞர் அண்ணாவின் பெயரால் நல்லதோர் நூல் நிலையம் அமைய இருக்கிறது என்பதை அறிகிறோம். அது விரைவில் செயற்படவேண்டும் என்று விழைகிறோம்.

---

பாங்குற தமிழைக் கற்றப்
பண்பாளர்—மயிலை. சீனி.
வேங்கட சாமி! கற்றத்
தமிழினல் தமிழின் மேன்மை
ஓங்கிட பலநூல் செய்தே
ஒப்பரும் பணிசெய் இன்னார்
தூங்கிடும் போதும் காணும்
கனவிலும் தமிழ்க்குத் தொண்டாம்!

---

திராவிட முன்னேற்றக் கழகம்

தி. மு கழகம் கண்ணீரோடு பிறந்தது! ஆகவே சாகிறநேரத்தில் அது நிச்சயம் சிரித்துக்கொண்டேதான் சாகும்!

சாகும் என்றால் தன்னுடைய இலட்சியத்தில் முழு வெற்றி கண்டபின்பேதான் சாகும்!

—அறிஞர் அண்ணா

# கலைஞரில் உம்மைக் காண்கிறோம் அண்ணா

கவிஞர் ஆனந்தம்

அருள்சுரக்கும் அண்ணா நின் முகத்தைப் பார்த்தோர்,
அந்தோநீ எங்கேயோ சென்ற தாகப்
பொருள் தெரியா தெண்ணியுள்ளார், புரியா மாந்தர்!
புன்னகையால் எதிரிகளை வெல்லும் உன்றன்
மருள்விரட்டும் கண்ணொளியைக் கண்டோர், நீயோ
மௌனமாகக் கண்மூடி விட்ட தாக
இருள்நிறைக்கும் கருத்துக்கள் பரப்பு கின்றார்!
என்செய்வோம் எள்ளிநகை யாட லன்றி?

எங்கேனும் குறையிருப்ப தாகக் கூறி
ஏழையர்கள் கோரிக்கை எழுப்பி வந்தால்—
அங்கேநின் கருணையுள்ளம் முன்னே தோன்றி
ஆள்கின்ற வழித்தோன்றல் கலைஞர் மூலம்
பொங்கிவரக் காண்கின்றோம்! புனித நெஞ்சம்
பொல்லாங்கு தவிர்த்திடவே முனைதல் கண்டோம்!
இங்கெல்லாம் நீஇருத்தல் உணர்கின் றோமே;
ஏன்நம்மை எதிப்பவர்கள் உணர்வதில்லை?

தன்னாட்சி பெற்றிடுக தமிழ்நா டென்று
தாக்கீது பிறப்பித்தாய்! தம்பி மார்கள்
உன்னை சிரமேற்றுக் கொள்கை மேவ
உலகத்து மன்றத்தில் வைத்து விட்டார்!
என்னாகும்? இனிதாக நிறைவே றும்நாள்
இனியதிகத் தொலைவில்லை; நமபு கின்றோம்!
பொன்னான புத்துலகு படைத்துத் தந்தே
புலனணுவிற் புகுந்திருக்கும் உயிரே; வாழ்க!

---

எண்சீர் எனில்சீராய் எண்ணுக என்றும் பொருள்கொளலாம்;
எண்சீர் எனில்எண்ணம் சீரான தென்றும் பொருள்கொளலாம்;
பண்சேர் பயன்சேர் கவிதைப் படைப்புகள் பார்த்திடுங்கால்
எண்சீர் விருத்தம் வரின்அதில் தோன்றலே ஆனந்தமே!

இகம்பரம் பற்றி கவிதை இவர் ஏதும் பாடவில்லை!
அகம்புறம் சீரபட ஆயிரம் பாடல்கள் ஆக்கியுள்ளார்!
தொகைக்தொகை யாம்! அக் கவிதை 'சுடர்ஒளிக் கா'டெனவே
திகைத்தெண் டிசையும் புகழும் கலைஞரே செப்பினரே!

"பெருமை பெறுகிறேன் நானிந்த நண்பரைப் பெற்றதனால்;
'அருமருந் தாகும்' கவிஞர்ஆ னந்தம் கவிதைக"ளென்
றருமை மிகும்அண்ணா தந்தார் அணிந்துரை வேறெதற்கு?
அருமைக் கவிஞரிந் நாள்தந்த தாம் 'அண்ணா காவியமே'!

---

# உருவத்தால் மறைந்தார் உள்ளத்தில் நிறைந்தார்...

அமைச்சர் செ. மாதவன்

நாட்டுப் பற்றை மறந்து கிடந்த இந்திய மக்களை எழுச்சி பெறச் செய்தார் உத்தமர் காந்தியடிகள். தாய் மொழிப்பற்றை மறந்து, தமிழ்ப் பண்பாட்டைப் புறக்கணித்து தாழ்வுற்றுக்கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார் அண்ணா அவர்கள். தன்மானமிக்க தமிழரின் தரணி போற்றும் பண்டையப் பெருமையினை மறந்து நின்ற தமிழர் கூட்டத்தை பொங்கி எழச் செய்தார். தமிழனின் கடமையை உணர்த்தினார். தாய்மொழிப் பற்று கொண்ட தமிழர் தலை நிமிர்ந்து நடந்தனர். சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த மூடப் பழக்க வழக்கங்களைச் சாடினார். புதுமை எண்ணங்களைத் தோற்றுவித்தார். புதிய ஆட்சிக்கான மக்கள் சக்தியை குறுகிய காலத்தில் தம் பக்கம் திருப்பி புதிய வரலாற்றை உருவாக்கினார். தமிழகத்தில் மக்களுக்கு நிறைவுதரும் மக்களாட்சி மலர்ந்தது. மூதறிஞர் அண்ணா, முதலமைச்சர் அண்ணாவானார்.

தனித்த ஒரு மனிதர் சமுதாயச் சீர்திருத்த இயக்கம் ஒன்றைத் தொடங்கி, அதை அரசியல் இயக்கமாக மாற்றி, குறுகிய காலத்திலே அதற்கு ஆட்சியுரிமையைக் கிடைக்கச் செய்தார் என்பது அரசியல் வரலாற்றிலே ஒரு புதுமையாகும். அப்புதுமையை நிகழ்த்தியவர் அண்ணா அவர்கள்.

தமிழ்த் தலைவனின் தகைமை கண்டு இந்திய நாடு வியந்தது. ஏன் உலகமே போற்றியது. இதனால் வீழ்ந்துகிடந்த தமிழன் வீறு கொண்டு எழுந்தான்: தாழ்ந்து நின்ற தமிழன் தலைநிமிர்ந்து நடந்தான், தமிழ்நாடு தனக்குள்ள பெயரைப் பெற்றது; தமிழன் தனக்குள்ள புகழைப் பெற்றான். வடபுலத் தலைவர்கள் அண்ணாவிடத்தில் கொண்டிருந்த அன்பினை பெரு மதிப்பினை காணும் வாய்ப்புகள் பல! அண்ணாவின் நலம் கேட்கும் நாட்டின் பெரும் தலைவர்கள் உள்ளமெல்லாம் குடியிருந்து குணக்குன்றாகி விட்டார். உலகமெல்லாம் தமிழ் நாட்டின் பெருமையை உணர்த்திவிட்டு மறைந்து விட்டார்.

தமிழ்ச் சமுதாயத்தின் இதய வீணையை இசைத்தவர் அண்ணா. அந்த இசை அவரது எழுத்திலே எழுந்து, உரையிலே ஒலித்தது.

தமிழனின் பண்பும், பரிவும், அன்பும், அருளும் இசையாக ஒலித்தன. அந்த இசையினால் இன்பமடைந்தவர் பலர்; ஏற்றமடைந்தவர் எண்ணற்றோர். நம் அனைவர் உள்ளங்களையும் உயர்த்தியது அந்த இசை.

அண்ணா அவர்களின் அடிகளில் அமர்ந்து அரசியல் பயிற்சி பெற்றேன். அரசியல் பிரச்னைகளையும் நிர்வாகப் பிரச்னைகளையும் அவர் அணுகும் விதமே தனிப்பட்டது. சுவையான விவாதங்கள் தொடரும். சிந்தனையெல்லாம், செயலெல்லாம் மக்கள் நலம்பெற அமையவேண்டும் என்று விரும்பினார். ஏழைகளின் துயரம் கண்டால் அவர் நெஞ்சம் இளகிவிடும். கீழவெண்மணி சோக நிகழ்ச்சி அண்ணாவை, ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டது, தமது உடல் நோயையும் மறந்து அவர் உள்ளம் வெதும்பினார். ஏழை மக்களின் குடிசைகளை எரித்த தீயின் வெப்பம் அவரது இதயத்தை வாட்டியது. வேலையிழந்த தொழிலாளர்களின் வேதனை வேலாகப் பாய்ந்தது அவரது நெஞ்சில்.

பதவியை, அதிகாரத்தை வெறுத்து பணியைத் தொடர்ந்தவர். அடக்கு முறை பலாத்காரம் வேம்பாகக் கசந்தது ஆட்சித் தலைவனுக்கு. தம் அரசால் ஒருவருக்கும் ஒரு துளியும் ஒருகணமேனும் துன்பம் விளைவதை பொறுக்காது அல்லலுற்ற அண்ணாவின் தோற்றங்கள் நெஞ்சில் நிறைந்துள்ளன. தொழிலாளர் பிரச்னைகளைச் சந்திக்கும்போது அவர் அடைந்த வேதனை—தனது உடல் நோயையும் மறந்து மணிக்கணக்காக தொழிலாளர்களது உரிமைக்காக வாதாடிய காட்சிகள் என்னால் மறக்க முடியாதவை. 'சட்டப் பிரச்னையாக அணுகாதே—மனிதாபிமானப் பிரச்னையாக எண்ணிச் செயல்படு! வேகம் வேண்டும்—விவேகம் வேண்டும்' என்று தந்த அறிவுரைகள் ஏராளம்.

இளைஞனை என்மீது அண்ணா காட்டிய அன்பும், பரிவும் என்னை ஆட்கொண்டுவிட்டன. தவழும் குழந்தை தாயின் அரவணைப்பிலே பெறுகின்றதே அந்த இன்ப உணர்வினை அண்ணாவின் அரவணைப்பிலே நான் பெற்றேன். நள்ளிரவானாலும், தூக்கத்தில் இருந்தாலும் பிரச்சினைகளை வாதிக்க வா என்று அழைப்பாரே; பிழை செய்தோரையும். மனம் புண்படாது நடத்து என்பாரே; "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன

பயத்ததோ சால்பு'' என்ற வள்ளுவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தாரே! அவரையும், அவரது ஏற்றமிகு தோற்றத்தையும், இன் முகத்தையும் இனி காண முடியாது என்று எண்ணும்போது எல்லாம் ஏக்கமும் இதய வேதனையும் பிறக்கின்றன.

அண்ணாவைப் போன்ற அருந்தலைவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் தோன்றமுடியும். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் நம் தலைமுறையினருக்குத் தனிப்பெருமை. விளக்கு அணைந்தால் வீடு இருளடைகிறது; நல்லவர் மறைந்தால் நாடு இருளடைகிறது. அண்ணா அவர்கள் வெறும விளக்காக விளங்கவில்லை; அறிவு விளக்காகத் திகழ்ந்தார். எனவே, விளக்கு அணைந்தாலும், ஒளி மறைவதற்கில்லை, இருள் லருதவற்கில்லை. அவர் உரைத்துச் சென்ற கருத்தோவியங்களும், நல்லுரைகளும் நம் உள்ளத்தை உயர்த்தி ஒளியைப் பரப்புகின்றன நம் நெஞ்சங்களிலே அவரது நினைவு ஒளி நிலையாக நின்றுவிட்டால் இருளுக்கும் மருளுக்கும் இடமே இல்லை.

அரசியல் நாகரிகம் — அண்ணா அவர்கள் தமிழக அரசியலுக்குத் தந்துசென்ற பெரும் செல்வம். பகை கககுவோர்களும் பரிவோடு பாராட்டும் பண்பட்ட அரசியலை தோற்றுவித்தார். அரசியல் கட்சிகளுக்கு அப்பாலே நாடு, மொழி, சமுதாயம் என்ற எண்ணங்கள் உருவாக வேண்டுமென்று விரும்பினர். ஒற்றுமை. யின்மையால் சிதைந்துபட்ட தமிழினத்தின் வரலாற்றை ஒருபோதும் மறக்காத உத்தமத் தலைவராக விளங்கினார். அந்த அருமந்த தலைவரின் பூத உடல் மண்ணிலே புதைந்துவிட்டது ஆனல் அவரது புகழுடல் விண்ணளாவி நிற்கிறது; கண்ணுக்கு மறைந்த அவர், நம் கருத்திலே பதிந்து விட்டார்: உருவத்தில் மறைந்த அவர், நம் உள்ளத்தில் நிறைந்துவிட்டார்.

அண்ணனின் அறிவொளி நம்மை நடத்திச் சென்றது. நம் இருளையெல்லாம் மறைத்துச் சென்றது, அவருடைய ஒளிமிகுந்த பாதையில் நமது கண்களை மூடிக்கொண்டாலும், வழி தவறவில்லை. நம்மை நடத்திச் சென்ற உருவம் மறைந்து விட்டது. வழிதவறாமல் செல்லும் முயற்சியை நாமேதான் இனி மேற்கொள்ள வேண்டும். அவர் தந்துசென்ற அறிவொளி நல்வழியை நமக்குக் காட்டுகின்றது. பண்புருவான அந்த ஒளிவிளக்கை மங்கவிடுவோமானல் நேர்வழி தவறிவிடும்.

அரசும் ஆட்சியும் மக்களுக்காக, தனித்த கட்சி அமைப்புகளுக்காக அல்ல என்ற உணர்வை அண்ணா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தினர்கள். ஜனநாயக ஆட்சி நிலைத்து நிற்க இவ்வுணர்வு நீடிக்க வேண்டும்.

கடமையில் தவறாமல், கண்ணியம் மறவாமல், கட்டுப்பாட்டை மீறாமல் நடக்கவேண்டும் என்ற அந்த நாயகனின் கட்டளை நம் செவிகளிலே ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அக்கட்டளையை மறவாது நாம் நமது முதல்வர் டாக்டர் கலைஞரின் வழி நடம்போம். நடக்க வேண்டும். இதுவே நாம் நமது அருமை அண்ணாவிற்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்; நாட்டுப் பணியாகும்.

---



சிங்கம் புணரிதந்த சிங்கம்-இவர் வீரத்தில்!
தங்கம் தரத்தில்! தமிழ்ப் பற்றில்–பொங்கிப்
பெருகும் புதுவெள்ளம்! பேர்புகழில் ஆலும்
அருகும்போல் ஆம்! மாத வன்!

எழில்மயமாய் இந்தத் தமிழகமே மாறத்
தொழில்மயமாய்ச் செய்கின்றார் தொண்டு–முழுமனதாய்!
சட்டம் ஒழுங்கு தமிழ் நாட்டில் ஓங்கிடயிச்
சட்டத்–தொழில் அமைச்சர் தாம்!

தோற்றம் எளிமையாய்த் தோன்றிடினும் எண்ணம்சொல்
ஆற்றும் பணியில், அமைச்சரிவர்—ஆற்றல்
மிகுந்தவர்காண்! மக்களின் மேன்மைக்கே செய்வார்
உகந்தபணி யாவும் உவந்து!

# எண்குணத்தான்

செந்தமிழ்ச்செல்வர்
மா. செங்குட்டுவன்

அகர முதல எழுத்தா யமைந்தநல் பேரறிஞன்;
நிகரில மேதை நிறைகுடம் போன்றோன்; நிலைத்தபுகழ்
நகர்திரு காஞ்சி நனிசிறப் போங்கிட வாழ்ந்தவனும்;
தகைசால் தலைவனும்; தண்டமிழ்த் தாயின் தலைமகனே!

எண்ணு யெழுத்தாய்க் கருத்தாய் மொழியா இலக்கியமாய்ப்
பண்ணாய்ப் பனுவலாய் பல்கலைச் செல்வமா யெந்தமிழர்க்
கண்ணாய் மணியாய்க் கதியாய் மதியாய் கருந்தனமாய்
அண்ணா எனுமோர் அறிவொளி பாரில் பரவியதே!

இறைவனை வள்ளுவர் எண்குணத் தானென் றுணர்ந்துரைத்தார்!
நிறையறி வாலுயர் பண்பினால் எங்கள் இறைவனண்ணா!
குறைமதி யாளர் வசைமொழி யாவுமே வாழ்த்திசையாய்
முறையுடன் ஏற்றே யறிவுரை நல்கிடும் மூத்தவரே!

காந்தி நெறிதனைக் கைக்கொண் டொழுகிய தென்னகத்துக்
காந்தி யவரெனக் காசினி போற்றவே வாழ்ந்தவராம்!
ஏந்திய நற்புகழ் என்றும் நிலைத்திடும் பேற்றினராம்!
வேந்தியல் குற்றம் விளையா தரசினை வென்றவரே!

கண்ணியம் கட்டுப்பாட் டோடு கடமை புரிகவென்ற
புண்ணிய வானும்; புதுமைகண் டோராம் அரசியலில்;
எண்ணிய யாவும் இயற்றி முடிக்கும் இயல்பினராம்
மண்ணில் அவர்போல் மனிதர்யார் மாண்புகழ் பெற்றவரே!

---



எஞ்சி வருபுனல் எவ்வள வாயினும் இன்றளவும்
கொஞ்சும் தமிழிசை பாடிப் பெருகுப் பூங் காவிரியாள்
தஞ்சைத் தரணிதான் தாய்த்தமிழ் மக்கள் அனைவருக்கும்
அஞ்சேல் எனச்சொல்லி அன்னம் அளிக்கும் களஞ்சியமே'
அன்னம் அளித்திடும் நன்செய் நிலவளத் தஞ்சையன்தான்
பொன்விழாக் கண்ட கலைஞர் புகழ்சேர்க்கப் பூத்தநிலம்
மன்னுமச் சோழமா மண்டலம் தந்த கலைஞ தொடா
இன்னும் உளரேஎன் றெண்ணியே காண்மின்செங் குட்டுவனே!
ஆரூர்க் கலைஞர் படித்த பெருமைசேர் பள்ளியில்தான்
பேரார்வ மாகச்செங் குட்டுவன் கற்றுப் பெருமை பெற்றார்!
பேரறி வாளர்நம் அண்ணாவின் பேரன்பும் பெற்றயிவர்,
சீருறச் செல்வது டாக்டர் கலைஞரின் செந்நெறியே!
நம்நாட் டெழுச்சிக்கு நற்றமிழ் ஏடு நடாத்தியவர்
நம்நா டிதழினில் நற்பணி செய்த கழகத் தொண்டர்!
செம்மை யுறவாழ்வின் செந்தமிழ்க் கற்றுய்ந்தச் செல்வரிவர்!
தம்ஆவல், சொல், பணி, யாவும் தமிழினைச் சார்ந்ததுவே!

# அண்ணா வீசும் அறிவொளி

பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன் பி.எஸ்.சி., எம்.ஏ.

அண்ணாவின் உள்ளமும் சிறிய வயதில் நம் எல்லோரையும் போல 'ஐயோ!' என்று அலறிய அலாவுதீனையும் அவன் எதிரே வந்து நின்று அச்சுறுத்தும் பூதத்தையும் பற்றிக் கூறும் 'அலாவுதீனின் அற்புத விளக்கின்' கதையைப் படித்துவிட்டு அதிலேயே சொக்கிப் போய் அதைவிடச் சிறந்த புத்தகமே கிடையாதென்றுதான் நம்பிக்கொண்டிருந்தது. ஆனாலும் அணையாவிளக்காக எதிர்காலத்தில் சுடர் விட்டு நிற்க இருப்பவர் அலாவுதீன் விளக்கையா வட்ட மிட்டுக்கொண்டிருப்பார்?

## நாரதகானமும் நற்றமிழ் வீரமும்

ஆம், மகிழ்ச்சி மட்டும் ஊட்டும் ஏடுகள் செயலாற்றும் திறனையும் சேர்த்து ஊட்டிவிட முடியாது என்பதை உணர அவருக்கு அதிக காலம் பிடிக்கவில்லை; 'உள்ள பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஏடுகளால் என்னையும் அசைக்க இயலாது' என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கருத்தை அண்ணா தனக்கே உரிய பாணியில் மிக எளிதாக எடுத்துக் கூறுகிறார். ஆம்!

"நாரதனின் கானம் பற்றியோ தேவலோகக் காட்சி பற்றியோ சுவைதரும் வகையில் தீட்டப் பட்ட ஏட்டினைப் படிக்கும்போது ஒருவகை இனிமை ஏற்படவே செய்கிறது. ஆனால் பக்திப் பரவசத்துடன் அந்த ஏடுகளைப் படிப்போரும், போய்ப் பார்த்துவிட்டே வரவேண்டும் நாரதரை என்று பயணபடுவதில்லை!"; என்கிறார். ஆற்றல் வளரும் பருவத்தை எய்தியதும் அண்ணாவின் உள்ளம் அலக்சாண்டரின் ஆற்றல், ஜூலியஸ் சீசரின் வீரம், நெப்போலியனின் ஆர்வம் ஆகியவை பற்றி ஆயத் தூண்டியது. அதே சமயத்தில் தாய்நாட்டில் தமிழகத்தில் கடல் கடந்து சென்று வெற்றிக்கொடி நாட்டிய அத்தகைய தமிழ் வீரர்கள் பற்றியும் அறிந்து கொள்ள அவர் உள்ளம் துடித்தது. தாய்த்திரு நாட்டின் தனிச் சிறப்பை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்ற ஆர்வத்தில் தமிழ் அறிஞர்களிடம் பாடம் கேட்டார்; தமிழ்ச் சுவடிகளைத் துருவிப் பார்த்தார் ஆனாலும் இமயம் முட்டிய வீரத்தைப் பற்றியும், கனகவிசயர் தலையில் கல்லேற்றிய நிகழ்ச்சி பற்றியும். கங்கையும் கடாரமும் கொண்டது பற்றிய கல்வெட்டுக்கள் பற்றியும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு குறிப்புக்களே கிடைப்பதால் வரலாறு என்ற அளவில் அயல் நாட்டில் உள்ளதுபோல் கட்டுக்கோப்பாக அமைந்து எதிர்கால வீரர்களை உருவாக்கும் ஒரு சாதனத்தை இங்கு ஏனோ காணமுடியவில்லை என்பதை நாம் அறிவோம். அண்ணா கூறுவதுபோல, கரிகாலன், இராசராசன், குலோத்துங்கன். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஆட்டனத்தி என்ற பெயர்ப் பட்டியலே நமக்கு எஞ்சி நின்றது! நரசிம்ம பல்லவன் காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து பம்பாய் அருகேயுள்ள வாதாபி என்ற நகர்மீது படை எடுத்துச் சென்று சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்த பரஞ்சோதி சிறுத் தொண்டராகி ஒடுங்கிய செய்தியைப் 'பிடிசாம்பல்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி அண்ணா அவர்கள் தமிழுலகைச் சிந்திக்க வைத்தார்.

## காந்தியடிகளைப் பகுத்தறிவுக் கண்கொண்டு கணித்தவர்

இங்கர்சாலின் பகுத்தறிவுக் கருத்துக்களால எழுச்சிபெற்ற அண்ணாவின் உள்ளம் காந்தியடிகளின் புகழை, நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த அவர்தம் அருஞ்செயலை 'அவர் மந்திரகோல் கொண்டோயாக குண்டத் தருகே நின்றோ சாதிக்கவில்லை. மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார்; புதிய வாழ்வு தந்தார்' என்று பகுத்தறிவுக் கண்கொண்டு எழுதுகிறார். அண்ணாவின இக்கூற்றை ஆமோதிக்கும் வகையில்தான் கோவிலும் குடமுழுக்கும் பிள்ளை விளையாட்டே என்ற கொள்கை கொண்ட நேரு பெருமகனும் 'இந்திய விடுதலையை வானத்தில் உள்ள கோள்கள் வாங்கித்தரவில்லை மக்களின் பேராற்றலே அதைப் பெற்றது' என்று சொல்லி உலகப் பகுத்தறிவாளர்களில் ஒருவராக உயர்ந்தார்.

ஆம்! நேரு பெருமகனார் ஆலயங்களைப் பார்வையிடுவது உண்டு. ஆனால் அவர் ஸ்வாமி தரிசனம் செய்தார்' என்று எழுதுகின்ற அளவிற்கு அன்று பத்திரிகை உலகம் வீழ்ச்சியடைந்துவிடவில்லை.

## தமிழ் நாட்டில் விஞ்ஞானம்

'நம்நாட்டில் விஞ்ஞானம் பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போலவும். குருடனிடம் காட்டிய முத்துமாலையைப் போலவும் செவிடன் கேட்ட சங்கீதம் போலவும் மதிப்பற்று இருக்கின்றது' என்று அண்ணா கூறும் போது இந்த நிலைக்குக் காரணம் எதுவாக இருக்க முடியும் என்று நாம் எண்ணிப்பார்க்கத்தான் செய்கின்றோம். ஆம், கலையின் பெயரால் கண்மூடிக்கருத்துக்கள் தமிழரின் எண்ணத்திலே தூவப்பட்டு விட்டன.

## முட்டைத் தீட்டு

காலத்திற்கு ஒவ்வாத மூடக்கருத்துகளைச் சிலர்நாட்டில் பரப்பி வருவதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். வெண்டைக்காய் மட்டுமே பிடிக்கும் கத்தரிக்காய் பிடிக்காது என்று சொல்கிறவர்கள் கத்தரிக்காய் வாங்காமல் இருந்துவிடலாம். ஆனால் வெண்டைக்காய் விற்கும் இடங்களிலே கத்தரிக்காயும் விற்கக் கூடாது என்று பேசுவார்களானால் அவர்கள் இருக்க வேண்டிய இடம் மனநோய் மருத்துவமனையே! இன்று பாலும் முட்டையும் உண்பது உடல் நலத்திற்கு உகந்த ஒரு செயல் என்பதை உலக மருத்துவர்கள் ஒருங்கே ஏற்றுக் கொண்டுள்ளனர். இருந்தாலும் பால் விற்கும் இடங்களிலே பசு வேண்டுமானாலும் விற்கலாம் ஆனால் முட்டை விற்பது கூடாது என்று பேசுகிற 'மெய்ஞானி'களும் இருக்கின்றனர். இறைவனுக்கு நைவேத்தியம் செய்யவே இவர்கள் பால் வாங்குகிறார்களாம், குடிப்பதற்கு இல்லையாம். ஆட்டையும் மாட்டையும் கொன்று பெரியவர்களின் ஆசீர்வாதத்தோடு 'யக்ஞம்' செய்கின்ற அகிம்சா மூர்த்திகள் ஏனோ இறைவனுக்கு நைவேத்தியம் செய்யும் பால் முட்டையால் தீட்டுப்பட்டுவிடக்கூடாது என்று தத்துவம் பேசுகின்றனர்! செய்தித்தாளில் 'ஆசிரியருக்குக் கடிதம்' என்று எழுதுகின்ற இந்தத் தத்துவத்தை மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்துப் படிக்கும் தம் பேரனிடமும் பேத்தியிடமும் ஏனோ இவர்கள் பேசிப் பார்ப்பதில்லை.

## பழங்காலத்து பர்மா நோட்டுகள்!

சமுதாய முன்னேற்றத்திற்கு இடையூறாக குறுக்கிட்டு நிற்கும் இத்தகைய கருத்துக்களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் அழகியதோர் உவமை கூறி விளக்குகிறார். பர்மாவை சப்பானியர் பிடித்தபோது அவர்கள் வெளியிட்ட நோட்டுகள் இன்று அங்குச் செல்லுபடி ஆவதில்லை! அதேபோன்று மனித சமுதாயத்தின் குழந்தைப் பருவத்தில் கிடைத்த பல 'உண்மைகள்' இன்று உண்மைகள் என்று உலகினரால் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. செல்லுபடி ஆகாத நோட்டுகளைச் சேகரித்து வைத்துச் சிறுபிள்ளைகள் விளையாடினால் கேடு அதிகம் இல்லை. ஆனால் அந்த நோட்டுகள் செல்லுபடியாகவேண்டும் என்று 'பெரியவர்கள்' நடைபாதையில் கடைவிரித்து வாதாடினால் நாட்டுக்கு எவ்வளவு பெரிய தொல்லை? அப்போலோக்கள் சந்திரனில் சென்று இறங்கிக் கொண்டிருக்கும் போது ஆதிசேடனின் வால் பற்றியா இந்தியர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பது?

## இளங்கோவுக்கு இடம் எங்கே?

புலவர்கள் தாங்கள் நன்மை செய்வதாகக் கருதிக்கொண்டு ஒருசில புலவர்களையும் கவிஞர்களையுமே பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தது அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் வருத்தியது. கம்பனை அறிமுகப்படுத்திய அளவிற்குச் சங்ககாலப்புலவர்களை அறிமுகப்படுத்தவில்லை என்பதை அண்ணா வெளிப்படையாகக் கூறிய திறம் எவரும் வியந்து போற்றும் வகையில் அமைந்து காண்கின்றது. 'ஏ, தாழ்ந்த தமிழகமே!' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் புலவர்கள் முன்னர் பாவேந்தர் பாரதிதாசன் உருவப்படத்தைத் திறந்துவைத்து அறைகூவல் விடுத்த நேரத்தில் "தில்லையில் ஓர் ஓட்டுப்பெட்டி வைததுப் பிரசாரமில்லாமல், அப்படி இருந்தால் இருபக்கமும் நடத்தி, கம்பனுக்கும் இளங்கோவுக்கும் ஓட்டுப்போடச் சொன்னால், தேர்தலில் கம்பன்தான் வெற்றி பெறுவான்! ஆனால் நாம் நமது கற்பனா சக்தி முன்பு இருவரையும் நிறுத்திப் பேசச் சொன்னால் கம்பன் இளங்கோவைப் பார்த்து 'எனக்கு உயிர் ஊட்டிய உத்தமரே' என்பான்; 'அணியழகு தந்த ஆணழகரே' என்பான்; என்று மொழிந்து தமிழகத்தைச் சிலம்புப் பாதையில் திருப்பி விட்டார்! இன்று சங்கத் தமிழ் மழைபொழியும் நாவலர்களைக் காண்கின்றோம்; சிலம்பொலியைச் செல்லுமிடமெல்லாம் முழக்கும் செல்வர்களைக் காண்கின்றோம், பூம்புகாரை மீண்டும் உலகத் தமிழர் கண்முன் கொணர்ந்து நிறுத்திய பசுந் தமிழ்க் கலைஞர் பெருமக்களைக் காண்கிறோம். இன்று தில்லையில் அண்ணா கூறிய அந்தத் தேர்தலை நடத்தினால் வெற்றி இளங்கோவுக்குதான் இருக்கும்!

## மணி நா ஓசையா? மறை நா ஓசையா?

தமிழர்கள் எய்த வேண்டிய நிலையை எண்ணிப் பார்க்கும் நேரத்திலே அவர்கள்

உள்ளத்தில் இருக்க வேண்டிய நினைப்பையும் எண்ணிப் பார்க்கவேண்டிய இன்றியமையா மையை அண்ணா சுட்டிக் காட்ட மறந்ததில்லை. இமயத்தின் மீது வெற்றிகொண்டு கனகவிசய ரைக் கல் சுமக்கச் செய்த 'முன்னுள் பரஞ்சோதி' சேரன் செங்குட்டுவனும் 'உயிர்க் கொலை நீங்கு மின்' என்று இளங்கோ ஒலித்துக் கொண்டிருக்க கும்போதே யாக சாலைக்குள் புகும் சிறுத் தொண்டனாக மாறிவிடுகின்றானே? ஆம், ''பாச றைகளுக்குப் பக்கத்தில் ஆசிரமங்கள், மன்னர்களுக்குப் பக்கத்தில் மாடல மறையவர்கள் என்ற நிலை ஏற்பட்டது; தனி நிலை கெட்டது; நிலை கெடவே நினைப்பும் கெட் டது; அயல்நாட்டார் கண்டு கேலி செய்கின்ற அளவுக்குக் கெட்டது'' என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'நிலையும் நினைப்பும்', என்ற தலைப்பில் பேசும் அண்ணா உளம் உருகிக் கூறு கின்றார். ஆம், மணியோசை கேட்டு மன்பதை காத்து வந்த மன்னர்கள் மரபில் வந்தும் கட மையில் தவறிய பாண்டிய மன்னனை அறிமுகப் படுத்த வந்த இளங்கோவடிகளாருக்கும் கூட ''மறைநா ஓசை அல்லது யாவது மணிநா ஓசை கேட்டதும் இலனே!'' என்று உண்மை நிலை யைக் கோடிட்டுக் காட்டியாக வேண்டிய ஒரு சூழ்நிலை தமிழகத்தில் உருவாகி விட்டது!

### தாயை மறந்த சேய்கள்!

மன்னர்கள் நாள் முழுவதும் கேட்ட மறை நா ஓசை அவர்களை 'மூளைச் சலவை' செய்து விட்டிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் தமி ழுக்குக் கதவடைத்து மறைக்காடு வேதாரண்ய மாகவும் பழமலை விருத்தாசலமாகவும். மயி லாடுதுறை மயூரபுரமாகவும் மாற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமா? இமயமும் கங்கையும் தோன்றுவதற்குப் பலகோடி ஆண்டு கட்கு முன்னரே குடகும் காவிரியும் இருந்து வந்தன என்பது அறிவியல் கண்ட முடிவு. இருந்தாலும் காவிரியில் முழுக்குப்போட்டு விட்டு 'கங்காஸ்நானம்' ஆயிற்று என்று சொல் கிற 'கங்கையின் புதல்வர்'களும் இருக்கின்றனர்! இத்தகையோருக்கு உண்மை உணர்த்தும் வகை யில் ''பரப்பு நீர்க் காவிரி பாவைதன் புதல்வர்'' என்று இளங்கோவடிகள் கூறும்போதுங்கூடப் பின்னால் வந்த அடியார்க்கு நல்லார்களால் தமிழர்கள் காவிரிப் புதல்வர்களே என்ற உண்மை காணமுடியவில்லை, ''காவிரி நீர் கங்கை நீராதலின் கங்கையின் புதல்வரைக் காவிரியின் புதல்வர் என்றார்'' என்றே அவர் கள் 'விளக்கம்' தந்து செல்கிறார்கள்! பாவம், 'அகத்தியர் கமண்டலத்தில் கங்கை நீரைக் கொணர்ந்து காவிரியாகப் பெருகவிட்டார்' என்ற செல்லுபடியாகாத பழங்கால, பர்மா நோட்டு களை வைத்துக்கொண்டு உரையாசிரியக் குழந் தைகள் விளையாடுகின்றன.

### பொழுது புலர்ந்தது

அண்ணாவழி நின்ற தமிழர் மீண்டும் தம் நாட்டைத் தமிழ்நாடாகக் கண்டனர். தந்தை பெரியார் வழிகாட்டிய தன்மானத் திருமணமே தனிப் பெரும் திருமணம் என்று அறிஞர் உலகம் ஆணை பிறப்பித்துவிட்டது. நெடுங்கால மாசப் 'பள்ளத்தில் விழுந்திருந்த குருடர் எலாம் விழிபெற்றுப் பதவி ஏற்கும்' இனிய காட்சியைக் கண்டு வருகிறோம். உரிமைக்கு உயிரும் உடம்பு மாம் முப்பது எழுத்துக்களையே முதலாகக் கொண்ட நம் தமிழ் மொழியும், உறவுக்கு இருபத்தாறு எழுத்துக்களையே கொண்டு எழி லுறத் திகழ்ந்து நிற்கும் ஆங்கிலமும் இரு மொழிக் கொள்கை வழி இணைபிரியாமல் இருக் கின்றன. ஆம், அண்ணா வீசும் அறிவொளியைத் துணையாகக் கொண்ட தமிழ்க் குழந்தைகள் உலகமெங்கும் இனித் தங்கு தடையின்றி தவழ்ந்து வருவார்கள்! ஏன், திங்கள் உலகிற் கும் செவ்வாய் உலகிற்கும் கூட எதிர்காலத் தில் சென்று திரும்புவார்கள்!

வாழ்க அண்ணா புகழ்!
வளர்க பகுத்தறிவு!!

---

அண்டம் முதலா யணுவரை ஆயும் அறிவியலார்!
தண்டமிழ் வித்தகர்! சங்க இலக்கியத் தண்ணார்மழைக்
கொண்டல்! பகுத்தறி வாளர்! உயர்குணங் கொண்டயிவர்!
கொண்டல் எனும்சொல்லைக் கொண்டு வரும் சு. மகாதேவனே!

கழகம் எனில்தமிழ் காக்கும் கழகம் எனப் புகழ்காண்
கழக அரசின்கண் கண்ணுங் கருத்தாய்த் தமிழ் வளர்ச்சிக்
கழக இயக்குனர் ஆகக் கடமைசெய் கல்விச் செல்வர்!
தழைக்கும்தன் மானத் தியக்கத்தை சார்ந்து தழைப்பவரே!

பண்டு தமிழில் அறிவியல் பன்னூறு பாரீர்என
விண்டு மொழிந்து வியப்பினில் ஆழ்த்தும் மிகுமதியர்!
எண்ணில் நெடுங்கணக் கேன்உயிர் மெய்முப்ப தேற்போம் எனும்
எண்ணம் உடையவர்! பேரன்பர்! காட்சிக் கெளியவரே!

# ஒரே ஒரு சிபாரிசு

பி.எல்.ராசேந்திரன் *

மண்டும் மதங்கள்
அண்டா நெருப்பு!
படரும் சாதிப்
படைக்கு மருந்து!
செந்தமிழ்த் தேனீ!
சிந்துக்குத் தந்தை!
பைந்தமிழ்த் தேர்ப்பாகன்!
தென்னாட்டுக் காந்தி!
இதய தெய்வம்!
பெர்னாட்ஷா!
தமிழ்த்தாயின் தலைமகன்!

இப்படி அடுக்கடுக்காகச் சொல்லிக் கொண்டே செல்லத்தக்க அருமை பெருமைக் குரியவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த நாட்டில் நாம் வாழ்கிறோம் என்ப சொல்லிச் சொல்லி மகிழத் தக்க சிறப்பாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரிதும் அன்புகாட்டிய பத்திரிகையாளர்களிலே நானும் ஒருவனாக இருந்தேன். இது எனக்கோர் பெற லரும் பேறு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்றில்லை என்ற தைரியத்தில் அவருடைய அபிமானத் தம்பிகளில் முதல் தம்பியாக நான்தான் இருந் தேன் என்று சொல்லிக் கொள்ளும் திடீர் அரசியல் வாதிகள் சிலர் இன்று முளைத்திருக்கி றார்களே; அந்த வகையிலே நான் சொல்லிக் கொள்ளவில்லை. அப்படிச் சொல்லிக் கொள்வதற்கான அவசியமும் எனக்கில்லை.

1967ல் நம் தாய்நாட்டின் இன்பத் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பு, திராவிட முன் னேற்றக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட நேரம். திரு. சொர்ணம் அவர்களை ஆசிரிய ராகக் கொண்டு வெளிவந்த 'சமநீதி' பத்திரி கையின் துணை ஆசிரியனாக நான் பணியாற்றி வந்தேன்.

தேர்தல் நேரத்தில், மாற்றாரின் பொய்க் கணைகளை அவர்கள் திருப்பித்தாக்க இயலாத படி நான் 'சமநீதி' மூலம் வேகம் வேகமாக எதிர்ப்புக் கணைகளை வீசி முறியடித்து வந்தேன்.

ஓர் நாள்—

பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னைக் காண விரும்புவதாக, அவர்களுடைய அந்த ரங்கச் செயலாளராக இருந்தவரும், அருமை நண்பருமான கஜேந்திரன் எனக்குத் தொலை பேசி மூலம் செய்தி தெரிவித்தார்.

அடுத்த வினாடியே அங்கேபோய் நின்றேன்.

அந்த வாரத்திய 'சமநீதி' ஏடு பேரறிஞர் அண்ணா அவர்கள் கையில் இருந்தது. அதில் நான் எழுதிய ஏதோ கட்டுரைக்காக என்னைப் பாராட்டவே அழைத்திருப்பதாகக்கருதினேன். மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தது என் நெஞ்சில்.

அண்ணன் தலைநிமிர்ந்தார்.

"யாரு இராசேந்திரனா?"

"ஆம் அண்ணா! கஜேந்திரன் போன் பண்ணினார்"...

"நான்தான் கூப்பிடச் சொன்னேன்."

சொல்லிக்கொண்டே 'சமநீதி'யைப் புரட் டினார். அதில் "பூட்டோவாம் பூட்டோ, யாரையா பூட்டோ?' என்ற தலைப்பின்கீழ் நான் எழுதிய கட்டுரைப் பக்கத்தை மடித்து வைத்துக் கொண்டார்.

"இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி எழு தரதா உத்தேசம்?"

அண்ணா அவர்கள் கேட்ட இந்தக் கேள்வி என்னைத் திடுக்கிடச் செய்தது. பாராட்டு கிடைக்குமென்று எதிர்பார்த்தவனல்லவா நான்!

பதில் சொல்ல விளங்காமல் அமைதியாக நின்றேன்.

"உன்னைத்தாம்பா கேட்கறேன். ஒரு கட்சி யினுடைய விவாதத்தை எதிர்விவாதித்தால் மறுக்கலாம். தப்பில்லை. முரட்டுத்தனமான வார்த்தைகளை உபயோகிக்கிறபோது உன் னோட விவாதம் எவ்வளவு சரியானதா இருந்தா லும் எடுபடாது. விளங்குதா?"

"விளங்குதண்ணா. ஆனா...காங்கிரஸ் கார

வங்க பேசறதை அதே வேகத்துல எதிர்க்க லேன்னு, பத்திரிகையைப் படிக்கிறவங்க குறைஞ்சிடுருங்க. அதான்...''

நான் தயக்கத்தோடு வார்த்தையை நீட்டினேன். உடனேயே பதில் பிறந்தது.

அதாவது பத்திரிகை வியாபாரத்துக் காகத்தான் எழுதறேன்கிறியா? அதுதான் உன்னுேட நோக்கம்னு என்னைத் திட்டி எழுது. இன்னும் நிறைய விற்கும்!''

''அண்ணு அவர்கள் இப்படிச் சொன்னதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நான் சில நிமிடங்களில் தெளிவடைந்தேன்.

"இராசேந்திரா, என்ன சொல்றே?"

அமைதியாகவே கேள்வி பிறந்தது.

"தப்புதான். இனிமே அப்படி எழுத மாட்டேன்!"

'இப்பவும் நீ எழுதினது தப்புன்னு நான் சொல்லலே. எழுதின முறை தப்புண்ணுதான் சொல்றேன். பக்தவத்சலம் என்னை பூட்டோன்னு சொல்லிட்டார்ங்கிறதைக் கண்டிச்சு நீ எழுதியிருக்கியே; விஷயமெல்லாம் சரியாத்தான் இருக்கு. ஆனு அதை நீ சொல்ற விதம் இருக்கே; அதைப் பார்க்கிறபோது பொய்யையே நிஜம் போல எழுதியிருக்கியோன்னு சிலர் நினைக்கலாம். அதனுலதான் சொல்றேன்.

சிறிது நேரம் நின்று விட்டு-மன்னிப்பு கேட்டுக் கொண்டு-இனி அப்படி கரடுமுரடான தர்பார் வாசகங்களை உபயோகிப்பதே இல்லை என்ற உறுதியோடு வெளியேவந்தேன்.

இப்போதும் சரி. எந்த அரசியல் பிரச்னை பற்றியாவது வேகமாக எழுதுகிற அல்லது பேசுகிற சந்தர்ப்பம் வரும்போது எனக்கு பேரறிஞர் அண்ணு அவர்கள் சொன்ன அந்த அறிவுரைதான் நினைவு வரும். வேகத்தை நிதானமாக்கிக் கொள்ளுவேன்.

இவ்வளவுக்கு நான் பேரறிஞர் அண்ணு அவர்களின அன்புக்குப் பாத்திரமாயிருந்தவன்.

இதை நினைப்பில் வைத்துக்கொண்டு ஒரு முறை-ஆம்; ஒரே ஒரு முறை அண்ணு அவர்களிடம் நான் ஒரு சிபாரிசுக்குச் சென்றேன்.

என் உறவினர் ஒருவர் போலீஸ்காரர். சென்னையில் பணியாற்றி வருகிருர். அண்ணு இருந்தபோது இவர் மீது ஒரு புகார்.

போலீஸ் ஸ்டேஷனில் இரவு பாராவில் இருந்தபோது தூங்கிவிட்டார். 'ஏன் எதற்காக உன்மேல் நடவடிக்கை எடுக்கக்கூடாது' என்று மேலதிகாரிகளிடமிருந்து அவருக்கு நோட்டீஸ். சஸ்பெண்ட்.

அண்ணு அவர்களிடம் போனேன். விஷயத்தைச் சொன்னேன். சஸ்பெண்ட் ஆர்டரை சஸ்பெண்ட் செய்து உதவுமாறு வேண்டினேன்.

சில நிமிடங்கள் அமைதியாக இருந்துவிட்டு புன்னகையோடு அண்ணு அவர்கள் என்னிடம் கேட்டார்—"அவர் அப்படித் தூங்கியதில் தப்பில்லை என்று நீ சொன்னுல் நீ சொல்கிறபடி நான் செய்கிறேன். என்ன சொல்றே?"

இந்தக் கேள்வி என்னைக் குழப்பிவிட்டது.

"அதெப்படி தப்பில்லேன்னு நான் சொல்ல முடியும்?...ரொம்ப கஷ்டப்படுற குடும்பத்தைச் சேர்ந்தவர் அண்ணு.. அதால தான்"... நான் தயக்கத்துடனேயே பேசினேன்.

"கஷ்டப்படுற குடும்பத்தைச் சேர்ந்தவங்க தாம்பா கடமையில கருத்தா இருக்கணும். அவர் செய்தது சரின்னு நீயே சொல்லமாட்டேன்றே என்னைமட்டும் சிபாரிசு செய்யச் சொல்றியே அதெப்படி?"

அண்ணு கேட்டார். வியர்க்க விறுவிறுக்கச் சிறிது நேரம் நின்றுவிட்டு, பேசாமல் திரும்பி விட்டேன்.

இந்தச் சம்பவத்தை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்ருல்—நிர்வாகத்தில் விருப்பு வெறுப்பு—வேண்டியவர் வேண்டாதவர் என்ற நிலையே இல்லை; அதுதான் அண்ணுவின் தன்மை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்.

அதே வழியில் நடக்கும் கழகத் தலைவர் கலைஞர் ஆட்சியைக் கவிழ்க்க நினைப்போர் சிலர் நாங்கள்தான் அண்ணுவின் அன்புத் தம்பிகள் என்கிருர்களே; அது கண்டு வேதனைப் படுகிறேன்.

கடப்பாறை விழுங்கி விட்டு சோடா—குடிக்க நினைக்கும் அந்த புல்தடுக்கி பயில்வான்களுக்காகப் பரிதாபப்படுகிறேன்.

வாழ்க அண்ணுவின் வளர்புகழ்!

---

நண்ணற் கினியவர்; ராசேந் திரன்; நல்ல

தண்ணுர் தமிழ்ப்பா தருங்கவிஞர்—எண்ணிற்

புதினம் படைப்பாளர்; சொற்பொழி வாளர்;

இதயம் கழகத் திடம்!

---

— அறிஞர் அண்ணா 65 (1973)

# ஏ பிக்சர் வித்தௌட் ஃப்ரேம்

## தத்துவக் கவிஞர் குடியரசு

அறிவனே உன் பிறப்பு வாழ்க! பிறந்த நாள் வாழ்க!

நம்பிக்கை விண்மீனே! எங்கள் பாதையை மகிழ்ச்சியுள்ள மாளிகைக்கு இழுத்துச் செல்வாய்!

எங்கள் நினைவுகள் உன் மடியிலேயே கனவு கண்டு கொண்டிருக்கின்றன!

எங்கள் எதிர்காலத்தை அழவைக்காமல் விளையாட்டுக் காட்டும் உன் தாழ்மையே தாய்மை!

எங்கள் தூக்கம் உன்தன் இசையால் கலைந்தது!

எங்கள் களைப்பு உன் கனிவால் தணிந்தது!

உம் உருவத்தின் நெடிய நிழல் நாங்கள்!

உமது இதயத் தோட்டத்தில் துள்ளும் புள்ளிமான்கள் நாங்கள்தான்!

உமது பேச்சூற்றில் நாங்கள் குளிக்கிறோம்!

உமது அடக்கப் பொன்வெயிலில் உலருகிறோம்!

உமது இரக்கத்தில் இரவைக் கழிக்கிறோம்!

நீங்கள் பிறந்த பின்பு எங்கள் துன்பம் இறந்து விட்டது!

நீங்கள் பேசிய பிறகு இந்த ஊமைகள் பேசினோம்!

நீங்கள் பார்த்த பிறகு எங்கள் கூரிவேலம் ஒளிபெற்றது!

நீங்கள் நுகர்ந்த பிறகு நாங்கள் மணந்தோம்!

நீங்கள் கேட்ட பிறகு எங்கள் நரம்புகள் பாடின!

நீங்கள் சுவைத்த பிறகு நாங்கள் அமுதானோம்!

நீங்கள் உணர்ந்த பிறகு நாங்கள் உயிர் பெற்று எழுந்தோம்!

அறிவனே! நீர் எவ்வளவு இனிமையானவர் அமைதியானவர்!

எங்கள் உளிகள் உம்மைத்தான் சிலை வடிக்கின்றன!

எங்கள் தூரிகை உம்மைத்தான் ஓவியம் தீட்டும்!

எங்கள் புலமை உம்மைக் கவிதையாக்கும்!

எங்கள் யாழ் உம்மைத்தான் பாடும்!

நாங்கள் அடிமைகள்! எங்களுக்கு உம்மைத் தவிர வேறு சுதந்திரம் வேண்டாம்!

எங்கள் கொடிகளில் உமது புகழ் மட்டும் பட்டொளி வீசட்டும்!

தலைவனே உம் சக்தியே சக்தி!

நீங்கள் பாட்டுவித்தால் பாடுகின்றோம்!

பணிவித்தால் பணிகின்றோம்!

ஊட்டுவித்தால் உண்கிறோம்!

உறங்குவித்தால் உறக்குகிறோம்!

கூட்டுவித்தால் கூடுகின்றோம்!

குழைவித்தால் குழைகின்றோம்!

ஆட்டுவித்தால் ஆடுகின்றோம்!

அம்மம்ம என்னே சக்தி!

எங்கள் கூடப் பிறந்தவனே என் இரத்தத்தின் அணுக்கள் உமக்குச் சொந்தமாகி விட்டன!

எங்கள் குருதியைக் கொண்ட கொள்கைக்காகக் குடம் குடமாக ஊற்றக் காத்திருக்கிறோம்!

இலட்சியம் ஈடேற நாங்கள், உம் கையிலிருக்கும் கருவிகள்!

நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பயன் படுத்தலாம்!

நீங்கள் வீசிய திக்கை விட்டு ஓர் அடி நகர மாட்டோம்!

நீங்கள் பணித்ததை செய்யாமல் திரும்பவும் மாட்டோம்!

நீங்கள் கொள்கை புகாத இருண்ட காடுகளிலும் எட்டிப் பார்க்கும் உதயசூரியன்

உம்முடைய ஒளிவிருந்தால் வெளுத்துப் போயிருந்த இலைகளெல்லாம் பசுமையாகி விட்டன!

உம்முடைய வெத வெதப்பான லட்சியத்தால் மரத்துப் போன உள்ளம் மூர்ச்சை தெளிந்து எழுகிறது!

நாடு. மொழி உன்னை நம்பியே இருக்கிறது!

உமது தொண்டாற்றல் இயற்கைக்குக்கூட இல்லை!

உமது சலியா உழைப்பு கோள்களுக்கும் இல்லை!

உமது தெளிவு பளிங்குக்கும் இல்லை!

எங்கள் உள்ளக் கோயிலில் ஒடுங்கிய இறையே!

உங்கள் லட்சியத் தேரைக் காணாத மக்கள் இல்லை!

அத்தேரின் வடமிழுக்கும் கரங்களை நீ முத்தமிடுகிறாய்!
உன் தேரோடும் பாதையில் நாங்கள் மண்ணாகவே இருக்கிறோம்!
அதுவே எங்கள் பாக்கியம் அந்த இன்பத்திலேயே எங்கள் விழிகள் மூடட்டும்!
நாங்கள் பிறந்ததும் அதற்காகத்தான்!
எழுத்துக்கு எழுத்து. சொல்லுக்கு-சொல் சூடேற்றும் உம் ஞானத்தில் இந்த உலகம் மயங்குகிறது.
களை ததும்பி வழியும் உனது பேச்சுக் குவியலில் எங்கள் அறியாமைப் புனலாடித் தூய்மையாகிறது.
தத்துவ நிலா முகம் காட்டுகின்ற உனது விரிந்த அறிவில் - எங்கள் சிந்தனைச் சிறகுகள் ஓயும் மட்டும் பறக்கின்றன.
பொறுமை அலைபாயும் உனது பண்புக் கடலில், எங்கள் வாழ்க்கைப் படகு பயமின்றி செல்கிறது.
அறிவனே! எங்களை இந்தச் சமுதாயம் புறக்கணித்தபோது நீங்கள் வீட்டுக்கு வீடு தந்து கதவைத் தட்டினீர்!
நாங்கள் எங்கள் தேம்பலை நிறுத்திக் கொண்டு உம்மை வரவேற்கிறோம்!
வாடைக் காற்றின் உக்கிரம் அதிகமாக இருக்கும் இந்த நாட்டில், நீங்கள் தென்னகத் தென்றலுக்கு ஒரு ஜன்னல் அமைக்கச் சொன்னீர்கள்!
எங்கள் வீடுகளில் இருக்கும் வடகத்திக் கோதுமையைப் பன்றிக்குப் போடச் சொன்னீர்கள்!
நாங்கள் கையெடுத்துக் கும்பிடத் தகுதியற்ற படங்களை சாரலுக்கு அப்பால் வீசி எறிந்தீர்கள்!
நீங்கள் இந்த மாறுதல்களைச் சொல்லும் போது நாங்கள் புரிந்தவர்களாகவே இருந்தோம்!
நீங்கள் இட்ட கட்டளையை நாங்கள் நிறைவேற்றிய பிறகு, எங்களை ஒரு விசித்திர மண்டபத்திற்கு அழைத்துச் சென்றீர்கள்!
அங்கே நாங்கள் கண்ட காட்சி.........!
எங்கள் வாழ்நாள் பூராவும் மறக்க முடியாது!
அந்த மண்டபத்தில் அமைதி குடிகொண்டிருந்தது!
கலைகிப் போனகாலத்திற்கிடையில் பூத்திருக்கும் இலக்கியப் பூக்கள்!
அவைகள் அவிழவில்லை!
அதன் இதழ்களில் பழைய தமிழகத்தின் வீர வரலாறு தெளிவாக இருந்தது!
கலையின் மாண்பு—வெற்றியின் சின்னம்—கொடையின் விரிவு—கற்பின் திறன்—எல்லாம் ஒரே புதையல் மயம்!
வறுமையைத் தன் கதிரால் ஓட்டும் வயல்கள்!
வாடாத வாகையைப் பயிரிடும் போர்க் கலங்கள்!
கலம் மலிந்த கடல்—பொருள் மலிந்த களங்கள்'
பொன் மலிந்த நிலம்—எழில் மலிந்த மனைகள்—மனை மணக்கும் தமிழ்.
மண்ணில் விளையாடும் மழலையும்-மசக்கையில் இருக்கும் பெண்ணும்தானே மண்ணைத் உண்கின்றனர்!
மாற்றார் இந்த மண்ணைத் தொட்டால்—தொட்ட இடத்திலேயே பட்டொழிந்த காட்சி!
இதெல்லாம் காட்டித் தமிழன் நரம்பில், சுருதி குலையாமல் இழைத்து விட்டீர்!
எங்களை ஒரு வசந்தகால கலையில் கவர்ந்த பிறகு நாங்கள் இனப்பித்தர்களாகி விட்டோம்!
என் அறிவனே!
என் இரத்தக் கலப்பே!
உங்கள் அரசியல் அமைதியானது!
தொட்டிலில் தூங்கும் மழலையின் சிரிப்பைக் கூட விக்கல் சில நேரம் தலைகாட்டி அமைதியைக் குலைத்துவிடும்!
ஆனால் உங்கள் அரசியல் ஆழமானது-அதனால் அமைதியானது!
ஆரவார அரசியலை நீங்கள் விரும்புவதில்லை
அன்புள்ளவனே! உனது பேச்சில் எத்தனை ஆழம் இருக்கிறது என்று கரைமேல் இருப்பவருக்குத் தெரியவில்லை!
உங்கள் மொழிப்பற்றை வெறியர்கள் வெறுத்தனர்!
உன்னைப் பெற்ற மொழிக்குப் போராடுவது பைத்தியம் என்றால்—தத்துப் பிள்ளைகளின் சிந்தனைகள் கலங்கிய குட்டையே!
மொழி இழந்த ஊமைகளின் உளறலைவிட மொழியை வாழ வைக்கும் மழலையே தேவையானதாகும்!
நீங்கள் நீதிக்கும் நேர்மைக்கும் ஒவ்வொரு நொடியும் போராடிக் கொண்டிருக்கிறீர்!
அழுகிறவனும் தேம்புகிறவனும் உன்னிடம் வந்தால் சிரிக்கிறான்!
கதிரவனின் கீழே உங்கள் புகழ், பூமியை விட விரிந்து இருக்கிறது!
இந்த மக்களுக்காக எலும்பை சந்தனமாய் இழைக்கிறீர்!
மக்களின் குடும்பத்தில் ஒலிக்கும் சிரிப்பொலியே உம்முடைய ஆலயத்தின் மணியோசையாகும்!
தம்பிகளாகப் பிறந்த எங்களுக்கு உம்முடைய பரிவைத் தவிர வேறு சொத்து இல்லை!
நாங்கள் வெறுங் கையோடு போகாமல் "ஒரு லட்சியத்தை" எங்கள் இடுகாடு வரையில் தொடர விட்டீர்கள்!
நாங்கள் செத்தாலும் எங்கள் புதைகுழியின் மீது பூவாகப் பூத்து உலக்காகவே சிரிக்கிறோம்!
நாங்கள் இப்போது அனாதைகள் இல்லை'

எங்களின் தெய்வம் தெரு வாசலில் தேரை விட்டு இறங்கி எங்களுக்காகக் காத்திருக்கிறது!

இன்பத் தமிழகத்திற்குப் போகும் பாதையை அதன் விரல் சுட்டிக் காட்டுகிறது!

செப்டம்பர் மாதத்தின் அதிகாலையில் அறிவனின் பிறந்த நாள் விழா கிழக்கில் முளைத்தது!

எங்கள் முகமெல்லாம் விழாவின் வருகைக்காக காத்திருந்தன!

வானத்தின் மோன நிலையில் அந்த விழா பிறக்கும்!

அது எங்கள் மகிழ்ச்சியில் வளரும்!

எங்கள் அணைப்பில் உறங்கும்!

இதுவே பேரின்பத்தின் முதற் காவிய மாகும்!

★

---

மெய்ப்பொருள் தோன்ற விளக்கிடும் மேன்மை அறிவிரிவான்
ஐப்பொருண் மைக்கண் அளக்கும் அறிவியல் ஆய்ந்துணர்வான்
எப்பொருள் பற்றியும் ஆய்ந்தே எவர்க்கும் இயம்பிடுவான்!
அப்பதம் கைப்பட ஆழ்ந்தகன் றேங்கு பவர்இவரே!

தத்துவம் நேர்தமிழ்ச் சொல்மெய்ப் பொருள்அத் துறைதனிலும்
வித்தகன் ஆக விளங்கிட விந்தை விளைநினைவும்
முத்தமிழ்ச் சொற்போர் முழக்கும் தமிழர் இனமுழக்கும்
இத்தனை யும்சேர்த் திணைந்தவர் ஆகும் குடியரசே!

பிஞ்சுக் குழந்தையைப் போல்விளை யாடும் பெரியபிள்ளை!
கொஞ்சும் தமிழ்க்கு—தமிழர்க் குலத்துக் கொருகுறையே
மிஞ்சியிங் குற்றிடில் வெஞ்சினம் கொள்ளெழு வீறுடையோன்!
எஞ்சும்தன் மானப் பெரியார் மொழியே இவாநெறியே!

---

## பருவ மழை

கவிஞர் எஸ். டி. சுந்தரம்

அண்ணாவின் நல்ல தமிழ்
அழகு மயில்! பழத்தோப்பு!
மண்ணழகில் பூத்த மண
மலர்ப்படுகை! பருவ மழை!
வண்ண வண்ண வயலாடும்
வளமாள செங் நெல்லைத்
தண்ணமுதாய்த் தருகின்ற
தாயமுதக் கவிதை நதி!

பண்ணழகுச் சோலையிலே
பழகிவரும் பூங்காற்று!
கண்ணழகுக் கலைமான்கள்
களிதுள்ளும் கன்னிநடை!
விண்ணழகைப் பாடுகின்ற
வீங்குமனக் குயில்பாட்டு!
கிண்ணத்தின் பாலன்னம்
கிழவர்க்கும் இவர் எண்ணம்,

## அண்ணா என்றால்...

கவியோகி சுத்தானந்த பாரதி

அண்ணா யென்றால் அன்புருவம்
அண்ணா யென்றால் அறிவருவி
அண்ணா யென்றால் அணிதமிழாம்
அடுக்குச் சொல்லின் அழகினிமை
அண்ணா யென்றால் தன்மானம்
அண்ணா யென்றால் முன்னேற்றம்
அண்ணா யென்றால் புதுவாழ்வின்
ஆக்கங் கூறும் ஆர்முரசே!

தமிழர் இங்கே தழைக்குமட்டும்
தமிழ்மொழி இன்பம் தவழுமட்டும்
தமிழ்க்கொடி உயரம் பறக்குமட்டும்
தமிழர் உள்ளம் துடிக்குமட்டும்
தமிழர் நெஞ்சில் தமிழ்ரத்தம்
தாவித் தாவிப் பாயுமட்டும்
தமிழர் அண்ணா வழிகாட்டும்
தாரகை போலே துலங்குவாரே!

---

## புத்தகங்கள்

வீடு முழுவதும் நிறைந்திருக்கும் புத்தகங்கள், தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களைப் போன்றது!

—அறிஞர் அண்ணா

# வாடாத மலர்!

இலக்கியச்சித்தர் தங்கவயல் லோகிதாசன்

அறிஞர்க்கும் அறிஞராகி
அகிலத்தை வென்றகோவே!

வறிஞர்க்குத் தோழனாக
வாழ்ந்திட்ட வாடாமலரே!

கலைஞர்க்கும் கலைஞராகி
கலைவளர்த்த பெருங்கலைஞ!

தலைவனாய்த் தமிழர்நெஞ்சில்
தங்கிட்டத் பெருந்தலைவா!

அன்புக்கு இலக்கணமாகி
அறநெறி போதித்த சீலா!

பண்புக்கு உறைவிடமாகி
பைந்தமிழை வளர்த்த செல்வா!

சீலத்தின் எழிலுருவாகி
சீரியவழி காட்டியபுத்தா!

காந்தியத்தைக் கடைபிடித்துக்
காந்தம்போல் காந்தியானாய்!

---



சங்கவயல் தழைத்தத் தமிழ்ப் பயிரே—விளை
தரளமணி வாழ்க்கைக் கூட்டும் உயிரே!
தங்கவயல் லோகிதாசன் பணியே—அந்தத்
தமிழ்மணிகொண் டியற்றிடும்பொற் பணியே!

பலப்பலவாம் துறைகளிலே முன்பு—ஒரு
பதினெட்டு சித்தர்வாழ்ந்த துண்டு'
இலக்கியத்துத் துறைதனிலே இன்று—உள்ளார்
இலக்கியச்சித் தர்பேர்இவர் கொண்டு!

இன்பந்தரும் இலக்கியவர லாறு—சொல்லும்
நாடகங்கள் எவரும் நடத்து மாறு
அன்பர் இவர் செய்த(து) அரைநூறு—காணின்
ஆகும் அகவை இவர்க்கு நாற்பத் தாறு!

உள்ளதனை உள்ளவாறு சொல்லும்—இவர்
வாயுதிர்க்கும் சொற்கள்பனை வெல்லம்!
தெள்ளுதமிழ் நடையிவர்க்குச் சொந்தம்—இவர்
சிந்தைகவர் ஆசான் கலைஞர் என்றும்!

---

## அண்ணா ஒரு மாலுமி

அண்ணா துரையென்னும்
அண்ணல் தமிழ்நாட்டு

வண்ணான் அழுக்கெடுப்பில்;
வாய்மொழியில்—பண்ணாவான்:

சிற்பனெழுத் தோவியத்தில்;
செவ்வரசு; நாவாயின்

அற்புதஞ்சூழ் மாலுமியென்
ருடு;

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.

## தமிழுக்கு தனியழகு

எந்நாளும் மண்ணில்
இளையோரே மூத்தோரை

அண்ணா என அழைப்பர்;
என் அண்ணா மூத்தோரும்
வாய் நிறைய 'அண்ணா'

என அழைக்க வாழ்ந்ததனால்
தாய்த்தமிழில் ஓர் சொல்
தனியழகு பெற்ற தம்மா!

—காசி ஆனந்தன்.

# உயர்ந்த தமிழன்



காந்தன்.

வாழ்கதாழ் வுயர்வில் லாத்தனித் தமிழர்
வழங்குசெந் தாய்மொழி வாழ்க
வாழ்கசெந் தமிழைத் தாய்மொழி யாக
வழங்குசெந் தமிழினம் வாழ்க
வாழ்க பல் வளமும் பொருந்தியே தமிழர்
வாழ்தமி ழகமது வாழ்க

என்று உணர்ச்சிப் பெருக்கோடு பாடினார் இராவணக் காவியப் பெரியார் புலவர் குழந்தை.

தமிழனும், தமிழினமும், தமிழகமும்எப்படியிருக்க வேண்டும் — எப்படியிருந்து வாழ வேண்டும் என்ற தன்னுடைய உன்னதக் கருத்துக்களை கவிதை வரியாக்கிய பின் அதை யாரிடம் சமர்ப்பிப்பது, யாரிடம் சமர்ப்பித்தால் அக்கவிதை வரிகளின் நோக்கத்தை உள்ளப் பூர்வமாக உணர்ந்து அதைச் செயலாக்கி நிறைவேற்றுவார் என்று ஒருகணம் சிந்தித்தார். அதிக நேரம் பிடிக்கவில்லை. உடனே தனது நூலை எடுத்துச் சென்று அறிஞர் அண்ணாவிடம் சமர்ப்பித்தார்.

இது நடந்தது அண்ணா முதலமைச்சரான பின்பு அல்ல! இது நடந்தது 1945ல்! அதாவது, கதர்க் குல்லாய் அணிந்து கொண்டு சுதந்திரம் சுதந்திரம்- என்று கூவிக் கொண்டு போலித்தனமாக திரிந்தவர்கள் தாம் தலைவர்கள் என்று தமிழகம் தவறுதலாக போற்றிக் கொண்டிருந்த காலம்!

வெள்ளையனை வெளியேற்றுவோம் என்று கூறிக்கொண்டு நம்மை வடநாட்டுக்காரனுக்கு அடிமையாக்கிடத் துடித்துக் கொண்டிருந்தவர்கள் வெற்றி பெற்றுக் கொண்டிருந்த காலம் அது! அப்படிப்பட்ட நேரத்தில் அந்த ஏமாற்றுக் காரத் தலைவர்களையெல்லாம் இனங்கண்டு உண்மையான தமிழ்த் தலைவன் இவர்தானென்று அண்ணாவுக்கு அந்நூலை சமர்ப்பித்தார் என்றால், அண்ணா எவ்வளவு தூரம் தன்னுடைய நடவடிக்கைகளை தமிழ் முறைப்படி தமிழ்ப் பண்பாட்டின்படி நடத்திச் சென்றிருக்க வேண்டும் என்று புலப்படுகிறதல்லவா?

அண்ணாவின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தமிழனத்தைச் சீர்திருத்துவதோ அன்றி மேம்படுத்துவதோ போன்ற ஒரு முன்னேற்றத் திட்டம் அதன் அடிப்படையாக இருக்கும். உதாரணத்துக்கு வேண்டுமானால் கலப்பு திருமணங்களை அண்ணா ஆதரித்து தீவிரப் பிரசாரங்கள் செய்தார். ஏன்?

ஊழிக்காலந் தொட்டு இந்த இனம் மூன்றாகப் பிளவுபட்டுக் கிடந்தது. அந்தப் பிளவினைப் பயன்படுத்தி மற்ற இனங்கள் இந்நாட்டில் பிழைக்க நிரந்தர வழிதேடிக்கொண்டன. அதற்குக் காரணம் இந்த இன உணர்வு — சாதி உணர்வு என்பதை அறிந்திருந்தவர் நம் அண்ணா. இந்த சாதி உணர்வினை போக்கினால் தான் தமிழினத்தை ஒன்று சேர்க்க முடியும், அப்படித் தமிழினம் ஒன்றாக்கப்படுமேயானால் அதைவிட சிறந்த இனம் இவ்வையகத்திலேயே இருக்க முடியாது, என்ற பெருநோக்கு அவர்க்கிருந்ததால்தான் கலப்புத் திருமணங்களை ஆதரித்தார்.

அடுத்தது இந்தி! இது நுழைந்தால் தமிழ் மொழி அழிந்து விடும் என்பதை நாடே உணர்ந்திருந்தது, அப்போதிருந்த நாடாண்டவரைத் தவிர! அந்த இந்தி எனும் அபாயத்தை ஒவ்வொரு அங்குலத்திலும் அண்ணா எதிர்த்தார். அதன் விளைவுதான் இன்று

இந்த சிங்காரத் தமிழகத்திலே தமிழ் மட்டு மிருக்கிறது உயிரோட்டத்தோடு!

தமிழ் மொழி வழங்கும் தமிழர்தம் தாய்த் திரு நாட்டிற்குத் தமிழ் நாடென்ற பெயர் வைக்கப் பட வேண்டும் என்று நாடே உணர்வு பொங்கி எழுந்த போது அதை மறுத்து எள்ளி நகையாடியவர் இன்று மீண் டும் எப்படியாவது பதவிக்கு வரத் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு பச்சைத் தமிழர்! இந்தப் பெயர் மாற்றத்தில் எனக்கு இச்சையில்லை மக்களின் கருத்துக்கு என்னிடத்தில் மதிப் பில்லை எனக் கொச்சை மொழி பேசினர், அந்த சர்வாதிகாரி. அவர் ஆணவத்தை வீழ்த்தி நலிவுற்றிருந்த தன்னுடல் நலத்தை யும் மதியாது இத்தாய்த் திருநாட்டிற்குத் தமிழ் நாடெனப் பெயரிட்டு விழா நடத்தினர் அந்த செம்மல்!

அதனுல் தானே என்னவோ பக்தவத் சலம் தலைமையில் நடந்திருக்க வேண்டிய உலகத் தமிழ் மாநாடு அண்ணுவின் தலைமை யில் நடந்தது! தன்னுடைய தலைமகன் இவனே, இவன் தலைமையில் தான் எனக் கோர் விழா நடந்தால் நடக்க வேண்டுமென் றெண்ணி தமிழன்னையே தமிழ்த் துரோகி களான 'பச்சைத் தமிழரையும்' பத்து லட்சத் தையும் தேர்தலிலே வீழ்த்தி அண்ணுவை அரியணையில் அமரச் செய்தனள் என்று கூறு வோமேயானுல் மறுத்துரைக்க யாரேனும் உண்டோ?

இப்படிப் பட்ட ஒப்பாரு மிக்காருமில்லாத அண்ணுவின் பெயரும், படமும் ஒரு குறிப் பிட்ட சில துரோகிகளிடம் சிக்கி அவர்கள் வயிறு வளர்க்கப் பயன்படும் ஒரு கம்பெனிக்கு டிரேட் மார்க்காக மாறிவிட்டி ருக்கிறது. தமிழ்த் தாயின் அசல் வித்தாயி ருந்தால் அவர்கள் அப்படி செய்திருக்க மாட் டார்கள். அந்தக் கயவர்கள் இனியும் அவ் வாறு செய்யாமலிருக்க நம் தமிழக முதல்வர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவே அண்ணனின் பிறந்த நாளில் ஒவ்வொரு தமிழனும் விரும்புவது.

காந்தமோ இரும்பை மட்டும்
கவர்ந்திடும்; இழுக்கும்; ஈர்க்கும்!
காந்தன்! ஆம்! எழுச்சி மிக்க
எழுத்தாளர்! இவர்கை வண்ணம்

மாந்தர்தம் மனத்தை ஈர்க்கும்!
மாமேதை அண்ணு என்னும்
காந்தப்பேரெல்லை சார்ந்த
கழகத்துத் தம்பி காந்தன்!

நகைச்சுவை கலந்து நல்லக்
கருத்தினை, கற்ருேர் மற்ருேர்
மிகச் சுவைக்கின்ற பாங்கில்
மேன்மைகட்டுரைகள் தீட்டி

பகைப்புலன் காணு அன்புப்
பண்பினர்! மக்கள்-தொண்டர்க்(கு)
அகப்படும் கலைஞர் ஆட்சி
அணி பெற பணிசெய் தொண்டர்!

## தமிழர்களின் தனிப் பண்பு

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும்; தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வர வேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனல் தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருநாளும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

—அறிஞர் அண்ணு

# பாசக் கூட்டின் தாய்ப் பறவை அண்ணா

நீச மானிடர் நெஞ்சில் வஞ்சம் — அண்ணன்
பாசத் தாரையால் பளிச்சென விளக்கி
ஆசைக் கூட்டில் அடைத்து வைத்தனன் – வெளி
வேசம் போடும் தமிழினப்பகைவர்—
நாசம் அடைந்து நாணி மறைந்திட — அண்ணன்
நன்மையும் செய்து நாட்டினை வென்றவன்!
பாசக் கூட்டில் வந்தடைந்திட்ட — பல்
லாயிரம் பறவையில் ஒரு தனிப் பறவை — நான்!

அன்பில் அறிவில் அயர்விலா உழைப்பில் — அண்ணன்
இமயச் சிகரம்! சமய சஞ்சீவி!
பண்பில் பணிவில் பல்துறைப் படிப்பில்
பசிபிக் மாகடல்! பிரபஞ்ச வளையம்!
தன்னை மிஞ்சும் நிலையிலாத் தத்துவம்!
தமிழினத் தளபதி! தமிழ்மொழிக் காவலன்!
கன்னிப் போரில் கருத்தினை வென்றவன் – அண்ணன்
அன்னை எமக்கு! அன்புச் செவிலி

முப்பெரும் கொள்கை கடமை கண்ணியம் — நற்
கட்டுப்பாடென வகுத்தனன் பாரில்! எவரும்
ஒப்பிடும் புதுமுறை வாழ்வியல் அண்ணன்
சரித்திரம்! சகித்திடான் தமிழ்ப்பகை!
பேச்சில் தேனருவி! பேரறிவில் செங்கதிரோன் — சொல்
வீச்சில் கொடுவாள்! சமூகச் சமதர்மன்!
மூச்சில் தமிழ் உணர்வு! செயலில் பெருவீரன்!
மூப்பில் அமரன்! காலக் கைகாட்டி!

—இ. சு. முத்துசாமி எம். ஏ.; பி. டி.



முத்துசாமி இவர் பேர்!—"கவிக்
கடல்" முத்துக் குளித்திடுவார்!
'முத்துக் கவியாரம்'—தொகுப்பார்
முத்துக் கவிவாணர்!

மறையெனத் தமிழ் தந்தது—உலகம்
மதிக்கும் 'குறள்' என்பது!—அந்தக்
"குறளிடை மிளிரும் தமிழ்ப்—பண்பு"
குறித்திவர் ஆராய்வது!

"புன்னைப் பாட்டு"த் தொகுப்பு—இவர்
புனையும் மலர்க் குவிப்பு!
"இன்பக் காதல் காவியம்"—இவர்
இயற்றிய முதல் காவியம்!

## சொல்வன்மை

நாநலம் என்னும் நலனுடைமை; அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று.
ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.
கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.
திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்
பொருளும் அதனினூஉங் கில்.
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.
வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.
சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.
விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.
பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.
இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்.

---

The possession of that goodness which is called the goodness of speech is (even to others) better than any other goodness.

Since (both) wealth and evil result from (their) speech, ministers should most carefully guard themselves against faultiness therein.

The (minister's) speech is that which seeks (to express) elements as bind his friends (to himself) and is so delivered as to make even his enemies desire his (friendship).

Understand the qulities (of your hearers) and (then make) your speech; for superior to it, there is neither virtue nor wealth.

Deliver your speech, after assuring yourself that no counter speech can defeat your own.

It is the opinion of those who are free from defects in diplomacy that the minister should speak so as to make his hearers desire (to hear more) and grasp the meaning of what he hears himself.

It is impossible for any one to conquer him by intrigue who possesses power of speech, and is neither faulty nor timid.

If there be those who can speak, on various subjects in their proper order and in a pleasing manner, the world would readily accept them.

They will desire to utter many words, who do not know how to speak a few faultless ones.

Those who are unable to set forth their acquirements (before others) are like flowers blossoming in cluster and yet without fragrance.

---

அறிஞர் அண்ணா என்றதும் அழகுத் தமிழும் அடுக்கு மொழியும் கலந்த அவரது சொல் வன்மைதான் அனைவரது நினைவிலும் முதற்கண் வருவது.

''அறிஞர் அண்ணா அறுபத்தைந்து'' மலரிதன் தலைப்பு;

அனைத்துலகும் போற்றும் திருக்குறளின் அறுபத்தைந்தாவது அதிகாரம் 'சொல்வன்மை';

இவ்விரு பொருத்தத்தையும் கருத்திற் கொண்டுதான் பத்து குறட்பாக்களும் வெளியிடப் பட்டுள்ளது.

ஆங்கில, மொழிபெயர்ப்பு
By Rev. DREW & LAZARUS

# ARINGAR ANNA IN ANTHOLOGY



**MURUGUVANNAN**

Advancement of Tamil Language and Tamil people;
Annals of Resurrected Tamil Language;
Apostle of peace;
Architecture of true Democracy;

Bard of Southern People's Rights;
Beacon to the Forc-Seakers;
Belongings and Beloved of one and all in Homeland and abroad;
Blessings of twentieth century;
Break-through of love in politics;

Chum of Slum;
Compaign of Language Problem;
Computer of Age;
Candle of Sacrifice;
Chivalry of Dravidians;
Cardiographic Reading of Poor and Destitutes;
Concordance of world figures;
Contribution of Tamil-Nadu to the world;
Commander of Generation Gap;

Demogogue;
Deontology to the Politicians;
Dictionary of modern thoughts;
Demarcation of civilization;
Dignity, duty and decipline;
Dockyard of Dogmatisms;
Dramaturgist;
Dynamic orator;
Dynamiter;

Eloquent; Elucidated and Emotional Expression of both Tamil and English;
Encyclopaedia of knowledge;
Excavation of Tamil culture;
Emancipation of Bondage;
Exhortation and Exhileration;

Faculty Pompei;
Field Marshal in the frontier or peaceful Agitation for good cause;
Flood Light of propagation upon Sangam Literature; B. C.
Fore word and preface of Tomorrow's Tamil History;

Generator of self-respect;
Gauge to Tamils Talence;
Gentle among Gentry;
Gift for Humanity;
Georgics of peasants;
Golden period in Tamil History;
Grammarian;
Grammar to Leadership;
Guild of Good people;

Harmony of Hamlets;
Herald of Have-nots;
Historian;
Historical Figure;
History Maker;
Homeric;
Homerule Designer;
Hosanna of Homeless and Hungers;
Humanitarian;
Human version of THIRUKKURAL-A Universal Ethics;
Humour;

Idol of Idealism;
Image of Idealogies;
Illustrious;
Incombustible and Inextinguishable Inner Desires of Tamils;
Industrious;
Insight of south;
Interrogation to Scholars and Rulers;

Jasmine to Jealozies and Jezebels too;
Joyness of Joyless;

Lawful and Learned;
Legal and Loyal;
Lessons to opponents if;
Lexican of Leadership;

Literic and Master of Literature;
Logic of Manners and behaviours;
Longings of Tamils from long ago;
Loveable;

Man of Examplory;
Man of Magnificent and majesty;
Meakness and modesty;
Mass-media;
Ministry among menials;
Maestro of pathos of melancholies;
Metaphysician;
Millennium;
Mobile legislature;
Moses of captivated Tamils;

Notion of Nation;

Oracular oratory;
Opera of orientalism;
Outspoken and outstanding;

Pageantry of people's will;
Parliamentary;
Penitentiary bird;
Phenomenon and physical exposition of philosophy;
Patron of arts;
Peace and security to penuries and poverties;
Philanthrophy;
Pioneer of state autonomy;
Plea and pleader of paupers;
Polite;
Poet and poet laurate of poets;
Portal of poems;
Profile of political portrait;
Pulses of public;

Quotations to quote;

Raproachment between ruling and opposition;
Rationalistic;
Realism;
Reformation of society;
Reciprocity;
Rejuvenation and renovation of dilapidated Tamil race;
Rose of rose;

Saga;
Savan and savings of Tamils;
Seminary of self denial;
Slogan of southern rights;
Social reformation and revolution;
Song of songsters;
Spectrum of Southern India;
Stream of socialism;
Strategem of electioneering;
Symbol of social justice;

Thesauras and treasure of tamil;
Truce between people and ruling power;
Truepath;

Unique;
Unity;
Universal common resolution;
Unparellel;
Unrest unto last;

Verdict of time;
Vernacular vocabulary;
Versatile;
Vigilence of conscience;
Voice of sorrows;
Volume of southerns;

Waves of Hidden thoughts of wants;
Waterfall of rhetoric;
Welcome address to world peace;
Witty and worthy;

X-Ray review of agonies of 20th century;

Your's too;

Zephir of Tamil ocean!
Zero hour to unconvinced and unconstitutionals etc.

---

**A — AURORA OF WISDOM;**

**N — NATIONAL PATRIOTISM AND SPIRITUALISM;**

**N — NUCLEUS OF ARTS & LITERATURE;**

**A — AORTA OF TAMIL-RACE!**

## WAS ANNADURAI A LEADER ?

With boots sinking in the swamps onward went
The soldiers with their grit far from being spent.
Now and then a shrill cry broke the silence
Of the nebulous night from fence to fence.
Like the booming-roar of the water-fall
The birds rent the air leaving their trees tall.
Stunn'd, the chimps and gazelles became cowards
And fell before the lions and leopards.
The jungle was awake with fear and rage,
Whilst the army marched from castle to sage.
Empires and Annihilation, these two friends,
Though poles apart with their many a bends,
Have always had their last say in history
Where man trampled before Posterity!
Seasons may come and with it reasons go,
Leaders may rise spreading famine and woe;
But silently the cunning human race
Surveys the contours of Achievement's pace.
As once stung twice shy, Vanity is shunned-
Words and oaths, kisses and threats are all gunned!
What Anna won, his brothers scored again,
So here's a leader, proved in language plain.

—DUNCAN ALEXANDER.

DUNCAN ALEXANDER who is the proprietor of the advertising and marketing Firm of Alex and Alice, is a versatile English poet and writer. His oratorical ability is astounding; and he has been delivering inspiring lectures in the Senate House, University of Madras under the forum Youth Meets Experience.

# வெற்றி நமதே!

அமைச்சர்: என். வி. நடராசன்

"சொலல்வல்லான் சோர்விலான் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

தமிழ் மறையாம் குறள் நூல் தந்த வள்ளுவப் பெருந்தகையார் சொன்னதிது.

இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர்கள் மிகப்பலரல்ல; சிலரே!

எழுத்தாற்றலும், சொல்லாற்றலும் பெற்று அவ்வாறு புகழ்பெற்றவர்களில் ஈடோ இணையோ அற்றுத் திகழ்பவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள்.

இதில் இரண்டு விதக்கருத்துக்கு இடமில்லை.

நான்கு கோடித் தமிழ் மக்களும் அண்ணா அவர்களை இதய தெய்வமாக— இணையற்ற தலைவராக மதித்தார்கள் துதித்தார்கள் என்றால் அதற்கு மூலக்காரணமே இதுதான்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சாற்றல்—கேட்டாரை மயங்க வைக்கும்; மாற்றாரைக் கவர்ந்திழுக்கும் தனித்தன்மை உடையதாகும் என்பது நாம் அறிந்த அனுபவ பூர்வ உண்மையாகும்.

எழுத்துக்களிலும் அத்தகைய நேர்த்தி விளங்கும்,

இவ்வித ஆற்றல் உடையவர்களாலேதான் இணையற்ற தலைவர்களாகத் திகழ முடியும் என்பது உலகறிந்த உண்மை.

அதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர் தான் பேரறிஞர் அண்ணா.

அவர்வழி நடக்கும் கலைஞர், நாவலர், பேராசிரியர் முதலானோர் கழகத்தின்—தூண்கள்.

எழுத்தோ சொல்லோ இரண்டிலுமே உள்ள வளர்ச்சி பெறாமல், வெறும் உடம்பு வளர்ச்சியும், அதில் சிறிது கவர்ச்சியும் பெற்றவர்கள் தலைவராகத் தங்களுக்குத் தாங்களே மகுடம் சூட்டிக் கொண்டு திரிகிற வேடிக்கையையும் தமிழகம் கடந்த சிலகாலமாகக் கண்டு வருகிறது.

ஒருமுறை நான் அண்ணாவைச் சந்திக்கச் சென்றிருந்தேன்.

எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார்!

சூலூர் சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு அப்பொழுது தான் திரும்பிய நான்— "சூலூரிலிருந்து வருகிறேன்" கூறிவிட்டு உள்ளே குளிக்கச் சென்றேன்.

குளித்து விட்டு வந்து பார்த்தால்— 'திராவிட நாடு' இதழுக்காக அண்ணா எழுதியிருந்த ஒரு கட்டுரை மேஜை மேலிருந்தது அந்தக்கட்டுரையை அண்ணா அவர்கள் நான் குளித்து விட்டு வருவதற்குள் எழுதியிருந்தார்.

என். வி. என். வந்தார். எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்டேன். சூலூரிலிருந்து வருகிறேன் என்றார். அவர் மட்டுமா? ... நாம் எல்லோருமே சூலூரிலிருந்து வந்தவர்கள் தானே! ... என்று ஆரம்பமாகியிருந்த அருமையான கட்டுரை என்னைத் திரும்பத் திரும்பப் படிக்க வைத்து மகிழச் செய்தது.

அத்தகைய எழுத்தாற்றலை இன்று திடீர்த் தலைவர்களாக அவதரித்துள்ளவர்களிடம் காண முடியுமா?

கம்பராமாயணத்திற்கு அண்ணா அவர்கள் அளித்த எதிரான விவாதத்திற்குப் பதில் சொல்ல முடியாமல் தோற்ற பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் ச. சோ பாரதியார் ஆகியவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியினை நாமறிவோம்.

அப்படி அண்ணு அவர்களிடமிருந்த அந்தப் பேச்சு வன்மை திடீர்த் திருக்கூட்டத்தார் யாரிட மாவது உண்டா? இருக்கும் என்று நினைத்துத் தான் பார்க்க முடியுமா?

ஒருமுறை கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவிலே கலந்து கொண்ட பேரறிஞர் அண்ணு அவர்கள் — "திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவன் நானுக இருக்கலாம்; ஆனுல் நானே திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல" என்று கூறினுர்கள்.

அண்ணுவின் அந்தப் பெருந்தன்மை எங்கே— நிழலுக்காக கழகத்தில் வந்து ஒண்டியதுமல்லா மல் 'நான்தான் தி.மு.க — தி.மு.க. தான் நான்" என்கிற அகங்காரம் எங்கே!

அண்ணுவின் உண்மைத் தம்பிகள் நாங்களே என்று பறைசாற்றித் திரியும் வேடதாரிகளைத் தமிழகம் அடையாளம் கண்டு கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை. இதோ அதற்கான அறி குறிகள் தோன்றிவிட்டன.

வீசுகின்ற பெரும் புயல்காற்றில் தெருப் புழுதி யும், குப்பை கூளங்களும் பறக்கத்தான் செய்யும். சுழன்றடிக்கும் சூறைக்காற்றில் விண்ணை எட்டு மளவுக்கு அலைகள் உயர்ந்து செல்லவும் கூடும். ஆனுல் இயற்கையின் நியதிப்படி வெண்புருக் களும் வண்ணக்கிளிகளுமான பறவைகள் தான் விண்ணில் சிறகடித்து பறந்து திரியும். புழுதிப் புயல் கணநேரம் தோன்றி மறையும்.

நடந்ததும் இதுதான். புழுதிப்புயல் அடித் திருக்கிறது அரசியல் வானில்! பறவைகள் தற் போது அரசியல் வானில் பறக்கவில்லை என்பதற் காக இனி சிறகடித்துப் பறக்காது என்பதில்லை.

புயலுக்குப்பின் அமைதி ஏற்படத்தான் செய் யும். அந்த அமைதி ஏற்பட்டபின் வானவெளியில் பறவைகள் தங்கள் சாம்ராஜ்யத்தை அமைப்பது போல் தமிழக மக்களும் அரசியல் வானில் வெற்றி வெண்புருக்களை பறக்க விடுவது திண்ணம். நமது பணியை தொடர்வோம்! வெற்றி நமதே!

---

உணர்ச்சிப் பெருக்கும் உழைப்பின் உயர்வும்
பணிவும் கனிவும் பழகுதற் கேற்ற பண்—

பாடும் பரிவும் பளிங்கு மனமொடு
கூடற் கினிய குணநலம் யாவும்

இலங்கும் திருவாகும் என். வி.நட ராசன்!
விளங்கும் தமிழக அரசுமென் மேலும்

தொடர்ந்து பொதுமக்கட் தொண்டினுல் ஓங்கி
நடைபெற் றுவரும் நற்றமிழ் மக்கள்தம்

ஆட்சி அவையில் அமைச்சரா யுள்ளவர்!
ஆட்சி புரிந்திடும் ஆயிரம் ஆயிரம்

நற்பணி எல்லாம் நயமுடன், நாட்டுக்குச்
சொற்றுறை யாகிய செய்தித் துறையும்


இடர்பட் டிருந்துழல் மக்கள் எனும் பிற்—
படுத்தப்பட் டோர்நலன் பார்க்கும் துறையும்

சிறப்புறச் செய்யும் பொறுப்பேற் றுள்ள
திறம்சேர் அமைச்சர்! மணிவிழா கண்டவர்!

என்றும் கழகமுன் னேற்றம் தன் ஏற்றம் என்(று)
அன்றும் இருந்தவர்! என்றும் இருப்பவர்!

அண்டினோர்க்(கு) ஆனதைச் செய்பவர் என்றண்டி
கண்டுணர்ந்தோர் சொல்லது காண்!

# வாழ்த்திடுவாய் தமிழ்க்குலமே



டாக்டர். பி.எம். ரெக்ஸ். M.D., T.D.D., F.C.C.P. (U.S.A)

மூவேந்தர் படைநடத்தி

இமயத்தில் கொடிபொறித்த
மூத்ததமிழ் இனத்தினர்தம்
சரித்திரத்தின் பெருமைதனை

பாவேந்தர் இனிக்கின்ற

தேன்பாகுத் தமிழினிலே
பாடிவிட்ட நம் இனத்தின்
வரலாற்று அருமைதனைக்

காவலற்றுக் கிடந்திட்ட

தமிழர் தம் நாட்டின் தென்
கதவுக்கே தாழ்ப்பாள் தான்
போடாமல் ஏமாந்த

காவியத்தின் சீர் கேட்டைத்

தமிழுலகம் கண்டுணர
கனன்றெழுந்த தலைவனை
வாழ்த்திடுவாய் தமிழ்க்குலமே!

தமிழ்என்றால் இனிமைஎன்று

பொருளுண்டு என்றுநித்தம்
தமிழ்ப்புலவர் சாற்றிடுவர்
அதன் பொருள்தான் புரிந்ததில்லை!

தமிழ்என்றால் இனிமையுண்டு

என்பதனை அண்ணன் அவன்
தமிழ்முழக்கம் தன்னிலேதான்
கண்டுணர்ந்தோம் தம்பியர்நாம்!

தமிழ்மொழிபோல் இனிமைமொழி

சாற்றிட வேறில்லை யிந்நாள்
தமிழ்ப்பெரியார் திரு.வி.க
அன்று சொன்ன வாக்குதனை

தமிழ்த்தரணி உண்மையெனக்

கண்டுகொண்டு விண்டுரைக்க
தனை ஈந்த தலைவனையே
வாழ்த்திடுவாய் தமிழ்க்குலமே!

கடலோரம் துயில்கின்ற

கருணைநிறைத் தலைவனவன்
காலமெலாம் முரசறைந்த
கண்ணியத்தை கடமையினை

அடலேறு நிகர்த்ததுவாம்

தமிழரினம் கட்டுப்பாடாய்
அகத்தினிலே அருட்கோயில்
கட்டிவைத்துக் காப்பதற்கே

இடையூறு விளைத்துபெரும்

இன்னல் பல தந்துகொண்டே
இனிகழகம் இல்லையென்றே
ஈடேறாக் கனவு காணும்

மடையர்கள் தோற்றாரென

வரிசங்கம் கொண்டூதி
வாழ்வுதரும் அண்ணாவை
வாழ்த்திடுவாய் தமிழ்க்குலமே!

வாடிநின்ற பயிர்போல

மாத்தமிழர் சமுதாயம்
வாழ்விழந்து சீர்குலைந்து
தாழ்வுற்ற கதை தன்னை

நாடிவந்த தம்பியர் தம்

நெஞ்சத்தைப் பாகாக்கி
நாவினிக்க நாளெல்லாம்
பேசிடுவான் பேசிடுவான்

தாடியும் தான் நரைத்திட்ட

முதிர்நேரம் தன்னிலுமே
தமிழ் நாடி தளர்ந்திடவே
கொஞ்சமுமே பொறுக்காதான்

பாடிமகிழ் தமிழ்ப்புலவர்

பாட்டின்நல் கருப்பொருளாய்ப்
பார்புகழ வாழ்ந்தவனைப்
போற்றிடுவாய் தமிழ்க்குலமே!

வஞ்சத்தால் தமிழினத்தைப்

புறம்காண நினைத்திட்ட
வஞ்சகர் சூதுமதித்
திட்டங்கள் அழிந்துவிடும்!

கொஞ்சுகின்ற தமிழ்பேசும்

தமிழதம் ஆட்சியினைக்
கொள்கையற்ற கூட்டம் தான்
அழித்துவிட முடிந்திடுமோ?

வெஞ்சிறையின் இன்னல்களை

வெங்கொடுமைச் சாக்காட்டைக்
கொஞ்சமேனும் அஞ்சாது
ஏற்றுவிட்ட காரணத்தால்

பஞ்சடைத்த கண்நிறைந்த

ஏழையரைக் காத்திடவே
அண்ணன் கண்ட ஆட்சியினை
வாழ்த்திடுவாய் தமிழ்க்குலமே!

நாடுவிட்டு நாடுவந்த

நரிக்குணத்துக் கூட்டமின்று
'நான்' என்னும் அகந்தையுடன்
அருந்தமிழர் நாட்டையின்று

சாடுவதைச் சாடிடுவாய்!

புதுச்சரிதம் கண்டிடுவாய்!
'சாமான்யர்'.எனநம்மை
எண்ணித் தலை,கனத்த

நாடோடிக் கும்பல்தான்

நாடாள நினைப்பதுவோ?
நாடாண்ட தமிழினமே!
துயில்நீங்கி எழுந்திடுநீ!

நாடாளும் நற்றலைவன்

கலைஞரினை நமக்களித்த
நாவரசை—நல்லவனை
வாழ்த்திடுவாய் தமிழ்க்குலமே!

---



பார்த்திட வந்தேன் எனச்சொன்னால்
போதும் உடனே, பணிவுடனே,

"தீர்ப்பேன் உமது குறையென்ன?
தீராப் பிணியா? மனக்குறையா?

நோக்கம் உடனே நிறை வேறும்;
நொடியில் உரைப்பீர்; "எனக்கேட்டே

ஆக்கம் தருபவர்— 'ரெக்ஸ்' என்பார்!
ஆற்றும் மருத்துவர் இவராகும்!

# அந்த மனிதரைப்பற்றி அண்ணாவின் கணிப்பு

## சி. சிட்டிபாபு. எம். பி

### 1964—ம் ஆண்டு!

சென்னை மாநகராட்சியின் மேயர் தேர்தல் பற்றி கழகத்தின் செயற்குழு கூடி ஆலோசித்துக் கொண்டிருந்த நேரம்!

அண்ணாவும் கழகத்தின் முன்னணித்தலைவர்களும மேயர் தேர்தல்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாடியிலே தொலை பேசிமணி அடிக்கிறது. நடிப்பிசைபபுலவா கே. ஆர். ஆர். அவாகள் ஓடோடிச்சென்று தொலைபேசியை எடுத்து விசாரிக்கிறார்,

"அண்ணா இருக்கிறாரா அவரோடு நான் பேசவேணடு ம்?" என்று எதிர்ததிசையிலிருந்து ஒருகுரல் கேட்கிறது.

நடிப்பிசைப்புலவர் கீழேவந்து அண்ணா அவர்களிடம் "அண்ணா எம். ஜி. ஆர் பேசுகிறார். உங்களோடு பேசவேண்டுமாம்" என்கிறார்.

"என்ன பேசவேண்டும் என்றுநீயே கேள்— என்னிடம் பேசவேண்டிய அளவுக்கு பெரிய பிரச்னை ஒன்றும் இல்லையே என்கிறார் அண்ணா!

நடிப்பிசைப்புலவர் மீண்டும் தொலை பேசியில் அண்ணா சொன்னதைத் தெரிவிக்கிறார்.

"இல்லை நான் அண்ணாவுடன் பேசித்தான் ஆகணும்" என்கிறார் எதிர்த்திசைக்காரா! அண்ணா முக்கியமான விஷயமாம் உங்களிடமே பேசவேண்டுமாம்" என்று திரும்பவும் வந்து நடிப்பிசைப்புலவர் சொல்கிறார்.

"ராமச்சந்திரன் என்னபேசப் போகிறார்— எதைப்பற்றியாவது கட்டாயப்படுத்தப் பார்ப்பார்" என்று சொல்லி விட்டு வேறுவழியின்று அண்ணாவே தொலை பேசியில் பேசுகிறார்.

(அந்த உரையாடலை அப்படியே தருகிறேன்)

அண்ணா: என்ன எம். ஜி. ஆர்?

எம். ஜி. ஆர் : ஒருமுக்கியமான விஷயம்...

அண்ணா : சரி சொல்!

எம். ஜி. ஆர் : மேயர் எலக்ஷன் பற்றி...

அண்ணா : ஆமாம் நடக்கப் போகிறது!

எம். ஜி. ஆர் : படித்தஒரு கேன்டிடேட்டைப் போடலாம்.

அண்ணா : இருக்கிற கவுன்சிலர்களிலிருந்து தானே தேர்ந்தெடுக்க வேண்டும்.

எம். ஜி ஆர் : படித்த— நல்ல கேன்டிடேட் ஒருவரைப் போடலாமே... என்று தான்!

அண்ணா : அதைப்பற்றி கழகத்தின் செயற்குழுதான் முடிவு செய்யவேண்டும். செயற்குழு முடிவை அறிவிப்பவன் தான் நான். இதிலே தனியார் செல்வாக்குக்கு இடமேயில்லை.

எம். ஜி. ஆர் : சரிசரி யாரை மேயராக்குவது என்று எனக்குத் தெரியும்.

அண்ணா : ஆமாம் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

எம். ஜி. ஆர் : செட்டில் தான் இருக்கிறேன்.

அண்ணா : எந்த செட் என்ன சீன்?

கிளைமேக்ஸா; காமெடியா?

எம். ஜி. ஆர் : கிளைமேக்ஸ்தான்!

அண்ணா: நீ அந்த கிளைமாக்சைப்பார்த்துக் கொள்—நான் இந்தக் கிளைமேக்சைப் பார்த்துக் கொள்கிறேன்!

தொலை பேசியில் நடந்த உரையாடலை முடிவடைகிறது.

அண்ணா அவர்கள் தொலை பேசியை வைத்துவிட்டு வருகிறார். "எனக்கு ஆலோசனை சொல்கிற அளவுக்கு வந்து விட்டார். அரசியலையும் அரிதாரம் என்று கருதிக்கொண்டிருக்கிறாரா?" என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கி வந்தார்.

செயற்குழுக் கூட்டத்தில் மேயர் தேர்தலுக்கு என்னை நிறுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகாவது எம். ஜி ராமச்சந்திரன் சும்மா இருந்தாரா என்றால்—இல்லை!

சிட்டிபாபு சினிமாவில் நடிக்கிறார். மேயராக இருப்பவர் கண்டவர்களோடு நடிப்பது என்றால் அது கட்சிக்கே அவமானம். மேயராக இருக்கும்வரை நடிப்பதில்லை என்று எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும்". என்று பிடிவாதம் செய்தார்.

அண்ணா அவர்கள் என்னை அழைத்து சங்கடத்தோடு தயங்கிக்கொண்டே சொன்னார்.

"மேயராக இருக்கும்வரை சினிமாவில் நடிப்பதில்லை என்று எழுதிக் கொடுப்பா" என்றார்.

"என்ன அண்ணா நீங்கள் சொல்லி நான் மீற வா போகிறேன். அதற்காக ஏன் அண்ணா எழுதித்தரவேண்டுமென்கிறீர்கள்?" வெள்ளைப் பேப்பரில் கையெழுத்துப் போட்டுத் தந்து விடுகிறேன். நீங்கள் எதை 'வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளுங்கள் உங்களை மீறி நான் என்றும் நடக்கப்போவதில்லை" என்றேன்.

"எனக்காக நான் கேட்கவில்லை, மற்றவர்களுக்காகச் சொல்கிறேன். நான் சொன்னதை எழுதி கருணாநிதியிடம் கொடுத்துவிடு.' என்றார்.

தொண்டர்களை மதிக்கும்— அவர்களை வளர்க்கும் கலைஞரா இப்படிக் கேட்டிருப்பார் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள "கலைஞரா எழுதித்தர வேண்டும் என்று கேட்டார்?" என்று கேட்டேன்.

அண்ணன் திடுக்கிட்டு என்னைப் பார்த்துச் சொன்னார்: "ஊருக்கு இளைத்தவன் கருணாநிதி ஒருவன் தானா; கட்சிக்காக உழைக்கிறவன் அவன்! இப்படிக்கேட்டது கருணாநிதியல்ல சிட்டி நம்ம கட்சியிலே இருக்கிற வியாபாரி!" என்றார்.

"யாரண்ணா அந்த வியாபாரி!" என்றேன்.

அண்ணா அவர்கள் 'நமதுகட்சியிலிருக்கிற வியாபாரி' என்று குறிப்பிட்டது— இன்று அரசியலை வியாபாரமாக்கிக் கொண்டிருக்கிற நடிகர் ராமச்சந்திரனைத்தான்!

அண்ணா அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்— "ராமச்சந்திரன் பலநேரங்களில் தன்னை காந்தி என்றும் புத்தர் என்றும் கருதிக் கொண்டு பேசுகிறார்." என்று புன்முறுவலித்தார்.

இப்படி அண்ணா அவர்களின் காலத்திலேயே அரசியல் வியாபாரியாக இருந்தவர் தான் இன்று கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொண்டு அந்த சரக்கை விற்க முயற்சிக்கிறார்.

சினிமா உலகில் மிக உயர்ந்த நிலையில் இருந்த நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் சாதாரணமான நான் படத்தில் நடிக்க ஆரம்பித்ததுமே ஏதோ அவருக்குப் போட்டியாக வந்து விடுவேன் என்று தவறாக எண்ணிக்கொண்டார்.

அதே எம். ஜி. ராமச்சந்திரன்தான் இன்று கலைக்குடும்பத்தைச் சேர்ந்த— கலைஞர் குடும்பத்தைச்சேர்ந்த— கழகக்குடும்பத்தைச்சேர்ந்த முத்து நடிப்புலகுக்கு வந்தது கண்டு பொறாமை கொண்டு எதிர்த்துக் கொண்டிருக்கிறார்.

வியாபாரிகளுக்கு மட்டும் தான் இப்படிப் பட்ட பொறாமை புத்தி இருக்கும். ஆமாம் எம். ஜி. ராமச்சந்திரன் அண்ணாவின் கணிப்புப்படி அரசியல் வியாபாரிதான்!

சிட்டி பாபு எனும் பெயராம்— இவர்
சுறுசுறுப் பினிலே சிற் றெறும்பாம்!

எட்டுத் திசையிலும் கழகக்— கொள்கை
பரப்பும் செயலாளர் இவர் காண்!

ஆர்வமும் ஆற்றலும் மிகவே— பணி
ஆற்றுவதில் காண்பார் மகிழ்வே!— நா(டு)

ஆளும் மன்றஉறுப் பினராய்— தொண்(டு)
ஆற்றுகின்றார் மக்கள் உணர்வாய்!

கழகம் செய்யும் மக்கள் பணிகள்— கழகம்
காணும் தொலைநோக்குச் செயல்கள்— பற்றி

முழக்கம்செய் கழகக் குரலாம்— அது
முழங்கும் பொறுப்பிவர் திறலாம்!

# அண்ணாவும் மூன்றெழுத்தும்

பேரறிஞர் அண்ணாவுக்கும் மூன்றெழுத துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவற்றில் சில வருமாறு:—

தமிழ் மக்கள் அவரை அன்போடு அழைத் தது— "அண்ணா"

தமிழகத்தின் தவப்பயனாக அவர் உதித்த இடம்— "காஞ்சி"

தமிழகத்தின் பொற்காலத்திற்கு அவர் உருவாக்கிய இயக்கத்தின் பெயர்—தி. மு. க.

அண்ணா போதிதத மந்திரங்கள் மூன்று "க. க. க"

அவையாவது கடமை கண்ணியம் கட்டுப பாடு.

அண்ணாவுக்கு அறிஞர் என்ற பட்டத்தை வழங்கியவா —— "கல்கி" (கிருஷ்ண மூர்த்தி)

அண்ணா உயிருக்கு உயிராக நேசிதததது— தமிழ்

தமது கடைசி மூச்சுள்ள வரை அண்ணா எதிர்த்தது—'இந்தி'

அரசியலில் ஒரு குடும்பப் பாசத்தை உருவாக்கிக் காட்டிய அண்ணா தமது தொண் டர்களை அன்போடு அழைத்து—"தம்பி"

அண்ணா தமது கருத்துக்களை பலவடிங்க களில் தீட்டிய ஏடுகளில் ஒன்று—"காஞ்சி".

அழியாத இலட்சியங்களை உருவாக்கிய அண்ணா அவர்களது பெயருக்குக் களங்கம் ஏற்படுததவும் அவருடைய குறிக்கோள்— இலட்சியத்தை குழி தோண்டிப் புதைக்கவும், அவர் தோற்றுவித்த கட்சியையே அழிக்கவும் அவரால் வளர்ககப் பட்டவரின் பெயர்— எம். ஜி. ஆர்.

அந்த எம். ஜி. ஆருக்கு தி. மு. க. தொண் டர்கள் வழங்கியுள்ள சிறப்புப் பட்டம்— 'துரோகி"

நம்மிடத்திலிருந்து அண்ணாவைப் பிரித்துக் கொண்ட இடம்—சென்னை!

# இதய மலர்கள்

நாம் பிறந்த நாள் நமக்கு நினைவில்லை!

நமது பெற்றோர்களின் ஜனனநாள் நமது நினைவில் தங்கவில்லை!

நமது மழலைச்செல்வங்கள் பிறந்தநாள் நமக்கு மறந்து விட்டது!

ஆனால்—

நமது அண்ணனின் பிறந்தநாள் நமது நினைவில் என்றென்றும் இருக்கிறதே, ஏன்?

அவரின் நினைவு நமது நெஞ்சோடு நெஞ்சம் இணைந்து இருப்பதால்....!

அவரின் சுடர் முகம் நமது இதயச் சுவரில் சித்திரமாகப் பதிந்திருப்பதால்!

அவரின் கருணை உள்ளத்தை, நினைக்க நினைக்க இன்பம் பயப்பதால்!

சீரழிந்த நம்மை தனது எழுத்தால்— பேச்சால் தலை நிமிரச் செய்ததால்!

தாழ்ந்த தமிழகமே... என்று கூவி நமது தாயகத்தைத் தரணியில் பரணி பாடச் செய்ததால்!

தமிழ் அன்னையை அரியாசனத்தில் ஏற்றியதால!

வள்ளுவன் வகுத்த வழியிலே ஆட்சியை நடத்திச் சென்றதால்!

அவரின் உள்ளக்கடலில் விளைந்த முத்துக்களை நமக்கு அளித்தார். அந்த முத்துக்களின் ஒளியிலே நாம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடருகிறோம்!

அவரின் இதயப் பண்ணையிலே விளைந்த நன் மணிகளை நமக்கு அளித்தார் அந்தமணிகளை உண்டு நாம் உயிர் வாழ்கின்றோம்!

அவரின் சிந்தனைச் சுரங்கத்தின் தங்கத்தை நமக்கு அளித்தார். நாம் அவைகளை அணிந்து அழகு பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

அவரின் எண்ணக் கருவூலங்கள் நமக்கு வண்ண விளக்குகள்!

அவரின் எழுத்துக்கள் நமக்கு வழி காட்டிகள்!

அவரின் பேச்சு நமது பாதை!

அவரின் அன்பு தாயன்பை விடமேலானது

அவரின் பாசம், ஈடு இணையற்றது!

அவரின் ஆற்றல் ஒப்பற்றது!

அவரின் திறமை— தரணியே போற்றுகிறது!

அவரின் அறிவு— மாற்றாரும் பாராட்டுகின்றனர்!

அவரின் ராஜதந்திரம்— வையமே வியக்கிறது!

அவரின் ஆட்சி முறை— மற்றவர்களுக்குப் பாடம் சுற்பிக்கிறது!

அதனால் தான் நம்முடைய பிறந்த நாள் நமது நினைவிலிருந்து மறைந்தாலும் அவரின் பிறந்தநாளை நாம் நமது நினைவுப் பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்திருக்கிறோம்!

அவர் பிறந்த நாள்—

அவனிக்கோர் திருநாள்—

ஈராயிரம் ஆண்டுகளாக தமிழ் அன்னை தவமிருந்து ஒரு தவப்புதல்வனைப் பெற்றெடுத்தபொன்னாள்.

இத்தனை ஆண்டுகளாக அவரின் பிறந்த நாளன்று அவரின் முகமண்டலத்தைக் கண்டு மகிழ்ந்து—

அவரின் சுழலும் விழிகளைச் சந்தித்துப் பூரித்து—

அவரின் பேச்சைக் கேட்டு களித்து—

ஒரு இன்பபுரிப் பயணமே நடத்தி வந்தோம்!

ஆனால் இப்போதெல்லாம் அவர் உறங்கும் திசை நோக்கி நமது விழிகள் செல்கின்றன. நமது இதயங்கள் அவர் கோயில் கொண்ட இடம் நோக்கிப் பறக்கின்றன!

இனி நமது இதயமலர்களை அவரின் காலடியில் குவிப்போம்!

முல்லை சத்தி

# கட்டுரை இமயம்



சு. செல்லப்பன் எம்.ஏ.பி.டி

விண்ணிலே பன்னூறாயிரம் மீன்களிருப்பினும் ஒரு வெண்மதிதான் ஒளி வீசித் திகழ முடிகிறது. மண்ணிலே எண்ணற்ற மலைகளிருப்பினும் உயர்ந்த மலை என்ற பெருமை இமயம் ஒன்றுக்கு மட்டுமே கிட்டுகிறது. மக்களாய்ப் பிறந்தோர் பலரேயாயினும் ஒரு சிலர் மட்டுமே உயர்வுபெற முடிகிறது. காலந்தோறும் எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனராயினும் அவர்களில் ஏற்றம் பெற்றவர் மிக சிலரே! அவ்வாறு ஏற்றம் பெற்றவர்களில், மீனிடை முழுமதியாய்—மலையிடை இமயமாய், விளங்கும் பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கு உண்டு.

இலக்கியத்தில் இரு முக்கியப் பிரிவுகள் உள்ளன. ஒன்று கவிதை; மற்றொன்று உரைநடை. கட்டுரை, உரைநடை இலக்கியமாகும். "ஒரு நாட்டின் கட்டுரைச் செல்வம் அந்நாட்டுக் கவிதைகளைவிட முக்கியத்துவம் பெறுகிறது" என்றார் ஆங்கில ஆராய்ச்சியாளரான ஐபர் எவான்ஸ். "கவிதைகள் பெரும்பாலும் ஒரு நாட்டின் கலை உயர்வை அளக்கும் அளவுகோல்களாகவே அமைகின்றன. நாட்டு நடப்பை, அரசியலை, பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுவன கட்டுரைகளே"

உரைநடையில் கட்டுரைகள் மட்டுமின்றிச் சிறுகதைகளும், புதினங்களும் அடங்குவன. கதைகளிலும் புதினங்களிலும் பாத்திரப் படைப்புகள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் கற்பனைகள் படிப்பதற்குச் சுவை கூட்டுகின்றன. கட்டுரையோ செய்திக் கோவையாய் இருப்பதால் அவைபோலச் சுவை தருவதில்லை கவிதை, கதைகளில் ஆசிரியன் தன்னை மறைத்துக்கொள்ள முடியும். கட்டுரையில் ஆசிரியன் தன்னை அவ்வாறு கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது. ஆசிரியனின் கொள்கைகள், விருப்பு வெறுப்புக்கள் கட்டுரையில் வெளிப்பட்டே தீரும். எனவே கட்டுரை வரைதல் இலக்கியக் கூறுகளில் கடினமான ஒன்றாகும். அறிஞர் அண்ணா அவர்கள் அத்துறையில் வேறு யாரும் பெற முடியாத வெற்றியைப் பெற்றுள்ளார்கள்.

பண்டைய இலக்கியங்களில் உரைநடை பயன்படுத்தப் பெறவில்லை. சிலப்பதிகாரத்தை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று பதிகம் பகர்கிறது. இக்காப்பியத்தையடுத்து உரையாசிரியர்கள் எழுதிய உரைப்பகுதிகள் தென்படுகின்றன ஐரோப்பியர்கள் தொடர்பால் குறிப்பாக ஆங்கிலமொழி இங்கு வளர்ச்சியுற்றபின், தமிழ் உரைநடை பெருமளவு வளர்ந்துள்ளது. 18-ஆம் நூற்றாண்டில் மேல்நாட்டு ஆசிரியர்களான தத்துவபோதகசுவாமிகள், வீரமாமுனிவர் போன்றோர் உரைநடை வளர்ச்சிக்கு உதவினர். 19-ஆம் நூற்றாண்டில் இராமலிங்க அடிகள், போப்பையர், யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் போன்றோர் வளம் மிக்க உரைநடை எழுதினர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்த்தாத்தா உ.வே சா., கா.சு. பிள்ளை, பாரதியார், நாவலர் பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வையாபுரிப்பிள்ளை போன்றவர்களின் உரைநடைகள் பாராட்டத்தக்க வகையில் அமைந்தன. இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் பேரறிஞர் அண்ணாவுக்குச் சற்று முன்வரை மறைமலையடிகளார், திரு வி.க, இரா.பி சேதுப்பிள்ளை போன்றோரின் கட்டுரைகள் மக்கள் மன்றத்தில் சிறப்பான இடம் பெற்றிருந்தன இந்நிலையில் எழுத்துலகில் தோன்றிய அண்ணா, 'வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய'' என்று கம்பர் இராமனின் மேனி ஒளியில் சூரிய ஒளியும் அடங்கி ஒன்றியது என்று குறிப்பிடுவதுபோல் எழுத்துலகப் புகழனைத்தும் தம் புகழுள் ஐக்கியமாகும் வண்ணம் வளர்ச்சி பெற்றார். மறைமலையடிகளாரின் கட்டுரைகள் நீண்ட, பெருமிதம் நிறைந்த சொற்றொடர்களைக் கொண்டவை திரு. வி.க.வின் நூல்களில் எளிய, இனிய சிறிய சொற்றொடர்கள் இடம் பெற்றன. இரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் எழுத்தில் இலக்கியச் சொற்கள் கோவையாக இணைந்து ஏற்றம்தந்தன. இவர்கள் நடையைப் பின்பற்றிப் பலர் எழுதினர்; ஓரளவு வெற்றியும் கண்டனர். அண்ணா அவர்களின் நடையோ தனித்தன்மை வாய்ந்தது. அதைப் பின்பற்றி எழுதவேண்டுமென்று மிகப்பலர்

முயன்றனர். ஆனால் அந்நடையோ அண்ணாவைத் தவிர வேறுயாருக்கும் உரிமையாக மறுத்து விட்டது.

மறைமலையடிகளாரின் எழுத்து சைவ வளர்ச்சிக்குப் பயன்பட்டது. திரு. வி. க. வின் எழுத்து தொழிலாளர் நலன் காக்கும் கருவியாகத் திகழ்ந்தது. சேதுப்பிள்ளையவர்களின் எழுத்து வேலையும் வில்லையும் சுற்றி விளையாடியது. அண்ணாவின் எழுத்தோ சமுதாய சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டு வட்டமிட்டுச் சென்றது.

அண்ணா ஏராளமான நூல்களைப் படித்தவர். ''கன்னிமாரா நூல்நிலையத்தையே கரைத்துக் குடித்தவர்'' என்று பாராட்டப் பட்டவர். இவ்வாறு கலைபயில் தெளிவு இருந்தமையால் கட்டுரை வன்மை அவரிடம் செம்மையுற அமைந்தது.

சிறுகதை எழுதுவோர் சிலர் இருப்பர். அவர்களால் புதினம எழுத முடியாது. புதினம் எழுதுவோரிலும் சிலர் வரலாற்றுப் புதினங்களை வன்மையுடன் படைப்பர்; சமூகப் புதினங்கள் அவர்களிடம் செழுமை பெறுவதில்லை. இவ்விருசாராரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள் பக்கம் அடியெடுத்தே வைப்பதில்லை. ஒரு துறையில் மட்டும் பனைமரம் போல் உயர்ந்து கிளைகளின்றிப் பலர் இருக்க, அண்ணா அவர்களோ கிளைகள் அடர்ந்த-கிளைகள்தோறும் விழுதுகள் படர்ந்த-ஆலமாக விளங்கிடக் காண்கிறோம். சிறுகதைச் சிற்பியாக, வரலாறு, சமூகம் ஆகிய இருதுறைப் புதினங்களிலும் வல்லவராக அரசியல் அறிவு செறிந்த கட்டுரையாளராக, சீர்திருத்தச் சிந்தனை படர்ந்த சொல்வலாராக அவர் விளங்கக் காண்கிறோம்.

அவருடைய கட்டுரை அமைப்பு தனித்தன்மை வாய்ந்தது. வினைமுற்றின்றி இரண்டொரு சொற்கள் மட்டுமே இருக்குமாறு சொற்றொடர்களை அமைத்து அடுக்கிச் செல்லும் அழகிய பாங்கு அண்ணாவின் கட்டுரைகளில் தென்படும். ''கட்டை வண்டி. கரடு முரடான பாதை. சாலை வெயில். காட்டுப் பாக்கம். அங்கோர் கலியாணம். அதற்கு இவர் புரோகிதம்''. இது அவர் எழுத்து. நிறுத்தக் குறிகளைப் பற்றிக் கவலைப்படாமல் சிந்தனையின் வேகத்தில் தொடர்ந்து எழுதிச் செல்வதும், ஒரு கருத்து முற்றுப்பெறும் இடத்தில் சொற்றொடர் முடிவதும் அவருக்கென அமைந்த தனி இயல்பாகும். நிறுத்தக் குறிகளின்றியே அவர் எழுதினாலும், அவர் எழுத்தின் பாங்கு எந்தக்கருத்தில் எழுதினாரோ அதை நமக்குத் தெள்ளிதின் உணர்த்துவதாய். சிறு சிறு சொற்றொடர்களாகப் படிக்கத்தக்க வகையில் அமைந்து சிறக்கின்றன. நிறுத்தக் குறிகள் இருக்க வேண்டிய இடத்தில் நாமே நிறுத்திப் படிக்கவேண்டியவாறு சொல்லொழுங்கு அமைந்து விடுகிறது. எடுத்துக் காட்டாக இதைக் கூறலாம். ''தாமரை பூத்தகுளம். அதன் அருகே பழமுதிர்ச் சோலை. மற்றோர் புறம் வாசமலர்த் தோட்டம். அதையொட்டிச் சிற்றாறு. இவைகளைப் புறத்தே கொண்ட மனோகர மாளிகை. அதற்கோர் அலங்கார உப்பரிகை. உப்பரிகையின் மீது உயிருள்ளனவோ எனச் சந்தேகிக்கத் தக்க உன்னதச் சிலைகள். சிலைகளின் உடலிலே தகதகவெனத் தங்கம்போல் பிரகாசிக்கும் ஆடைகள். அந்த ஆடைகளைக் கண்டு மயங்கி மேலே தத்தி விளையாடும் பஞ்சவர்ணக் கிளிகள். கிளிகளைப் பிடிப்போம் வாரீர் என்று பாங்கியரைக் குயிற் குரலால் கூவி அழைத்து, அன்னமென நடந்து சென்று, கிளி பிடிபடாததால் ''பறந்தனவே பஞ்சவர்ணக்கிளிகள்'' என்று பாங்கியரிடம் கூறத் திரும்பி நோக்கும் நீல விழியாள்''... இன்னும் சொற்றொடர் முடிவுறவில்லை. ஆனாலும் இதனுள் பத்துச் சிறு சொற்றொடர்கள் பின்னிக் கிடக்கின்றன. ஒன்றில் கூட வினை முடிவு இல்லை. என்றாலும் அந்த நடையிலே மயங்கித் திளைக்கிறோம். வினைமுற்றின்றிச் சொற்றொடர்களை விளையாட வைக்கும் விந்தையை நினைத்து வியக்கின்றோம்! ஒரு கருத்தை விளக்க இடையிடையே சிறு சிறு கோடுகளிட்டு எழுதும் வழக்கம் தமிழ் உரை நடையில் தோன்றக் காரணமாயிருந்தவர் அண்ணா அவர்கள்தான் என்று கூறுதல் மிகையாகாது.

அவருடைய கட்டுரைகள் உணர்ச்சி நிறைந்தவை; படிப்போரையும் அந்த உணர்ச்சி கொள்ளச் செய்பவை; சிந்தனையைத் தூண்டுபவை; சிறந்த மேற்கோள்களை சிறு சிறு கதைகளை, அழகிய உவமைகளை கட்டுரையில் இடையிடையே புகுத்திக் கருத்தை விளக்குபவை. அவருடைய கட்டுரையைப் படிக்கும் போது, எந்த ஓர் இடமும் விளக்கமின்றி இருக்கின்றது என்று யாரும் குறிப்பிட முடியாது.

அடுக்குமொழி, இரட்டைக்கிளவி, எதுகை மோனை ஆகியன எழிலுற பயன்விளைக்கும் வகையில் அவருடைய கட்டுரைகளில் அமைந்திருக்கக் காணலாம். அதனால் அவருடைய உரைநடை கவிதைபோல ஓசை நயம்கொண்டு அமைந்திருக்கிறது. அவ்வாறு எழுத முடியாதவர் அது ஒரு நடையா என்று பேசுவதுண்டு. அதற்கு அவரே மறுமொழி கூறுகிறார்: ''ஓசை நயம் அடுக்குத் தொடர். இரட்டைக்கிளவி போன்றவை பூங்காவில் உள்ள கவின் மலர்கள்

போன்றவை. தாமாக மலரவேண்டும். மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலைதொடுக்க வேண்டும். ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீரவேண்டும் என்று முயற்சித்தாலோ காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும், குறையும். ஓசை நயத்தில் இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்து. பொருள் தருபவையே தேவை. பொருளற்று, பொலிவற்று, வலிந்து கொண்டுவருவது மொழிக்கு நாமே நம்மையறியாமல் செய்துவரும் தீங்காகும் அளவும். முறையும், தேவையும் அறிந்து பயன்படுத்தினால் எழிலும் சுவையும் நிரமபக் கிடைக்கும். தவறினால் எரிச்சல் கிளம்பும். ஏளனம் பிறக்கும்": அண்ணா அவ்வுக்தியின் அளவும். முறையும். தேவையும் அறிந்து பயன்படுத்தினார். எனவே எழிலும் சுவையும் நிரம்பக் கிடைத்தன. இவ்வாறு செய்ய முடியாதோர் வீணாக அவர் மீது எரிச்சல் கொண்டனர். அதனால் ஏளனத்துக்கு ஆளாயினர்.

அவருடைய கட்டுரைத் தலைப்புக்கள் கவர்ச்சியானவையாய் இருக்கும். தலைப்பும் முடிப்புமே தனி இலக்கியமாய்த் திகழும். "சிறைச்சாலை என்ன செய்யும்?' என்ற தலைப்பிலே தொடங்குவார். அதை 'அதோ, ஒலிக்கிறது கொடுமுடி கோகிலத்தின் குரல்" என முடிப்பார். மணிமேகலை திரைப்படத்தில் கொடுமுடி இசையரசி திருமதி சுந்தராம்மாள் "சிறைச்சாலை என்ன செய்யும்?" எனத்தம் மணிக்குரலில் பாடியுள்ளார். அப்பாட்டு வரியே கட்டுரையின் தலைப்பாதலால் "அதோ ஒலிக்கிறது கொடுமுடி கோகிலத்தின் குரல்" என நயம் மிளிர முடிப்பார்.

தொடக்க காலத்தில் அவருடைய எழுத்தில் பிறமொழிச் சொற்கள் இடம்பெற்றிருந்தன. 'ஜூலியா பெரிய ஜாலக்காரி, சிங்காரி, சிரித்துச் சித்ரவதை செய்யும் சொகுசுக்காரி: வெறும் அலங்காரி மட்டுமல்ல, பலே கைகாரி சாதுர்யமான பேச்சுக்காரி! சரசத்திற்கு அதிகாரி. ஆடவர் கூட்டத்திற்கு அவளோர் சிங்காரி! அகஸ்டசின் மானத்தைக் கெடுத்த அபசாரி!" இங்கே வடமொழிச் சொற்கள் மிகுந்திருப்பதைக் காண்கிறோம். படிப்படியே பிறமொழிச் சொற்களைக் களைந்து இறுதி நா- நாட்களில் இன்றியமையா நிலை இருந்தாலொழிய பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தாது தனித்தமிழ் நடையில் எழுதும் போக்கை அவரிடம் காணமுடிகிறது. பிறமொழிச் சொற்கள் அவர் எழுத்தில் இடம் பெற்றமைக்கு அவரே காரணம் கூறுகிறார். மேதைகள் பலர் பிறமொழிச் சேர்க்கையும் பிறமுறைகளின் சேர்க்கையும் தமிழ்மொழியை வளர்க்கும் என்று காரணம் காட்டி இந்தத் தீயசெயலைச் செய்து வருகின்றனர். இதனையறிந்து தடுத்திட வேண்டும் என்று எண்ணம் கொண்டு பணியாற்றும் நம்மாலேயே கூட (சற்று அதிகமாகவே என்றால்!) பிறமொழிச் சேர்க்கையும் நீக்கிப் பேசவும் எழுதவும் முடியாமல் ஆக்கிவிட்டிருக்கிறது. ஏனெனில், நாம், தூய தனித்தமிழ் சித்திரவதை செய்யப்பட்டுப் பிறமொழியும், பிறமுறையும் கலந்து, பேச்சும் எழுத்தும் 'மணிப்பிரவாளம்' என்ற வடிவு கொண்டு, தமிழும் வடமொழியும் கலந்து இழைந்து வழங்கப்பட்ட நாட்களிலே பயின்றவர்கள். எனினும் புலவர் பெருமக்களின் அறிவுரை கேட்டதால் இந்தக் கலவை தீதுபயப்பது என்று தெரிந்து, தமிழ் மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூய நோக்குடன் பணியாற்றி வருகின்றோம். நானே பலதடவைகளில் பேசியான பிறகும் எழுதியான பிறகும், இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே என்று வருத்தமுறுவதுண்டு." இவ்வாறு உணர்ந்தமையால் அவருடைய உரைநடை படிப்படியே தனித் தமிழ் நடையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதையும் இறுதி நாட்களில் அவர் எழுத்தும் பேச்சும் தூய தமிழ் நடையில் அமைந்தன என்பதையும் அறிய முடிகிறது.

அண்ணா அவர்கள் எழுத்தாளனின் கடமை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். புதுமையை நிலைநாட்டும் எழுத்தாளர்கள்— சாதியை ஒழித்து நீதியை நிலை நாட்டும் எழுத்தாளர்கள்—மடமையை மாய்த்துக் கொடுமையைக் களைந்து, சிறுமையைக் காய்ந்து. மக்களின் பெருமையை, வாழ்வின் அருமையை விளக்கும் எழுத்தாளர்கள்—கோபுர அளவுக்குக் குவிந்திருக்கும் பழமைக் குப்பைகளைத் தமது சிந்தனை என்னும் சண்டமாருதத்தால் அழித்தொழிக்கும் எழுத்தாளர்கள்—அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று அரண் அமைத்துப் பதுங்காது எவர் எப்படிச் சொல்லியிருந்தால் எனக்கென்ன என் கருத்து இது என்று எடுத்துரைக்கும் எழுத்தாளர்கள்—எண்ணிக்கையில் பெருக வேண்டும்; வளம்பெற வேண்டும். அவர்களால் அநீதியையும், அறியாமையையும் அகற்ற முடியும். ஆணவத்தை இடுப்பொடித்து ஈன வாழ்வை உருக்குலைத்து ஊரார் எண்ணத்திலே புதுமுறுக்கு ஏற்றி. ஐயம் அகற்றி, ஒப்பற்ற ஓர் வெற்றியைக் காட்ட முடியும்." அண்ணா அவர்கள் அவர் கூறிய இவ்விலக்கணத்திற்கேற்ப மறுமலர்ச்சி எழுத்தாளரின் முன்னோடியாக, தலைவராக விளங்கி வழிகாட்டியிருக்கிறார்கள். 'தெளிந்த எழுத்தாளர்கள்

பளிங்குபோன்ற நீர் நிலையை ஒத்தவர்கள்'' என்கிறார் அறிஞர் லேண்டார். ஆழம் அதிக மாயினும் தெளிந்த தன்மையால் அதன் உள்ளேயுள்ள பொருள்களோடு அடித்தளமும் நன்றாகத் தெரியும். ஆழம் குறைவாக இருந் தாலும் கலங்கல் நீர்க் குளமோ ஆழம் மிக்கது போல் தோற்றமளிக்கும். கலங்கிய தன்மை யால் அதன் உள்ளேயுள்ள பொருளையும் அறிய முடிவதில்லை. அண்ணாவின் கட்டுரைகள் தம் உட்பொருளைத் தெளிவுற வெளிப்படுத்தும் மணிநீர்க் குளங்களாகும்.

அவருடைய "உரத்த சிந்தனைகள்'' என்னும் உள்ளடக்கம், எடுப்பும் மிடுக்கும் மிக்க உருவத் தில் நடைபோட்ட திறம்தான் அவர் கட்டுரை கள்! தூங்காது இரவெல்லாம் விழித்தெழுதிய அவருடைய எழுத்துக்கள் தூங்கிய தமிழரை எழுப்பிப் புதியதோர் உலகு நோக்கி ஏறுநடை போடச் செய்தன. வார்த்தைகள் அவரை ஆட்சி செய்ததில்லை; அவர் அவற்றை ஆளுமை யோடு ஆட்சி செய்ய—அவ்வார்த்தை வார்ப் புக்களோ நம் நெஞ்சையெல்லாம் ஆட்சி செய் தன; செய்கின்றன; செய்யும்.

---

'சிலம்பொலி' கற்பின் சிறப்பு திசையெல்லாம் சீர்மணக்க
நலம்பொலி ஊர்புகார் தொட்டு நகராம்நன் மாமதுரை
புலம்பொலி ஈறாய்ப் புகலும் புலவர் ஒருவரெனில்
'சிலம்பொலி செல்லப்பர்' என்றுபேர் கொண்டு திகழ்பவரே!

அன்பும் அடக்கமும் கொண்ட இவர் கல்வி ஆற்றலிலும்
பண்பும் பழகும் பழக்க வழக்கம்பண் பாட்டினிலும்
எண்ணிலா கட்டுரை ஏடு களில்தீட்டி இன்புறலும்
இன்னவர்க் கென்றும் இயல்பா யமைந்த தெனத்தகுமே!

அண்ணாவை அண்ணாவின் ஆற்றலை ஆய்ந்தாய்ந் தறிந்தவர் ஆம்
அண்ணாவின் கட்டுரை அத்துணை யும்ஆய்ந் துணர்ந்துசொல்லி
கண்ணான காஞ்சி அறிஞரின் கட்டுரைச் சீர்சிறப்பை
எண்ணி விளக்கி இசைந்தளித் துள்ளார் இமயமென்றே!

---

## ஜனநாயக அரசியல்!

ஜனநாயகத்தில் கட்சிகள் இருந்துதான் தீரும். அந்தக் கட்சிகள் ஏற்றம் இறைப்பது போல ஒன்றுக்கொன்று துணைநிற்றல் வேண்டும்.

ஏற்றக் கோலானது ஒரு பக்கம் சாயும்போது மறுபக்கம் உயரும். உயரும் பக்கம் சாயும் போது சாய்ந்த பக்கம் உயரும். இதுதான் கட்சிகளின் நிலை!

ஏற்றம் இறைப்பவர்கள் எப்படி ஏற்றக்கோலுக்குள் நின்று செயல்படுகிறார்களோ— அவ்விதமே கட்சிகளில் இருப்பவர்கள் ஜனநாயகக் கோட்டுக்குள் நின்றே செயல்பட வேண்டும்!

ஏற்றக்கோலை மீறி நடப்பவன் எப்படி கிணற்றில் விழ நேரிடுமோ—அவ்விதமே ஜனநாயகத்தை அழிப்பவர்கள் அவதிக்குள்ளாக நேரிடும்!

ஏற்றப் பாட்டுக்கும் எதிர் பாட்டு உண்டு! ஆனால், அவையிரண்டுமே இனிமை யானதாக இருக்கும். ஜனநாயக அரசியலும் அவ்வதந்தான் செயல்படவேண்டும்!

—பேரறிஞர் அண்ணா

# அண்ணா ஏற்றிய

# அணையா விளக்கு

## அமைச்சர்: ச. இராமச்சந்திரன்

தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

—குறள்

செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள். மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சி நாள். தமிழ் மக்கள் கொண்டாட வேண்டிய பொன்னாள். ஒரு கையில் ஏடு ஏந்தியும், மறு கையின் ஆள் காட்டி விரலை உயர்த்தியும் நாட்டுக்கு நல்லது உணர்த்திய அண்ணா தோன்றிய நன்னாள்.

- ☐ சமுதாயத் துறையில் பகுத்தறிவு!
- ☐ அரசியல் துறையில் மக்களாட்சி!
- ☐ பொருளாதாரத்துறையில் சமதர்மம்!

ஆகிய மூன்று நோக்கங்களும் தமிழ் மக்களிடையே மறுபடியும் மலர வேண்டும் என ஓயாது பாடுபட்ட ஒளிவிளக்கு அறிஞர் அண்ணா அவர்கள்.

**தோன்றிய துறைகளில் புகழ்படத் தோன்றினார்!**

அவர் எடுத்துக் கையாண்டது எத்துறையாயினும், அத்துறையில் தனித்தன்மை ஏற்படுத்த இம்மூன்று பேருண்மைகளும் கருவியாக இருந்தன. கதையாயினும், கட்டுரையாயினும் எழுத்தாயினும், பேச்சாயினும், எதை எடுத்துக்கொண்டாலும், மனிதத்தன்மையின் ஒற்றுமைக்கும், ஒன்றுபட்ட உணர்வுக்கும் மேம்பாட்டுக்கும் பாடுபட்ட உள்ளம் அவரது உள்ளம். எந்தத் துறையின்கண் அண்ணா தோன்றிடினும் புகழோடு தோன்றினார் என எண்ணுமிடத்து வள்ளுவர் தந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார் அண்ணா என்றால் மிகையாகாது.

**காலத்தைக் கடந்து வாழும் சாதனைகள்!**

தமிழக அரசைக் கைப்பற்றியவுடனே, பேசும் மொழியின் பெயரால் பிறந்த பொன்னாட்டுக்கு 'தமிழ் நாடு' எனும் பெயர் சூட்டும் பெருமை அவருக்கே கிடைத்தது. தமிழ் நாட்டிலிருந்து இந்தியை அடியோடு ஒழித்த பெருமையும் அவரையே சாரும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனும் பெருமை பேண, சாதி, மத, இன, மொழி பாகுபாடுகள் ஒழிந்திட, சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துப் பரப்பிய எழிலோன் என்பதால், அரசுக் கட்டில் ஏறியதும் சுயமரியாதைத் திருமணம் செல்லும் என சட்டம் ஆக்கியதும், கலப்பு மணம் செய்துகொள்ளும் தமிழ் மக்களுக்கு தங்கப் பதக்கம் அளிக்க முன் வந்ததும், அவர் சொல்வீரர் மட்டுமல்ல, செயல்வீரர் என்பதையும் மக்களுக்கு உணர்த்தி நின்றது. அரசு பணி செய்வது, அன்றாடங் காய்ச்சிகளின் நன்மைக்கே ஆக இருக்கவேண்டும் என எண்ணி சமதர்மத் திட்டங்கள் பல நிறைவேற்றிட்ட பாங்கையும் நம்மாலே காண முடிந்தது.

**சமதர்ம நெறியில் நாட்டம்!**
**சமநீதியில் நம்பிக்கை!**

சமதர்ம திட்டம் பற்றி அவர் குறிப்பிடுகையில்,

"வெள்ளம் அழித்திடும்-வாய்க்கால் வளமூட்டும்; செல்வம்-சிலரிடம் சென்று குவிந்திடுவது வெள்ளத்துக்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும்; சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும்.

எனவேதான் - சிந்தனையாளர், செல்வம் பெருக்கிட வேண்டும்; அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும் என்று எடுத்துக் கூறினர். நமது அரசுகூட அந்த சமதர்ம லட்சியத்தைப் போற்றுகிறது. நமது கழகம் சமதர்ம நெறியிலே நம்பிக்கையும் நாட்டமும் கொண்டிருக்கிறது" எனக்கூறியுள்ளார். இங்ஙனம் தம்மால் தம்பி

யர் துணைகொண்டு அமைக்கப்பட்ட அரசு, சிறந்த சமதர்ம அரசாக விளங்க வேண்டும் என்பது அவரது விருப்பம்.

**போற்றும் வகையில் மட்டுமல்ல,**
**பொருமைப்படும் வகையில்!**

அவ்வழி நோக்கின், நல்ல பல சமதர்மத் திட்டங்களை—மாற்ருரும் போற்றும் வகையில் மட்டுமல்ல பொருமைப்படும் வகையில்—கழக அரசு கலைஞர் தலைமையில் செயலாற்றி வருகின்றது. சமுதாய சம்மதம் பெற்று, சட்டத்தின் துணை நாடாமல், நம் கழக அரசு செயலாற்றிய சமதர்மத் திட்டங்களில் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்
2. இலவசக் கண் ஒளி வழங்குத் திட்டம்
3. கை ரிக்ஷா தொழிலாளர் மறுவாழ்வுத் திட்டம்

போன்றவையே அவை. அரசு நிதி இல்லாது, நன்கொடை திரட்டி, இச்சமதர்ம திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. பணம் உடையார், இல்லார்க்குத் தாமே முன் வந்து வழங்குதல் மிகவும் உத்தமமான முறை அல்லவா? இருப்பவர் இல்லாதாரிடத்து பகிர்ந்து கொள்ள தாமே முன் வருவரேல். சமதர்மம் நிறைவேறுவது எளிதல்லவா? இதனைத்தான் முன்பு காந்தியடிகளும், இன்று விநோபாபாவே அவர்களும் வலியுறுத்தினர். எனினும் நடைமுறைப் படுத்திய பெருமை. அண்ணு வழி வந்த கலைஞர் அவர்களையே சாரும் என்பதில் பெருமைப் படுவதற்குப் பதிலாக, பொருமைப் பட்டு என்ன பயன்?

1. உழுபவனுக்கே நிலம் சொந்தம்
2. உழைப்பவனுக்கே தொழில் சொந்தம்
3. பஸ்கள் தேசிய மயம்
4. தொழிற்சாலை தேசிய மயம்
5. நில உச்ச வரம்புச் சட்டம்
6. குத்தகைதாரர் கடன் நிவாரணச் சட்டம்
7. குடிசைகளை மாற்றி மாடி வீடுகள் தருதல்
8. நிலப்பட்டா தருதல்
9. மனைப்பட்டா இலவசமாக வழங்குதல்

போன்ற எண்ணிறந்த சமதர்ம சாதனைகளையும் அடுக்கிக் கொண்டே கழக அரசு வருகிறது எனும்பொழுது. இறும்பூது எய்தாத இதயமும் ஒரு இதயமாமோ! அண்ணு அவர்கள் கண்ட கனவை கொண்ட லட்சியத்தை அரசின் மூலம் நிறைவேற்றி, புகழைத் தமிழகத்திற்கு சேர்த்துத் தருவது கலைஞர் ஆட்சி அல்லவா? அத்தகைய நல்லாட்சியை கண்டது அறிஞர் அண்ணு அல்லவா?

அங்ஙனமே சமுதாய சீர்திருத்தத் துறையின் கண்ணும் அறங்காவலர்களாக ஆலய அர்ச்சகர்களாக, கிராம மணியக்காரர்களாக, உயர்நீதி மன்ற நீதிபதியாக, உதவி கலெக்டராக, காவல் துறை அதிகாரியாக, தாழ்த்தப்பட்ட மக்கள் இடம் பெற்றிருப்பது, அண்ணு அவர்கள் காட்டிய சமுதாய சீர்திருத்த வழி அன்ருே? எல்லாவற்றிற்கும் மேலாக, தாழ்த்தப்பட்ட வகுப்பில் பெண் எடுத்து. கலப்புத் திருமணத்தை தமது குடும்பத்திலேயே நடத்திக் காட்டி, அண்ணுவின் உண்மையான தம்பி என்பதை நிருபித்து நிற்கும் கலைஞருக்கு அண்ணன் பிறந்த நாளன்று வாழ்த்து அளித்தல் நம் கடன் அன்ருே?

**மக்களாட்சியின் மாண்பினைப் போற்றும்**
**தம்பியர்**

இப்படி நோக்குமிடத்து சமதர்மவாதிகளாக, சீர்திருத்தக்காரர்களாக, மாநில சுயாட்சிகோரி உண்மையான மக்களாட்சியை நிறுவப் பாடுபடுவோராக. தமது தம்பிமார்கள் அமைய வேண்டும் என அயராது பணியாற்றிய உள்ளம் அண்ணுவின் உள்ளம், என்பது தெளிவாகும்.

**வன்முறை தவிர்த்தார்**
**நன்முறை நாடினுர்**

இத்தகு இலட்சியங்களை அடைய சிறிது கூட வன்முறை கூடாது என்பது அவரது உறுதியான கொள்கை 'கத்தியைத் தீட்டாதே, தம்பி! புத்தியைத் தீட்டு!' எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தவரல்லவா. அவர்? அவர்தம் பெயரைச் சொல்லி வயிறு வளர்க்கவும் பதவி பெறவும், சுயநல வாழ்வு காணவும் துடிக்கும் சில கருத்துக் குருடர்கள், இந்நிலை உணராது வன்முறையாளர்கள் வலையில் சிக்குவதும். கலவரங்களைக் கட்டவிழ்த்து விடுவதும் அவர் ஏற்றிய ஒளி விளக்கான கழக அரசை அணைக்க நினைப்பதும் எங்ஙனம் அண்ணு வழியாகும்?

திடீர்ப் பிள்ளையார்களை கட்சியில் சேர்த்துக்கொள்வதும். டெல்லியில் சென்று அவர்கள் ஆசிகேட்டு காலடி வீழ்வதும், பணக்கார வர்க்கத்தோடு தொடர்பு கொண்டு பணியாற்றுவதும் எப்படி பேரறிஞர் அண்ணு அவர்களது கொள்கை ஆகும்?

**வேடம் கலையும்! உண்மை புரியும்!!**

அண்ணுவின் கொள்கைகள் மிகத் தெளிவானவை; தீவிரமானவையுங்கூட. அவற்றைப் பின்பற்றப் போதிய சக்தி அற்றவர்கள் அண்ணு பெயரால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, சில தகிடுதத்தம் செய்கிருர்களே தவிர வேறல்ல. தமிழ் மக்கள் வெண்ணெய்க்கும்

சுண்ணாம்புக்கும் வேறுபாடு தெரியாதவர்கள் அல்ல. யார் உண்மையானவர்கள், அரசியல் ரீதியாக அண்ணா அவர்களால் முறையாக பயிற்றுவிக்கப்பட்டவர்கள் என்பதும், யார் யார் போலிவேடதாரிகள் என்பதும் வெளியாவதற்கு நீண்ட காலம் பிடிக்காது என்பது மட்டும் உறுதி. இன்றில்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டடால் நாள் பல கடந்து என்றாவது ஒருநாள். நெல்லுக்கும் பதருக்கும் வேறுபாடு நிச்சயம் புலனாகும்!

**அண்ணா வாழ்கிறார்**

**தொண்டர்கள் வடிவில்!**

அண்ணா அவர்கள் பெயரைச் சொல்லி இன்று பலர் ஆட்டம்போடுவதைப் பார்க்கின், அண்ணா அவர்கன் இன்று உயிருடன் இல்லையே என்ற கவலை நம்மை நெஞ்சுருகச் செய்கிறது. இருப்பினும் அண்ணா அவர்கள் இல்லையாயினும் அவர் வளர்த்த உணர்வுகள் பல லட்சக்கணக்கான தொண்டர்கள் வடிவில் நம்மிடையே உள்ளன!

**அன்பின் ஒளியே!**

**அணையா விளக்கே!**

எனவே, இப்போது தமிழ் மக்களின் நாலரைக்கோடி இதயங்களிலும் இடம் பெற்றிருக்கும் அறிஞர் அண்ணாவுக்கு தமிழ் மண்ணைக் கவ்வியிருந்த இருட்டை நீக்க புறப்பட்ட அத் தமிழ்த்தாயின் தலை மகனுக்கு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'அணையா விளக்கு' ஏற்றி வைத்திருப்பது மிக மிகப் பொருத்தமானது: போற்றற்குரியது! அறிவுக்கு உருவகம் ஒளிதான்: அறிஞருக்கு உருவகம் அணையா விளக்குதான் என்பதை பொருத்தமுற நினைந்து, டாக்டர் கலைஞர் அவர்கள் 'அணையா விளக்கு' 'ஏற்றி வைத்ததின் மூலம், அண்ணனின் அருமைத் தம்பி என்பதை உலகுக்கு உணர்த்தி நிற்கிறார்!

'மற்றவர்களுக்கு சலிப்பேற்படுமுன் எதனையும் முடித்துக் கொள்ள வேண்டும்' என அடிக்கடி சொல்லும் அண்ணன், யாருக்கும் சலிப்பு ஏற்படாததற்கு முன்னபேயே தமது வாழ்க்கையை விரைந்து முடித்துக் கொண்டார் போலும்! எனினும் எண்ணிலா இதயங்களில் அண்ணனின் இனிய நினைவுகள் அணையாத விளக்காக நிலைக்குமே தவிர, என்றைக்கும் சலிக்காது என்பது மட்டும் திண்ணம்!

**வாழ்க அண்ணாவின் புகழ்!**
**வளர்க தொண்டுள்ளம்!!**

---

நூற்குள் அமிழ்ந்தெழுவார்: நுட்பம் மிகவுடையார்;
போக்கு வரத்தில் புதுமைஉண் — டாக்கிவைத்த(து)
யார்? இராமச் சந்திரன்! ஆம்! பண்ணுருட்டி யார்; அலால்வே(று)
ஓர் இராமச் சந்திரனா உண்டு!

நாட்டுடமை ஆக்கிவிட்ட நாள்முதலாய் போக்குவரத்(து)
ஓட்டுநரும் ஊர்தி நடத்துனரும்—நாட்டினரை
என்று மதித்தார்? மதிக்கின்றார் இந்நாள்! அந்
நன்றி ராமச் சந்திரர்க்கே நாடும்!

---

# FIGHT HYPOCRISY

Democracy is not a form of Government alone — it is an invitation to a new life — an experiment in the art of sharing responsibility and benefits—an attempt to generate and co-ordinate the inherent energy in each individual for the common task. Hence we cannot afford to waste a single talent, impoverish a single man or woman or allow a single individual to be stunted in growth or be held under tyranny. The Universities, the graduates it sends forth year after year should annihilate the forces that attempt at aggrandisement and tyranny, fight against cant and hypocrisy and enthrone human dignity.

—ANNA

# அண்ணா-மலை

**பி.வி.கிரி**

பேரறிஞர் அண்ணா அவர்களை ஒரு மலைக்கு ஒப்பிடலாம். எப்படி? மலையானது தன்னை அகழ்வாரைத் தாங்கும் பொறுமையுடையது. அண்ணா அவர்களும் 'எதையும் தாங்கும் இதயம்' படைத்தவராக-பொறுமையின் பெட்டகமாகக் காட்சியளித்தார். காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் இல்லாத இன்சொல் அன்பராகவும் அவர் திகழ்ந்தார். அன்பு, பண்பு, அறிவு, அடக்கம் முதலிய நற்குண நற்செயல்களில், தான் ஒரு 'குணக்குன்றாக' விளங்கி வந்தார். அவரது, புகழ் நாடு நகரங்களிளெல்லாம், பட்டிதொட்டிகளிலெல்லாம் ஏன், தமிழர்கள் இந்த உலகில் எங்கெங்கு இருக்கின்றார்களோ அங்கெல்லாம், 'குன்றின் மேலிட்ட விளக்கு' போல் சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

நோய்களைக் குணப்படுத்த மலையிலுள்ள சஞ்சீவி சமயத்திற்கு உதவுவதுபோல, அறியாமை என்னும் நோய் மக்களிடையே பரவியிருந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் பகுத்தறிவுச் செல்வங்களை அவர்களுக்கு வாரி வழங்கினார். 'சில்'லென்ற தென்றல் காற்று மலையிலிருந்து புறப்படுவதுபோல, அண்ணாவின் இனிய சுபாவம், நிதானப் போக்கு அனைவரையும் கவர்ந்தது. தென்றலைப் போல அவரது எழுத்து நடை, பேச்சின் அழகு கற்றாரையும் மற்றாரையும் கவரவல்லதாயிருந்தது.

பசியைப் போக்கும் தேனும் கிழங்கும் மலையில் மண்டிக் கிடக்கும். மலைத்தேனைப் பற்றி நாம் கேள்விப்படவில்லையா! அறிஞர் அண்ணா அவர்களும் ஒரு மலைத்தேனாகக் காட்சி அளித்தனர். எழுத்தில், பேச்சில், செயலில் அவர் தேனாக இனித்தார். சோர்வுற்றிருந்தவர்க்கு அறிவுப் பசியால் களைப்புற்றிருந்தோர்க்கு கிழங்காசவும், தேனாசவும் இருந்து அவர்கள் சோர்வை-களைப்பைப் போக்கியிருக்கிறார்.

மலையிலிருந்து விழும் அருவி சலசலவென வீழ்ந்து, கலகலவென பூமியை முத்தமிட்டு ஓடும். அவரிடமிருந்தும் கருத்து மணிகள் அருவி போலத் தடையின்றிக் கலகலவென ஓடி,படிப்போரை இன்பத்தில் ஆழ்த்துகின்றன. மேகங்கள் மலையில் முட்டி மழையைப் பொழிவதுபோல, அண்ணாவிடமிருந்து கருத்து மழைகள் பொழிந்து கொண்டேயிருந்தன. மலையில் எந்நேரமும் பயிர்பச்சைகள், செடிகொடிகள் செழித்து வளர்ந்து உள்ளங்களைக் கவர்வது போல அண்ணாவிடம் செழித்து வளர்ந்துள்ள பண்பு எல்லாக் கட்சியினரையும் கவர்ந்தது. இப்படி மாற்றார்க்கு அண்ணா அவர்கள் ஒரு மலையாகவும் ஒரு சஞ்சீவியாகவும் திகழ்ந்தார்—என்றால் உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

மலை எப்படி உயர்ந்து, பரந்து நிற்கின்றதோ அப்படி அண்ணா அவர்களின் உள்ளமும் உயர்ந்தது: பரந்தது, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்று சொன்ன அண்ணாவின் உள்ளம் எத்தனை உயர்ந்தது!

மலையிலுள்ள பொருள்கள் மக்களுக்குப் பயன்படுவதுபோல, அண்ணாவின் அரிய தொண்டுகள் தமிழ்ப் பெருங்குடியினர்க்குப் பெரும்பயன் விளைக்கின்றன. குன்றில் விளங்கும் கோயிலைப் போல அண்ணா அவர்களும் மனமென்னும் குன்றில் ஓர் கோயிலாக விளங்குகிறார்.

(தொடரும்)

---

சிறுவயதில் பள்ளி சென்று — கல்வி
பயின்ற நாளே சிந்தை கொண்டு
சிறுகதை — கட்டுரை — பாடல் — புனையும்
திறம்பெற்ற திவர் உழைப் பாற்றல்!

பலபேர் வரலாறு குறித்தும் — உலகில்
பரவிடும் செய்திகள் குறித்தும்
கலைச்சுவையைச் சேர்த்துக் குழைப்பார்— தகவல்,
கட்டுரை கவிதைகள் வடிப்பார்!

பலப்பல இதழ்களின் மூலம் — அவற்றைப்
பரப்புவதில் பெரும் ஆர்வம்!
சிலகாலம் 'தனி அரசு' இதழில் — பணி
செய்தார்! இன்றோ 'தமிழரசு'சில்!

நிறைமனத்தர் பி. வி. கிரியே — இவர்
நினைவெல்லாம் செந்தமிழ்ப் பணியே!
துறையிவர் தேர்ந்ததோ எழுத்து — அந்தத்
துறைதான் இவர்வருவாய்த் துறைக்கு!

# பேசட்டும் என்றார் பேச்சாளன் ஆனேன்

**திருவேங்கடம்**

தன்னேரில்லாத தமிழ்நாடு முதல்வராம் டாக்டர் கலைஞர் அவர்களின் அமைச்சர் அவையில் அண்மையில் இடம் பெற்றுள்ள மாண்புமிகு சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் முன்னாள் முதல் அமைச்சர் திரு. எம். பக்தவச்சலனாரை எதிர்த்துப் போட்டியிட்டார்கள். அவர்களை ஆதரித்து ஆவடியில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் மேடைக்கு வந்துவிட்டனர். பேச்சை நிறுத்துமாறு மேடையில் இருந்த பலர் என் சொக்காயை பிடித்து இழுத்தனர். அதை பார்த்துவிட்ட அண்ணா அவர்கள், "அவர் தொடர்ந்து பேசட்டும்" என்றும், "நான் கொஞ்சம் (ரெஸ்ட்) இளைப்பாறுகிறேன்" என்று கூறினார்கள். அண்ணா அவர்கள் முன்னிலையில் பயந்து பேசிக்கொண்டிருந்தேன். அண்ணா அவர்கள் தொடர்ந்து பேச அனுமதி அளித்ததால் சுமார் ஒன்றரை மணிநேரம் பேசி, பல இடங்களில் கைதட்டல்களைப் பெற்றேன். பிறகு அண்ணா அவர்கள் பேசும்போது, "எனக்கு முன்னால் பேசிய நண்பர் கூறியது போல" என, பல இடங்களில் என் பேச்சிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசியது இன்னும் என் நினைவில் நிழலாடிக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் "எனக்கு முன்னால் பேசிய பேச்சாளர்" என்றும் கூறினார்கள். அதனால் தான் இன்றும் கழகத்தில் பேச்சாளனாக இருக்க ஆசைப்படுகிறேன்; இருக்கிறேன்! பேசிமுடித்தபின் அண்ணா அவர்கள் என்னை உற்சாகப்படுத்தினார்கள். அப்போது பக்கத்திலிருந்த சி. வி. எம். அவர்கள், "இன்று இந்த பேச்சாளருக்கு ஓர் ஆண் மகவு பிறந்திருக்கிறது. அதனால் மிகவும நன்றாக பேசினார்" என்று கூறியவுடன், அண்ணா அவர்கள் "அப்படியா?" என்று மகிழ்ச்சியோடு கேட்டார்கள். நான் அவரிடத்தில் ஒரு பேனாவையும் காகிதத்தையும் கொடுத்தேன்! தேர்தல் நிதிக்காக ரூ. 5/-ம் கொடுத்தேன்! நன்றி பெருக்கோடு பெற்றுக்கொண்ட அண்ணா அவர்கள், "பேச்சாளர் திருவேங்கடத்தின் பேச்சு பல ரூபாய் தாளும். இருந்தாலும் பக்தவத்சலனாரைத் தோற்கடிக்க சிறிய காணிக்கையாக ரூ. 5/-ம் கொடுத்துள்ளார்கள். அவருக்கு ஓர் ஆண்மகன் பிறந்திருக்கிறான். அந்த மகவுக்கு 'இளங்கோவன்' என்று பெயரைச்சூட்டுகிறேன; குழந்தையைப் பார்க்காமல் தந்தையின் முகத்தைப் பார்த்து பெயர் சூட்டுகிறேன்" என்று பெருத்த கைஒலிக்கிடையே பெயர்சூட்டு விழா செய்து அதனை அவர் கைப்பட எழுதி எனக்கு சாசனம்அளித்துள்ளார்கள். இது அண்ணாவோடு நெருங்கி பழகிய சம்பவங்களில் ஒன்றாகும். தேர்தல் நேரத்திலும் கடுமையான உழைப்பின் போதும் களிப்புற பேசி மகிழவைத்த நிகழ்ச்சியும் சாதாரணதொண்டனை உற்சாகப்படுத்தும் நிகழ்ச்சியும் என்றென்றும் மறக்கமுடியாததற்கு ஒரு சான்றாகும். வாழ்க அண்ணாவின் புகழ்!

---

அண்ணாமலை (தொடர்ச்சி)

இப்படி தமிழ் மலையாய் நம்மிடையே வாழ்ந்து கடல் அலையால் சூழ்ந்த கரையோரம் ஆழ்ந்து விட்டார் அண்ணா! அவர் வழி நடந்து தமிழன் என்ற உணர்வோடு மலையென நிமிர்ந்து நிற்போம்; தமிழன் பெருமை கண்டு மற்றவர் மலைக்க வைப்போம்!

★

---

திருவேங்கடம் எனும் ஏழ்மலை
வடக்கே திகழ் மலையாம்!
திருவாம் தமிழ் திகழ் நாட் டிதன்
சீராள் வடக் கெல்லையாம்!

திருவேங்கடம் எனும் பேர் திதழ்
செழுஞ்சீர் மனம் உடையார்! அவர்
ஒருநாள் பழ கிடினும் உடன்
படுவார் உத விடுவார்!

கழகம் எனில் கடமை செய்து
களிப்பார் பக லிரவாய்!
பொழுதும் செய்திப் பொழிலாம் இதழ்
பலவும் விற் றிடுவார்! – நல்

உழைப்பால் உயர் திருவேங்கடம்
உளமே உறை நண்பர் – என்றும்
அழியாத்தமிழ் அறிஞர் அண்ணா
கலைஞர் அணித் தொண்டா!

---



# அடக்கத்தின் அடையாளம்

உவமைக் கவிஞர் சுரதா

பகுதியினால் சொல்விளங்கும்; கதிரோன் எட்டிப்
பார்ப்பதனால் பகல்விளங்கும்; செந்நெல் சேர்ந்த
தொகுதியினால் வயல்விளங்கும்; புருவ வில்லின்
துணைகளினால் விழிவட்டம் விளங்கும்; நீரின்
மிகுதியினால் விரிந்தகடல் விளங்கும்; வீழா
வீரத்தால் போர்விளங்கும்; வியக்கத் தக்க
தகுதியினால், அடக்கத்தால், எழுத்தால், பேச்சால்
தமிழ்த்தலைவர் அறிஞரண்ணா விளங்கி வந்தார்!

கற்றுநின்றார் பக்கத்தில் அண்ணா, கல்விக்
களஞ்சியமாய் நின்றிருந்தார்! சிறந்த பட்டம்
பெற்றுநின்றார் பக்கத்தில், அந்தப் பட்டம்
பெற்றார்க்கும் மேலாகச் சிறந்து நின்றார்!
சுற்றிநின்றார் அனைவர்க்கும் அறிஞர் அண்ணா
துணையாக நின்றிருந்தார்! வயதி னாலே
முற்றிநின்றார் வீழ்வதுபோல் வீழ்ந்தா ரேனும்
மூவேந்தர் புகழ்போலே நிலைத்து விட்டார்!

அவர்தலைவர் யாரென்றால் பெரியார்; வாழ்வில்
அவர்நண்பர் யாரென்றால் என். எஸ். கிருஷ்ணன்;
அவர்மதித்த கவிஞர்யார் என்று கேட்டால்,
அன்னவர்தாம் பாவேந்தர்; ஆமாம்! இங்கே,
அவர் பகைவர் யாரென்று கேட்கா தீர்கள்?
அவருக்கு நண்பருண்டு; பகைவர் இல்லை!
அவர்வார்த்தை முத்திரைகள் மூன்றே மூன்றாம்!
அவை, கடமை; கண்ணியமாம்; கட்டுப் பாடாம்!

எண்ணுடைய மரக்கூட்டம் சேர்ந்த சோலை,
இருண்டநிழல் வழங்குதல்போல்; ஓரி ரண்டு
பெண்ணுடைய பெருவள்ளல் பாரி என்பான்.
பிறருடைய வறுமையினைத் தீர்த்து வந்தான்;
கண்ணுடைய வள்ளலெனும் துறவி நல்ல
கருத்துடைய நூல்கள்பல நமக்குத் தந்தார்.
மண்ணுடைய உலகத்து மாந்த ரெல்லாம்
மதியுடையார் ஆகும்வழி அண்ணா சொன்னார்;

வினையெச்சம் பெயரெச்சம் என்பர்; வாழ்வில்
வேறெச்சம் ஒன்றுளதாம்! அஃது காமப்
பனியெச்சம் என்கின்ற குழந்தை யன்று!
பாரிலது புகழென்னும் எச்ச மாகும்!
சினையெச்சம் காணாத அறிஞர் அண்ணா
தேயாத புகழெச்சம் விட்டுச் சென்றார்!
மனையெச்சம் தனிப்பெருமை பெறுவ தில்லை!
மண்ணுலகில் புகழெச்சம் மறைவ தில்லை!

இன்னுமவர் சிலகாலம் இருந்தி ருந்தால்,
இங்குள்ளோர் குறைபாட்டைத் தீர்த்தி ருப்பார்!
இன்னுமவர் சிலநாடு சென்றி ருந்தால்,
எத்தனையோ ஒத்திகைகள் பார்த்தி ருப்பார்!
இன்னுமவர் எழுதிவைத்துச் சென்றி ருந்தால்,
எத்தனையோ கருத்துக்கள் கிடைத்தி ருக்கும்!
இன்னுமவர் ஓய்வெடுத்துக் கொண்டி ருந்தால்,
இதற்குள்ளே எமன்சந்தித் திருக்க மாட்டான்!

மீனவரைச் சிலர்நினைப்பர்; தயிர்பால் வெண்ணெய்
விற்பவரைச் சிலர்நினைப்பர்; மற்றும் இங்கே,
கானவரைச் சிலர்நினைப்பர்; பரணர் போன்று
கற்றாரைச் சிலர்நினைப்பர்; இதுநாள் மட்டும்
வானவரை நான்நினைத்த தில்லை! செய்யுள்
வடித்தோரை அடிக்கடிநான் நினைப்ப துண்டு!
நானவரை நினைப்பதுபோல், அறிஞர் அண்ணா
நற்பணியை நினைக்கின்றேன் ஒவ்வொரு நாளும்!

---

உவமைக் கவிஞர் சுரதா எனில்அவர்க் கொப்புவமை
கவிதை சிலவற்றில் காட்டுதல் மெத்தக் கடினமென்பேன்
கவிதைகள் மட்டும் இயற்றிட வல்ல கவிஞரல்ல
கவிதை இயற்றும் கவிஞர் பலர்உரு வாக்குவரே!

பழநாள் புலவர் பெரியோர் படைப்பு வரலாறுகள்
நிழலா டிடும் இவர் நெஞ்சில் உரையில்! நெடும்பொழுது
அழகுறச் சொற்பொழி வாற்றும் அழியாக் கவிதைச்சொல்வர்
எழிலர்! எவர்க்கும் வணங்காத் தலையினர்! ஆம் இவரே!

நூலகம் போலும் இவர்வீட்டில் நூல்கள் நிறைந்திருக்கும்
காலை முதற்கண் அயரும் கணம்வரை நூல்படிப்பார்!
காலத்தை வெல்லும் 'இலக்கியம்'; 'காவியம்'; காண் 'சுரதா'!
நூலெனில் வான்புகழ் நூலாகத் 'தேன்மழை' நாற்றவரே!

# சொல்லவும் வேண்டுமோ?

மு. வரதராசன்
தி.மு.க. பகுதிச் செயலாளர், திருவல்லிக்கேணி

இராகவன் நூல் நிலைய ஆண்டுவிழா. பேரறிஞர் அண்ணா அவர்களை அழைக்க வேண்டும் என்று எல்லோருக்கும் விருப்பம்.

அந்த விருப்பம் நிறைவேற அறிஞர் அண்ணா அவர்களிடம் நூல் நிலைய உறுப்பினர்களும், கழகத்தோழர்களுமாகிய நண்பர்கள் அணுகி, தங்கள் விருப்பத்தை—வேண்டுகோளை வெளியிட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் 'அப்புறம் வந்து பாருங்கள்' என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். அதன்படி தோழர்களும் இரண்டு, மூன்று முறைசென்று பார்த்து, ஒப்புதல் பெற முடியாது திரும்பி விட்டார்கள். மேற்கொண்டு முயற்சி செய்தும் பயனில்லை என்றெண்ணி தங்கள் எண்ணத்தை—முயற்சியைக் கைவிட்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள், தம்மிடம் அணுகி வந்து நாள் கேட்டு விழாவிற்கு தலைமை தாங்கிட அழைப்பவர்களை மூன்று வகையாக பிரிப்பார்கள் போலும். அதாவது கூட்டத்திற்கு நாள் கேட்க வருபவர்கள் (கோரிக்கை) மனு கொடுக்க வருபவர்கள் தொகுதி மக்கள் என மூவகையாக பிரிப்பார்கள் போலும்! அதன்படியே அவரவர்களுக்கு முறையாக நாள் கொடுத்தும் ஆவன செய்வதாக உறுதியளித்தும், குறைபாடுகளை அகற்றியும் முயற்சிகள் மேற்கொண்டும் செயல்படுவார்கள்! இவற்றையெல்லாம் கடந்துதான் ஆண்டுவிழா போன்றவைகளுக்கு நாள் கொடுத்து அனுப்புவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அடுத்தடுத்து முயற்சி செய்யவேண்டும்; வெற்றி யடையவேண்டும்! அலுத்துப்போய் தோல்வி மனப்பான்மையை யாரும், வரவழைத்துக் கொள்ளக்கூடாது என்பதுதான் அண்ணா அவர்களின் உள் நோக்கமும் உயர் நோக்கமும். இந்த உட்பொருளை கழக தலைவர்கள் கலைஞர் நாவலர் போன்றவர்களிடம் தெரிந்து வைத்திருப்பவன் நான். ஆதலால் நூல் நிலைய நண்பர்களின் சலிப்பு காரணமாகவும் நான் அண்ணா அவர்களிடம் விழாவிற்கு தலைமை தாங்கிட ஒப்புதல் பெற கேட்டுக் கொள்வதென்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டேன்.

அறிஞர் அண்ணா அவர்களை கண்டேன். விழாவிற்கு, தலைமை தாங்கிட வருமாறு வேண்டினேன். 'இன்னொரு முறை வந்து பாருங்கள்' என்று அமைதியும்—ஆறுதலும் கலந்த கனிமொழி சொல்லி அனுப்பினார்கள்.

இரண்டு, மூன்று முறை சென்றுபார்த்தேன். மற்ற தோழர்களைப் போலவே நானும் அலுத்துவிடும் நிலைமைக்கு வந்தேன். இருந்தும், சளையாமல் அண்ணா அவர்களைக் கண்டு வந்தேன். ஒருநாள் அறிஞர் அண்ணா அவர்களிடம் 'தாங்கள் வந்து பார்க்கச் சொன்னது போல் ஜனவரியில் வந்து பார்த்தேன்; பிப்ரவரியில் வந்து பார்க்கச் சொன்னீர்கள்; அதன்படி வந்து நிற்கிறேன்," என்றேன்! அண்ணா அவர்களும் அகமலர முகமலர ஒப்புதல் தந்தார்கள். மகிழ்வோடு திரும்பினேன். பன்மொழிப்புலவர் க. அப்பாத்துரையார் அவர்கள் தலைமையில் கங்கைகொண்டான் மண்டபத்தருகில் கூட்டம் நடத்திட காவல்துறையிடம் அனுமதி கேட்டேன்; மறுக்கப்பட்டது! தேரடித்தெருவில் கூட்டம் நடத்திடலாம் என்று அனுமதி கோரினேன். அதற்கும் காவல்துறை மறுத்துவிட்டது. நாம் எதிர்க்கட்சியாக இருந்தநேரம். எதற்கும் மறுப்பும் மறைப்பும் இருக்கத்தானே செய்யும். எப்படியும் கூட்டம் நடத்திட வேண்டும் என்பதில் சற்றும் நம்பிக்கையை கைவிடாமல், ஆளுநர் அவர்களிடமே கோரிக்கை விடுத்து அனுமதியும் பெற்றுவிட்டோம். அதுவும் காவல் துறையைக் கேட்டுத்தான் ஆளுநரிடமிருந்து அனுமதி வந்தது. இப்போதெல்லாம் அந்தத் தேரடிதான கூட்டம் நடத்திட வேண்டும் என்று எண்ணும்போது, நேரடி வருவதும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும் இடமாக இருப்பதும். இதில் என்ன வேடிக்கை என்றால் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மின்விசை துண்டிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலைமைகள் எல்லாம் சந்திக்க நேர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், 'கூட்டத்துக்குவந்து நமது கருததினைக் கேட்கவேண்டும் என்றால் அவர்களாகவே கனிந்து வந்து கேட்க வேண்டுமே அல்லாமல் நாமாக ஏன் அவர்களிடம் வந்து பேசிட வேண்டும்? இத்தகைய இன்னல்களை ஏற்க வேண்டும்? லட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் 'அவர்கள்' அழைத்துப் பேசிட வைத்தார்கள். அப்படி 'இவர்களும்' நம்மை அழைத்துப் பேசிடக்கோரும்—கேட்கும் காலம் வரும்; அப்போது நமது கருத்தினை கொள்கையை எடுத்துச் சொல்லாமே? ஏன் இத்தனைத் தொல்லைகள் ஏற்க வேண்டும்?' என்று என்னிடம் தனியாக எடுத்துச் சொன்னார்கள்! திருவல்லிக்கேணி தொகுதிக்குள் கூட்டம் நடத்திடக்கேட்டுக்கொண்டது நானல்லவா? ஆகையினால் என்னிடம் அப்படிச் சொன்னாகள்.

அதன்பிறகு 67—ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக அறிஞர் அண்ணா அவர்கள் நிற்க வேண்டும் என்பது என தணியாத வேட்கை. நண்பர்கள் கழகத் தோழர்களது வேட்கையும்கூட. அது மட்டுமல்ல : கலைஞர், நாவலர் ஆகியோரும் ஏற்கெனவே செய்திருந்த முடிவும் அதுதான் என்று தெரியவந்தது. மாவட்டச் செயலாளரைக் கலந்து கொண்டு. வட்டக் கழகச் செயலாளர்கள், துணை சார்பு மன்றத் தோழர்களோடும் கலந்து முடிவுக்கு வந்த பிறகு அவர்கள் எல்லோரையும் உடன் அழைத்துக்கொண்டு சென்றேன்.

தாங்கள் நின்றால். தங்கள் தொகுதியின் கீழ் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஆறு இடங்களும் வெற்றிபெறும் என்றேன். "ஏன் இப்போது வெற்றி பெறாதா?" என்று கேட்டுவிட்டு, "........" என்ற பெயரைக் குறிப்பிட்டு, அவருக்குப்போய் வேலைசெய்யுங்கள் 'முதல்லே" என்றார்கள்.

"நீங்க நிற்கிறீங்கன்னா, எல்லோரும் பாசத்தோடும் ஆர்வத்தோடும் பணி ஆற்றுவாங்க; எளிதாக வெற்றி பெறுவீங்க" என்று எடுத்துச் சொன்னேன். சற்று நேரம் பேசாதிருந்துவிட்டு, "யோசிப்போம்; பொறுப்போம்" என்று கூறிவிட்டார்கள்.

பின்பு கழக மேலிடத்திலிருக்கிறவர்கள் எல்லோரையும் அணுகி, அறிஞர் அண்ணா அவர்களை சம்மதிக்கச் செய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.

அதன்பிறகு விருகம்பாக்கம் மாநாட்டிலே பேசும்போதுதான், "தென் சென்னையை நான் எடுத்துக்கொண்டேன்" என்று அறிவித்தார்கள். அப்போதுதான் எனது மற்று' எல்லோரது வேண்டுகோளும் விழைவும் நிறைவேறிடுவதற்காவே அண்ணாஅவர்கள் அப்படி

முன்னேற்றம் கண்டவர்கள்
முடங்காமல் உழைத்தபெரும்
முயற்சியாளர்!
முன்னேற்றக் கழகத்தில்
முயன்றுழைத்துப் பல்லோர்கண்
டார்முன் னேற்றம்!
முன்னேற்றம் கண்டார் இம்
மு. வரத ராசனும் தி.
மு. க. தன்னில்!
முன்னேற்றம் கண்ட பின்பு
வேற்றுமுகாம் மொய்க்கும் மதி
முயக்கம் இல்லார்!
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
அடக்கத்தை முதலாகக்
கொண்ட அன்பர்!
யார்போற்றிப் புகழ்ந்தாலும்
இகழ்ந்தாலும் கழகப்பணி
ஆற்றும் தொண்டர்!
சீர்தூக்கிப் பார்த்தெதையும்
செய்யும் இவர். திருவல்லிக்
கேணி யில் சேர்ந்(து)
யார்போட்டி யிட்டாலும்
இம்முறையும் பகுதிச்செய
லாளர் ஆனார்!



# பேருழிப் பைங்கொடி!

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, எம்.எ., எல்.டி., விசாரத் (இந்தி)

கிரேக்க நாகரிக மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் சாக்ரடீஸ். அதன் உச்ச அலையாக எழுந்தவர் அவர் சீடர் பிளேட்டோ. அதன் நுரை வெள்ளமாகப் பரவி உலகில் கிரேக்கப் புகழைப் பரப்பி ஈராயிரம் ஆண்டுக்காலமாக நிலைநிறுத்தி வந்தவர் அறிவுலகத் தந்தையெனப் புகழ்பெற்ற அரிஸ்டாடில்.

தமிழகத்தின் தேசிய அறிவுப்பரம்பரை, இந்தக் கிரேக்க தேசீய அறிவுப் பரம்பரையை ஒத்தது.

தமிழினத் தந்தை பெரியார் ஈ. வே. ரா., தமிழர் புதிய அறிவுமலர்ச்சியைத் தோற்றுவித்த சாக்ரடீசாக; அப்புகழின் பொங்கற் கொடுமுடிகண்ட கோமான் அறிஞர்க் கறிஞர் அண்ணா, அவ்வழியின் சின்னமான பிளேட்டோவாக; இருவர் வழி மரபும் புதுப்பித்து வரும் தற்காலத் தமிழக முதல்வர், கலைமாமணி டாக்டர் மு. கருணாநிதி, அப்புகழ் மரபு கொடி உயர்த்தி அதன் ஆட்சி பரப்பும் அரிஸ்டாடிலாக நிலவுகிறார்.

அண்ணாவின் வாழ்வாகிய ஊழியை நாம் இன்னும் அளந்து மதிப்பிடும் நிலையில் இல்லை. ஏனெனில் அதன் அலை எழுச்சியின் ஒரு பகுதியாகவே நாம் இன்னும் வாழ்கிறோம்.

உலகை யாக்கும் பேருழிப் பைங்கொடிகளுள் மாமுதல்வர் அண்ணா ஒரு புகழ்க் கொடியாய் நீடு நின்று நிலவொளி வீசுகிறார்!

முப்பாற் குறளுக்கு 'முப்பால் ஒளி' நல்கும்
அப்பாத் துரையார்—அறிஞரிவர்—இப்பார்
மொழிபலவும் கற்றுப் புகழ்மொய்க்கும் பந்நூல்
எழுதியவர்! நாடறியு மே!

அறிவித்தார்கள் என்பதனை என் செவியாரக் கேட்டு அகமார மகிழ்ந்தேன்.

பொதுத் தேர்தலும் நெருங்கியது. தேர்தல் பணிகள் நடைபெற்றன. தீவிரமாக! ஒரு ஜீப்பில் அமர்ந்து தமது தொகுதியினைச் சுற்றி வந்தார் அண்ணா அவர்கள். எங்கள் திருவல்லிக்கேணி பகுதிக்கும் வந்தார்கள். இரவு 10 மணிக்குமேல் இருக்கும். பகுதியில் இருந்த கழக உறுப்பினர்கள் மற்ற தோழர்கள் எல்லாம் தங்களை அறிமுகப்படுத்தும்படி கேட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் வந்ததும், நண்பர்களை கழகத் தோழர்களையெல்லாம் அழைத்து "இவர் இன்னார் இவர் இன்னார்" என்று அறிமுகப்படுத்தத் தொடங்கினேன்.

"உங்கள் எல்லோரையும் நான் அறிவேன். யார் எவர்? உங்கள் செயல் திறமை என்ன? என்பதுபற்றியெல்லாம் எப்போதோ அறிந்து வைத்துள்ளேன். நீங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ?" இவர் பெயர் இது தானே! இவர் அவர் தானே?" என்று ஒவ்வொருவருடைய பெயரையும் பொறுப்பையும்கூடச் சொல்லிக்கேட்டார்கள். வியந்துபோய் நின்றுவிட்டோம்.

பல பகுதிகளைச் சுற்றிப்பார்த்து தொண்டர்க்கும் தொண்டர்போல் தொகுதியில் தேர்தல் வேலைகளை காலை முதல் செய்ததால் களைப்புற்றிருந்தார்கள் அண்ணா அவர்கள். "ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறேன்; சற்று நேரம் கழித்து எழுப்புங்கள்" என்று கூறிக் களைத்துப் போய் கண் அயர்ந்தார்கள்.

துயில் கொள்ளாத அந்தப் பேரறிவுப் பெருந்தகை துயில் கொள்ளும்போது, துயில் எழுப்பிட யாருக்குத் துணிச்சல் வரும்? சற்று நேரத்திற்கெல்லாம் தாமே எழுந்து முகத்தை அலம்பிக் கொண்டு தேநீர் அருந்தினார்கள். தேனீயைப்போல உழைத்திட அந்த அறிவுத் திரு புறப்பட்டு விட்டது. ஒவ்வொருவராக அழைத்து ஊக்கமும் உற்சாகமும் தந்து விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். பின்பு தேர்தலில் வெற்றியும் கண்டார்கள். அதைத்தான் நாடறியுமே. எனக்குள்ள வியப்பு?

நான் அறிமுகப்படுத்தும் முன்பே தோழர்களை—தொண்டர்களை எப்படியெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டுள்ளது அந்தத் தலைமை நெஞ்சம்! அதனை எண்ணி எண்ணி இன்றும் இன்பம் கொள்கிறேன்! அந்த இனிய நினைவும் மகிழ்வும் அறிவின் திருவுருவம் இன்னும் பசுமையாக எனது நெஞ்சத்திரையில் நிழலாடிக் கொண்டுள்ளதக் கண்டு கண்டு [illegible]ற்கிறேன்.

# குடி அரசில் வெளியான அண்ணாவின் கவிதை

**தி.வ.மெய்கண்டார்**

பேரறிஞர் அண்ணா அவர்கள் M. A. படித்து முடித்ததும் தந்தை பெரியார் அவர்களின் சுய மரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பெரியாரின் பெருந்தொண்டராகி, ஈரோடு சென்று குடியரசு வார இதழில் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார்.

குடிஅரசு வார இதழ், தந்தை பெரியார் அவர்களால் 2-5-1924 ஆம் ஆண்டில் நிறுவப் பெற்று அவரையே ஆசிரியராகக்கொண்டு ஈரோட்டிலிருந்து சனிக்கிழமைதோறும் வெளி வந்தது. இவ்விதழை அக்காலத்தவர்கள் பச்சை அட்டைப் பத்திரிகை என்று கூறுவார்கள். இதைக் கையில் வைத்துக்கொண்டு படிக்கவே அஞ்சுவர். ஊருக்கு ஊர் எங்கேயோ ஒரு விற்பனையாளர் இருப்பார். இந்த இதழைக்கண்டு ஆளும் வர்க்கம் அலறியது; வைதீகர்கள் மனம் பதை பதைத்தனர்; மேட்டுக் குடியினர் மருண்டனர்; பழமையில் நம்பிக்கையுடையோர் பதறினர்; தங்கள் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப்போட்டு விடுமோ என்று மதப் பிரசாரகர்கள் மனம் மாய்ந்தனர்.

இவ்விதழ், அறிஞர்களின் கட்டுரைகள், ஆதாரபூர்வமான ஆராய்ச்சிகள், சிந்தனை மிகுந்த கட்டுரைகள், ருசிதரும் அவியல், உள்ளத்தை அள்ளும் கற்பனைச் சித்திரங்கள், ஆணித்தரமான அபிப்பிராயங்கள்—இவைகளைத் தாங்கி வந்தது.

குடிஅரசுஇதழ் செய்தபணி தமிழ்நாட்டின் கடந்த 50 ஆண்டு கால வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும். முட்டாள்களாகவும், அறியாமைச் சேற்றில் அழுந்தியவர்களாகவும் வாழ்ந்த மக்களை கரையேற்றித் தன்மான வாழ்வு வாழச் செய்தது, இவ்விதழேயாகும். பகுத்தறிவைப் பரப்பிக் கோழையை வீரனாக்கியது: கூனனை நிமிர்த்தியது; குருடனை விழிபெறச் செய்தது:

அதுமட்டுமன்றி பார்ப்பனரல்லாதாரைத் தட்டி எழுப்பி, தங்கள் உரிமைக்குப் போராடுமாறு சற்றேறக்குறைய கால் நூற்றாண்டு காலம் போராடியது. மூட நம்பிக்கைகள், புராண இதிகாசப் புரட்டுகளைக் களைந்து மக்களுக்குப் பகுத்தறிவு ஊட்டும்பத்திரிகையாகத் திகழ்ந்தது. மேலும் பொது உடமைக் கருத்துக்களை அளித்து தமிழிளைஞர்களைப் புத்துலகச் சிற்பிகளாகவும் ஆக்கியது.

இப்புகழ் வாய்ந்த குடி அரசு இதழில் எழுத்தாளராக இருந்து தம் எழுத்துப் பணியை ஆவேசமாகச் செய்த அறிஞர் அண்ணா அவர்கள், 1939 முதல் விடுதலை இதழின் ஆசியராகப் பொறுப்பேற்றார். ஆயினும் குடி அரசிலும் அவ்வப்போது கட்டுரைகளும், கவிதைகளும், கதைகளும் எழுதி வந்தார்.

அண்ணா குடி அரசு எழுத்தாளரானதும் பார்த்தோர் மனத்தைக் கவர்ந்து, படிக்கத் தக்க வகையில் தமது படைப்புகளுக்குப் புதிய புதிய வசீகரத் தலைப்புகளைத் தந்தார். தம்முடைய எழுத்தின் மூலம் குடி அரசு இதழை மேலும் செழுமையாக்கினார்.

இப்புகழ்மிக்க குடி அரசு இதழில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அடுத்தபடியாக, தி. மு. கழகத் தலைவர்களில் ஆசிரியராக இருக்கும் சிறப்பினை 1945-ல் கலைஞர் பெற்றார்.

* * *

1938-ல் ஆச்சாரியார் தமிழ் மாகாணத்தின் பிரதமராக (முதல்வராக) ஆனதும், அவர் இந்தியைத் திணித்ததும், தமிழகம், பெரியார் தலைமையில் போர்க்கோலம் கொண்டு அண்ணா உட்பட ஆயிரக் கணக்கானவர்களைச் சிறைக்கனுப்பியதும் யாவரும் அறிந்த ஒன்றேயாகும். ஆச்சாரியார் 1939-ல் பண்டங்களின் மீது விதிக்கும் விற்பனை வரிச் சட்டம் ஒன்று கொண்டு வந்தார். ஏழைகளின் அன்றாட நுகரும் பொருள்களான அரிசி, சோளம், கம்பு, வெல்லம், கருப்பட்டி, சர்க்கரை, தீப்பெட்டி, மண்ணெண்ணெய், பருத்தி—மில் நூல், நிலக்கடலை, எள், கொப்பரை, தேயிலை உட்பட பலபொருள்களின்மீது வரி போடப்பட்டது, இதனைக் 'குடி அரசு'' வன்மையாகக் கண்டித்தது. பண்டங்களின் மீது போடப்படும் வரி, ஏழை மக்களை அழுத்தும் என்று சொல்லி பலமாகக் கண்டனக்குரல் எழுப்பியது.

இந்தித் திணிப்பிற்காகவும், ஏழைகளின் வாழ்வைப் பாதிக்கும் விற்பனை வரிச்சட்டத்

திற்காகவும் தமிழர் தலைவர்கள் ஆச்சாரியாருக்கெதிராகக் கண்டனம் எழுப்பினர். ஆச்சாரியாரோ வழக்கம் போல கதை மூலம் விளக்கம் தரலானார். 'கோச்சு வண்டி ஓட்டும்போது உள்ளே இருப்பவர்கள் ஒன்றும் பேசக்கூடாது; அதைப்போலத் தனது நிர்வாகத்தைப் பற்றி ஒருவரும் குறை கூறலாகாது'' என்று ஆணவத்துடன் கூறினார்.

அப்பேச்சைப் படித்துப் பார்த்தபோது அறிஞர் அண்ணாவுக்கு, ஆச்சாரியாரின் கருத்தை நையாண்டி செய்ய வேண்டும் என்று தோன்றியது. உடனே குடி அரசில் ''கோச்சு வண்டிக் கும்மி'' என்னும் தலைப்பில் ஒரு கவிதை எழுதினர்.


அறிஞர் அண்ணா அவர்கள் பிற்காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கவிதை எழுதியுள்ளார். இலக்கணச் செம்மை செய்யப்பெறாத கவிதையை திராவிடநாடு, காஞ்சி இதழ்களில் எழுதி, அவரே 'கவிதையாக்கிக் கொள்ளலாம்' என்றும் குறிப்புரையுடன் வெளியிட்டார். தி. மு. கழகத்தலைவர்களில் ஒருவரான திரு. கே. ஏ மதியழகன் தென்னகம் தொடங்கியபோது ''என் தம்பி தருகின்றான் எழிலார் ஏடு'' என்று அறிஞர் எழுதிய கவிதை, மிக உயரிய நடையில் அமைந்து படிப்போரைப் பரவசப்படுத்தும் தன்மையதாகும்.

இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளில் நுழைந்து பணியாற்றிய அறிஞர் '1939 மே மாதம் 14-ஆம் நாள் குடி அரசு வார இதழில் இக்கவிதையைப்'பரதன்' என்னும் புனைபெயரில் எழுதியுள்ளார். அறிஞரின் தொடக்க காலப் படைப்பான இக்கவிதையில், அவருக்கே உரித்தான நையாண்டி, கிண்டல், கேலி இடம் பெற்றிருப்பது நம்மைச் சுவைத்து மகிழச் செய்கிறது.

இக்கவிதை பச்சை அட்டைப் பத்திரிகையான 'குடி அரசு' இதழில் முதல் பக்கத்தில் வெளியிடப் பெற்றுள்ளது.

அண்ணா அவர்களுக்குக் கவிதை எழுதும் ஆர்வம் எப்படி ஏற்பட்டது என்றால், குடி அரசு பத்திரிகையில் துணை ஆசிரியர்களாக, அண்ணாவுக்கு முன்னால் விளங்கிய சாமி சிதம்பரனார் அவர்களும், பிற்காலத்தில் பொது உடைமை இயக்கதின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய ப. ஜீவானந்தம் அவர்களும் 'குடி அரசு' இதழின் முதல் பக்கத்தில் கவிதைகள் எழுதி வெளியிடுவது வழக்கம். அறிஞர் அண்ணா அவர்களும் அதே முறையைப் பின்பற்றி, தாமும் அவ்வண்ணம் எழுத வேண்டும் என்றும் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டிருக்கலாம்.

இதோ அறிஞரின் கவிதை :




கரடு முரடான பாதையிலே, அந்த
கறுப்புக் கண்ணாடி கோச்சுமானும்
காட்டுக் குதிரையைப் பூட்டியுமல்லோ
கடு வேகமாகக் கோச் ஓட்டலானார்!

பாதையோ செங்குத்து 'பயமய்யா' என்றால்
பச்சைச் சிரிப்பு சிரித்து விட்டார்
குலுங்குது; வயிறெல்லாம் நோகுதுதப்பா என்றால்
குந்து சும்மா குந்தெனக் கூறி விட்டார்!

கண்ணாடி எடுத்திட்டு ஓட்டுமய்யா—கொஞ்சம்
கண்டிப்பாய் சொல்லுறேன் கேளும் என்றால்
ஓட்டிட வந்தவன் நீயோ என்று
ஒய்யாரம் பேசுறார் கோச்சுமானும்

உள்ளே இருக்கும் என் உற்றாரும் அப்போ,
உயிருக்குப் பயப்பட்டே கூறினாரே.
ஓட்டிட வந்தது நீயென்றாலும்—அப்பா
உயிர் எங்களுடையது உணருமென்றார்!

உலகமே அநித்யம் மாயை அய்யா, இனி
உறங்குங்கள் உள்ளேயே நிம்மதியாய் ....
ஓட்டிடும் வண்டியும் உடைந்துவிட்டால்—அய்யோ
உல்லாசமாக நீர் நடப்பீர் என்றார்

எங்கு தேடினீரோ இந்த ஆளை, நீர்
எமக்கென்று வந்தாரே விந்தையாக,
என்றெந்தன் உறவினர் என்னைக் கேட்டார்
அப்போ
ஏறெடுத்துப் பார்த்தவர் கூறினாரே!

கோச்சு வண்டிக் கும்மி தொடர்ச்சி

இப்போதோ நான் கோச்சு ஓட்ட வந்தேன் சும்மா
இஷ்டப்படியெல்லாம் பேச வேண்டாம்
குப்புற வண்டியும் குடை கவிழ்ந்தே —போனால்
கொள்ளுங்கள் வேறு ஆள்! கேட்பதில்லை

என்னென்பது ஐயா எங்கள் கோச்மான்
இருந்து வந்த இந்த விதந்தனையே
வந்த தய்யா பெரும் வம்புகளே முன்னம்
வகை யறியாதே ஆள் வைத்த தாலே'

---



மெய்கொண்டார் என்பர் பிறர்நலம் மேவும் பணிமிசைச்சே
கைகொண்டார் என்பர் கனிந்தீந்து கைகள் சிவந்திடவே
மெய்கண்டார் என்பர் விளங்காத மெய்ப்பொருள் கண்டிட, யிம்
மெய்கண்டார் மெய்விழை வெல்லாம் தமிழ்மேன்மை பெற்றிடவே
சென்ற தலைமுறைச் செந்தமிழ்த் தொண்டர்தம் சீர்சிறப்பும்
முன்னைத் தமிழ்ச்செய்தித் தாள்கள் தமிழ்நூல்கள் செப்புதலும்
இன்று தமிழர் இசைந்தறிந் தேற்றம் பெறுவதற்கே
இன்தமிழ் ஏடு பலவற்றில் சொல்லல் இனிதிவர்க்கே!
நிலைகெட நேர்ந்த தமிழும் தமிழரும் ஓங்கிநிற்க
நிலைதிரி யாதத்தன் மான இயக்கத்தில் நீண்டநாளாய்
நிலைத்துள நெஞ்சர்! நெடும்புகழ் மாநிலக் கல்லூரியில்
நலஞ்செய் தமிழ்த்துறை வாய்த்ததிந் நண்பர் நறும்பணிக்கே

---

## தலைமுறைத் தலைவர்!

உருவிலே சிறியர்; ஆனால்
உள்ளமோ கடல்தான்! வீழும்
அருவியைப் போன்ற சிந்தை!
அரிமாவை ஒக்கும் வீரம்!
கருவிலே திருவைப் பெற்ற
காஞ்சிமண் தந்த மேதை!
எரிசுடர் விளக்கு! மேடை
இலக்கணத் தலைவர் அண்ணா!

தாயகம் தழைப்ப தற்கே
தலைமுறை பல்லாண் டாகத்
தாயற்ற சேயைப் போலத்
தவித்தது தலைவன் இன்றி!
ஓயுதல் இன்றி நாளும்
உழைத்திடப் பிறந்தார் கல்வி
நாயகன், நல்லோன், வல்லோன்,
நாடாண்ட எங்கள் அண்ணா!

—சா. கணேசன்.

---

# பழமையினைச் சாடியவன்

'சல்லாபன்'

தித்திக்கும் செங்கமிழில் பேசிப் பேசித்
தென்னகத்தின் மக்களிடை கனலெ ழுப்பி;
கத்திக்கு வேலைதந்தால் மட்டு மிங்கே
காரியங்கள் நடக்குமென்று எண்ணிவந்தோர்
புத்திக்கு வேலைதந்துப் பணிமு டித்தோன்;
புன்மைமிகும் பழைமையினைச் சாடி வந்தோன்;
கத்துகின்ற கீழ்வங்கக் கடலோ ரத்தில்
கண்வளர்ந்து கிடக்கின்றான் அந்தோ
அந்தோ!

ஆமணக்கின் விதையினுள்ளே எண்ணை ஊறும்;
அரவினிடம் மாணிக்கக் கற்கள் தோன்றும்;
பூமணக்கும் சோலையிலே வண்டுக் கூட்டம்
புதுப்பாட்டை உருவாக்கித் தேனைச்
சோ க்கும்;
வாமனம்தான் அவனுருவம்; ஆயின் அண்ணா
வாய்மணக்கத் தமிழுதிர்க்கும் காட்சி காணில்
பாமணக்கும் தமிழினிலே அவனைப் பாடிப்
பாரெங்கும் அவன் புகழைப் பரப்பத் தோன்றும்!

சல்லாபன் என்னும் பெயர்சாற்றும் நணபர்தான் பிரான்சிஸ் ஆம்!
சொல்லாளும் பாடல் சுடர்மணி மாலை தொடுக்குமிவர்
எல்லாரும் வேண்டும் தமிழில் அறிவியல் ஆங்கி த்தில
பல்வேறு பண்டு மொழிபடித் துப்பயன் சோப்பவரே!

சிறுகதை நூல்களும் சிந்தனை அள்ளும்சீர் கட்டுரையும்
பிறமொழிச் செல்வத்தைப் பீடு தமிழில் தரும்பெற்றியும்
நறுந்தமிழ் கற்றுள்ள கானடா நங்கைசெய் ஆராய்ச்சிக்கும்
உறுதுணை செய் இவர் அன்பர்க் குதவும் உளத்தவரே!

# குறள் வண்ணமும் குறள் வடிவமும்

### அறிஞர் அண்ணா

சில ஆண்டுகளாக, திருக்குறளின் அருமையை நாட்டினர் உணரவும்; அதனுல் உள்ளம் மகிழவும் தொடங்கி,யுள்ளனர். கண்ணிலே ஏற்பட்ட பிணி நீங்க நீங்க இயற்கை அழகினைக் கண்டு இன்புறும் தன்மை கிடைக்கப் பெறுதல்போல, நம் நாட்டவரின் அறிவுக் கண்களிலே இடப்பட்டிருந்த மருள் என்னும் திரை நீக்கப்பட்டதும், குறள் அருங் காட்சியாகிவிட்டது. செல்வம் இங்கிருக்க, செப்போட்டைத் தேடித் திரிந்து வந்தோமே—சந்தனத்தைத் தேடி சேற்றிலே உழன்று கொண்டிருந்தேமே — செந்நெல் இங்கிருக்க பதரினைக் குவித்துக் கொண்டிருந்தோமே—காகம் கரைவதைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டோமே குயிலோசையைக்கேளாமல்—இதோ வாழ்வின் விளக்கு—மெய்யறிவு தரும் மேலான நூல்—பொய்யுரைகளைப் புனித ஏடுகள் எனப் புகன்று மக்களை ஏய்த்து வந்தவர்களின் புரட்டுகளைச் சுட்டெரிக்கும் புரட்சித்தீ—என்றெல்லாம் எண்ணியும் கூறியும் தமிழர், இன்று திருக்குறளை நாடிச் சென்று, அதிலே தமிழரின் அறிவும் பண்பும் இருக்கக் கண்டு அகமகிழ்கின்றனர்.

பூமிக்கடியிலே பொன் விளைந்து கிடக்கிறது என்பதை அறிவதே கடினம்—அறிந்த பின் வெட்டி எடுப்பது அதனினும் கடினமானது—எடுத்தான பின், அதனைக்கொண்டு, என்னென்ன வகையான பயனைப்பெறுவதென்று கணிப்பது கடினமே. எனினும் களிப்பு உடனிருந்து பணியினை ஊக்குவிக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது. திருக்குறள் எனும் செல்வத்தைக் கண்டறிந்த பிறகு, அந்த அறிவுச் செம்பொன்னைக் கொண்டு அன்பர் பலர் அழகழகான அணி பணி செய்து தருகின்றனர். அது போன்றதோர் எழிலுள்ள ஏடு இது; திருக்குறள் எனும் செல்வத்தைப் புதியபொலிவு தரும் முறையிலே தந்திருக்கிறுர் நண்பர்.

பொதுவாகவே, உரை நடையிலே உளம் எளிதில் பதிந்துவிடுகிறது-கவிதைகளிடம் பதிவாவதை விட. உரைநடை உருவம், கவிதையிலே உள்ள கருத்துக்களுக்குத் தரப்பட்டால் கவிதையினுல் ஏற்படவேண்டிய பயனையும் சுவையையும் எளிதில் பலராலும் பெற முடிகிறது. புலவர் பெருமக்கள், செம்பொன்னை வெட்டி எடுத்துத் தந்துவிடுகின்றனர்; அதன் "மாத்து" குறையாவண்ணம் பார்த்துக்கொள்வது அறிவாளர் கடமை; அதனை அழகிய ஆணி பணியாக்கிடும் பணியிலே உரைநடை வல்லுநர்கள் ஈடுபடல் வேண்டும்; அந்த உரைநடையும், பல்வேறு முறைகளிலே வெளிவரவேண்டும்—அப்போதுதான், கவிதையிலே உள்ள கருத்தழகு, பலவகையாலும், பல திறத்தவருக்கும் பயன் தரும்.

பூந்தோட்டத்து மலர்களைப் பறித்தெடுத்து கைத்திறனும், கருத்துத் திறனும் கலந்து, மாலையாகவும், செண்டாகவும், பிறை வடிவுடனும், பிறிதோர் வடிவிலும், தொடுத்துத் தருவது காண்கிறேம்—மணம் புதிதாகக் கூட்டப்படுவதில்லை மலருக்கு! எனினும் வண்ணம் புதிது புதிதாகக் கிடைக்கிறது—வகை வளம் பெறுகிறது; எனவே பயனும் அதிகரிக்கிறது. இம்முறையிலே, புதுவண்ணம் பெறவேண்டிய பொன்னேடுகள் நந்தம் நாட்டிலே அளவிலவாக உள்ளன. எனினும் இம்முறையிலே உடனடியாக அறிவாளர்கள் கவனம் செலுத்த வேண்டுவது. திருக்குறள் எனும் தேன்தமிழ் ஏட்டினிடம் என்பது இன்று உணரப்பட்டு வருகிறது.

ராமகாதை — எத்தனை உருவங்கள் பெற்றுள்ளன? எவ்வளவு வண்ணங்கள்? அந்த வேலை இன்றும் நடைபெறுகிறது.

சித்திர ராமாயணம்—சிறுகதை ராமாயணம்—திருந்திய ராமாயணம்—தெந்தினத்தில் ராமாயணம்—தெருப் பாடகனிடம் தரப்படும் ராமாயணம்—கூத்து வடிவில் ராமாயணம்—இப்படிப் பலப்பல!

கதையும் கருத்தும் ஒன்றுதான்—வடிவங்களோ பல! புராணக் கதைக்கு இத்தகு வடிவங்கள் பல தருவது காண்கிறேம்.

பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் அமைந்துள்ள திருக்குறள் ஏன்பல 'வண்ணம்' பெறக்கூடாது என்று எண்ணுகிறேமில்லை!

குறட்கதைகள்—குறள் பாடல்கள்—திருக்குறள் நாட்டியம் — திருக்குறள் நாடகம் — திருக்குறள் ஓவியம்—இங்ஙனம் பலப் பல வடி

வங்கள் வெளிவரல் வேண்டும்; குறள் தமிழரின் இல்லந்தோறும் இடம்பெற.

எண்ணிப் பாருங்கள்; திருக்குறளிலே வரும் இல்லற மாண்பு, காதல் நிகழ்ச்சிகள்; ஊடல் கூடல் மனையற மாண்பு; மழலையர் இன்பம், இவை போன்றவைகள்; ஓவியங்களாகி; ஒவ்வோர் ஊரிலும், பெருமன்றமொன்றிலே வைத்துக் காட்டப் பெறுமானால் எத்துணை இன்பம், எத்தகைய அறிவு பெற இயலும் என்று!

அது போலவே, குறளிலே காணப்படும் கருத்துக்களைக் கோத்துச் சிறு "நாடகங்கள்" தீட்டி, மக்கள் மன்றத்திலே நடித்துக் காட்டப்படுமானால் எவ்வளவு அறிவின்பம் பயக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனு மில!
காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்

இவைகளை ஓவியங்களாக்கிப் பாருங்கள் இக்கருத்துக்களை நாடகக் காட்சிகளாக்கிக் காணுங்கள். எவ்வளவு எழில் தேவையோ காதல் அரங்குக்கு, அவ்வளவுக்கும் மேலாக வன்றோ கிடைக்கப் பெறும்!

ஓவியர்கள் கிருஷ்ணனின் வெண்ணெயையும், கோபிகளின் குட்டங்களையும் தானே இன்னமும் தமது தீட்டுக்கோலின் திறன் காட்டப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

குறள் கூவியழைக்கிறது, ஓவியத்துக்கே புத்துயிர் தரவல்ல, உயரிய பயன் தரும் பொருள்கள் உள்ளன இங்கே, கருத்துள்ளோர் காண வாரீர்! என்று. எங்கே அவர் செவி வீழ்கிறது அந்தச் சத்தம்? முரளிதரன் அவர்களை விட்டால்தானே!

குறளிலே உள்ள கருத்துக்கள், பலவண்ணம் பெற வேண்டும்—அப்போதுதான் தமிழரின் செல்வம் தமிழருக்குத் தக்க பயன் தந்து, மற்றவர்க்கும் பயன் தரும். இது என் எண்ணம்

வாழ்க குறள் நெறி!

வளர்க குறள் வண்ணங்கள்!

---

"தமிழ் நாடகக் கலைக்கு "புது வண்ணம்" அளித்த நாடகப் பேராசிரியரும் நடிகரும் எனது உடன் பத்திரிகை எழுத்தாளருமான அறிஞர் அண்ணா அவர்களுக்கு இந்நூல்—எனது 65—ம் ஆண்டு பிறந்த நாளான பொங்கல் நாளன்று நினைவுமலர்!

இது, "நடிப்பது எப்படி" என்னும் நூலில் நோக்கமும் விளக்கமும் என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளார் நூலின் ஆசிரியர் திரு பி. வி ராமசாமி அவர்கள். இதே ஆசிரியர், இணையற்ற தமிழ் மறையாம் திருக்குறள் கருத்துக்களைக் கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கிய "இன்ப குமாரி" என்னும் நூலுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் கொடுத்துள்ள முன்னுரையின் ஒருபகுதி தான் "குறள் வண்ணமும் குறள்வடிவமும்"



"எனக்கு குழந்தைகளைப் பார்க்கும் போது எதிர்காலத்தையே பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுவது உண்டு. நமது வாழ்க்கையிலுள்ள துன்ப துயரங்களும்—நலிவும், மெலிவும் நீக்கப்பட்ட எதிர்காலத்தை அந்த குழந்தைகளின் உருவில் காண்கிறேன்" —அறிஞர் அண்ணா

நம்முடைய மொழியை நாம் கண் போல் காத்து வருகிறோம். அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும். அதனால் உடல்கூட எரிச்சல் காணுவதுபோல் இருக்கும். அந்த நேரத்தில் யாரேனும் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம். நம் கண்கள் கோபத்தில் மேலும் சிவந்துவிடும். இது பட்டவர்களுக்குத் தெரியும். கண்ணுக்கு மையிடுவது போல பிற மொழிகளைப் பயன்படுத்தவேண்டும். மை அதிகமானல் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ அதுபோல பிற மொழிகள் அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும். —அறிஞர் அண்ணா

# தலைப்பு

மருதகுமாரன்

நான் மிகச் சாதாரணமானவன்.

என்னிடம் வந்து கேட்டார் என் மதிப்புக்குரிய நண்பர், கவிஞர் முருகுவண்ணன் அவர்கள், 'அண்ணா மலருக்கு ஒரு கட்டுரை!

திகைப்பில் திக்குமுக்காட்டினேன்!

அண்ணாவைப் பற்றி எழுத நானென்ன அண்ணாவி?

புரிந்து விட்டது எனக்கு'

அண்ணாவின் அகராதியில் 'சாதாரணமானவர்'களே கிடையாது. சாதாரணமானவர்களையும் சாரணர்களாகச் சமைத்துத் தந்த சாதனையாளர் அவர்!

அவர் பாதங்களைத் தீபங்களாகக் கொண்டு, அவர் வழியில் நடைபோடும் நல் கவிஞர் முருகுவண்ணன் அவர்களால் என்னை எப்படிச் சாதாரணமானவனாக நினைக்க முடியும்?

சாரணனாக நினைத்தோ—சாரணனாக நினைத்தோ கேட்டுவிட்டார்.

நானும் அது தெரிந்து ஒப்புக்கொண்டு விட்டேன்: அண்ணாரும் அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு அண்ணனாக இருந்தபோதும்—அண்ணலாக மாறிவிட்ட பிறகும் அழியாப் புகழுடன் இருந்த, இருக்கின்ற பேரறிஞர் அண்ணாரைப்பற்றி எழுத!

தலைப்பு என்ன!

கவிஞர் கேட்டவுடன் எனக்கு ஒருவித மலைப்பு!

"தலைப்புத்தானே...? 'தலைப்பு' தான்" என்றேன்.

அண்ணாவுக்கு நான் சூட்டும் புகழாரத்திற்கு 'தலைப்பு' என்றே நான் தலைப்புக் கொடுத்தவுடன் கவிஞருக்கும் வியப்பு.

அவ்வளவுதான்...அவர் சிதம்பரம் சென்றுவிட்டார்!

அம்பலவாணன் திருவடிதூக்கி ஆனந்தத் தாண்டவமாடிய ஆலயத்திற்கல்ல; அண்ணாவின் அழகு தமிழ் திருவடிகளாகத் திரண்டு வந்த பல்கலைக் கழகத்திற்கு!

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினரால் அழைக்கப்பெற்று, ஆற்றோரம்—என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரை புகழ்பெற்றது, அதேபோன்று 'பொருள்'—என்ற தலைப்பிலும் அவர் மிகச்சிறந்த உரை ஒன்று ஆற்றியிருக்கிறார்.

தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துக்கொண்டார். அவர் பேசத் துவங்குவதற்குமுன், கல்லூரி மாணவர் தலைவரை 'நான் என்ன தலைப்பில் பேசுவது?" என்று கேட்டார். மாணவர் தலைவர் "தலைப்பு இல்லை. விருப்பம்போல் பேசுங்கள்" என்றார்.

பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார். "நண்பர்களிடம் எனக்கு என்ன தலைப்பு கொடுத்திருக்கிறீர்கள், என்று கேட்டேன். "தலைப்பில்லை" என்றார்கள். ஆகவே இன்றைய கூட்டத்தில் தலைப்பு இல்லை—என்ற தலைப்பிலேயே பேசுகிறேன்" என்று கூறிவிட்டு 2 மணி நேரம் சிறப்புரை ஒன்று ஆற்றினாராம்.

இந்தச்சம்பவத்தை என்னிடம் கூறிய கவிஞர் "அண்ணா 'தலைப்பில்லை' என்பதையே 'தலைப்பாக்கி'க் கொண்டார். நீங்கள் அண்ணாவையே தலைப்பாக்கிக் கொண்டீர்களே" என்று வியந்தார்—நான் வியர்த்தேன்.

அந்த அன்னவாசல் எங்கே?—இந்த ஆசன வாசல் எங்கே?

நான் கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழியல்ல: கானமயிலாடக் கண்டிராத வான் கோழி!

என் நிலையை அறிந்த கவிஞர் அவர்தம் "அறிவு எல்லாருக்கும் சொந்தமே" என்று எனக்கு ஊக்கப் பரிசு அளித்தார்.

அவர் அப்படிச் சொன்னதற்குப் பதில், "அண்ணா எல்லோருக்கும் சொந்தம் என்று கூறியிருந்தால் சாலப்பொருத்தமாயிருந்திருக்கும்.

அறிவு வேறு, அண்ணா வேறா?—அண்ணா வேறு, அன்பு வேறா?

அறிவுக்கே அண்ணா வேர்—அண்ணாவுக்கு அன்பு வேர்!

இருப்பினும் 'தலைப்பு' என்ற தலைப்பிலேயே அண்ணாவைப்பற்றி எழுதத் துணிந்தேன்.

காரணம்?

தலைப்பாக அண்ணாவையே எடுத்துக் கொண்டவன் நான்.

தலைவிதி இல்லாத மக்கள்!
தலைப்பாகை இல்லாத தலை!
தலைமாடு இல்லாத உலகம்!
இருக்க முடியும். ஆனால்,
தலையில்லாத உடல்
தலைவனில்லாத படை
தலைநகரமில்லாத நாடு
—இருக்க முடியாது!
அண்ணா—
தமிழ் மக்களின் தலை!
தமிழ்ப்படையின் தலைவன்!
தமிழகத்தின் தலைநகரம்!

"கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுக்கும் இந்தியாவை இழந்தாலும் இழப்போமே தவிர, எம் கவிப்பெருமான ஷேக்ஸ்பியரை ஒருகாலும் இழக்கமாட்டோம்' என்றனராம் இங்கிலாந்து மக்கள். அத்துணை ஈடுபாடு ஷேக்ஸ்பியரிடம் அவர்களுக்கு!

"வெள்ளைக்கொடி காட்டி தோல்வியை ஒப்புக்கொள்வோமே தவிர, பேரெழில் நகரமாம் எம் பாரீஸ் அழிய ஒரு போதும் ஒருப்படோம்" என்றனராம் பிரான்ஸ் மக்கள். இத்துணை ஈடுபாடு பாரீஸின்பால் அவர்களுக்கு.

கற்பனைக்கும் எழிலுக்குமே அத்துணை ஈடுபாடு அவர்கள் கொண்டனரென்றால்—

தலைக்காவிரி போன்ற உருவத்துடன் விரிகாவிரிபோல் தொண்டாற்றிய அண்ணாவிடம் எத்துணை ஈடுபாடு கொள்ள வேண்டும் தமிழ் மக்கள்?

பெரியாரின் தலைமுறைக்குத் தலைமகன்!
நரியாரின் தலைமுறைக்குத் தலைவலி!
தன்மான உணர்வுக்குத் தலைமடை!
நன்னெறி வளர்ச்சிக்குத் தலைப்பெயல்!

அம்மட்டோ?

அகரத்தைத் தம்பெயருக்குத் தலையெழுத்தாகக் கொண்ட அண்ணாவே, தமிழர்தம் ஆட்சிக்கும் மாட்சிக்கும் தலையெழுத்து!

ஒருமுறை காந்தியடிகளாரின் சேவையின்பால் ஈர்க்கப்பட்ட பெரியார், இந்திய நாட்டுக்கு 'காந்திநாடு' எனப் பெயரிடுமாறு கூறினாராம்!

இந்திய நாட்டுக்கு 'காந்தி நாடு' என்ற பெயர் பொருத்தமானால் தமிழ் நாட்டுக்கு 'அண்ணா நாடு' என்ற பெயரைத் தவிர, வேறு பெயர் பொருத்தமே இல்லை.

ஏனெனில்—

தமிழனென்ற தலைப்பிலே நாமெல்லாரையும் தலைப்படவைத்து—

தாழ்வு மனப்பான்மையில் தலையிட்டுத் தலை நிமிரவைத்து—

தத்தளித்தத் தமிழ் மொழிக்கு, கலைக்கு தலையளித்து—

சென்னை மாநிலத்துக்கு 'தமிழ்நாடு' என்று புதிய தலைப்பிட்ட அண்ணாவே தமிழ் நாட்டுக்குப் பொன்னான தலைப்பு—புரட்சித் தலைப்பு!

'மிகுதியான் மிக்கவை செய்தாரை தாம் தம் தகுதியால் வென்றுவிட்ட' அண்ணா என்ற அற்புதத் தலைப்பிலே கூடுவோம்'

கொள்கையாற்றுவோம்?
குன்றாப் புகழடைவோம்!

---

தாய்ப்பேர் 'மருதாயி!
தாயின்மை — தாயன்பை
ஆய்ந்(து) அத்தாய்ப் பேரில்
அமை'மருதம்' — சேய்'குமரன்'
என்னுமிரு சொல்லை
'மருத குமார'னென
தன்பேராய்க் கொண்டார்
தரித்து!

சிந்திக்கச் செய்யும்
கதைகள்; நகைச்சுவையைச்
சந்தத் தமிழில்
தருவதொடு — முந்தும்
புதுமைமிகு செய்தி
புத்தமுதாய் நல்கும்
மதியர் மருதகுமா
ரன்!

நூலும் தமிழாயும்
நூட்பம் படைத்தவரும்!
காலப் படிப்பும்
கடும் உழைப்பும்—நாலும்
மதித் தொழுகும்
அன்பரிவர் வாழ்விற்கு வேறே
இதைத் தவிர வேண்டுவதென்
னே?

புரியாப் பொருட்கும்
உரிய பொருளைப்
புரிந்துகொண்ட பின்பே
புசிப்பார் — புரியாப்
புதிர்போன்றார்! நல்லார்க்
குதவி புரியும்
இதயமும் கொண்டார்
இவர்!

# எல்லாம் நீயே!

இலக்கியக் கலை நிதி
என். வி. கலைமணி

வண்டாடும் தமிழ்ப்பூவே! நான் கண்டாடும் தமிழ்ப்பாவே!

தொண்டுக்கு தொகை விளக்கம் தந்தவனே!

கண்டுக்கும் பாகுக்கும் நிகர் நின்றவனே!

நயமான நாவுடையோய்! வயப்படுத்தும் வார்த்தைக் கூட்டே! செயலின் சின்னமே!

வான் வளர்த்தப் பெரும் புகழே!

தேன் வளர்க்கும் தமிழ்த் தாதுக் கூடே! சுவையாய் நின்ற தீஞ்சுவையே!

ஒப்பற்ற ஒருவனுக்கு இருக்கும் துப்புற்ற முகமே!

கார்பார்த்து ஆடுகின்ற கன்னித் தமிழ் தமிழ் மயிலே!

சீர் பார்த்து அடுக்கி வைத்த செம்மாந்த வெண்பாவே!

போர் பார்த்த முகமே! யார் பார்த்தும் கோணாத அகமே!

தமிழ்ப் பதியே! ஆனந்தக் கவியே! தமிழர்க்கு கதியே! தமிழகத்தின் நிதியே!

சாற்றவனே—தமிழ் சாற்றவனே?

வீற்றவனே—உள்ளில் வீற்றவனே!

ஏற்றவனே—நாட்டுக்கு ஏற்றவனே!

கடும்புலமை சொல்லடுக்கி விடும்வார்த்தை மீறி நின்ற வேகமே!

நெடுங்குன்றம் நிமிர்ந்து நின்ற உச்சிக்கு மேல் நின்ற தமிழ் நிலவே!

கடும் கோபம் தழல் எரியா—கீழ்வானில் உதித்த பரிதியின் உருவே!

மூளைக்கு அலங்காரமிட்டு—மனிதச் சாலையிலே வருகின்ற வடிவா நீ!

இல்லை இல்லை! மூளைக்கு வேர் நீ! வேரோடித் திளைக்கின்ற நீர் நீ!

நீருக்கே வேரான ஊற்று நீ! ஊற்றை முளைக்கின்ற கரு நீ!

கருவுக்கே ஆதாரம் நீதான்!

மெய்யகத்தே விளைகின்ற எண்ணக் கலவையெல்லாம்—

நெய்யகத்தே கொண்டிருக்கும் விளக்கொளியதல் பார்த்து—

பொய்யகற்றி; புதுமையேற்றி—வைதாலும்—உன் சிறப்பை மாற்றார் இழிமொழியால் கொய்தாலும்—இதயத்தின் தாள் திறந்து உதவிக்கு அறிவூட்டும் உத்தமனே!

பாடற்கு இனிய வாக்களிக்கும் தேக்கு மரத் தோப்பருகில் நீக்கமற நிழலாடும் நற்றமிழ்க் குரலெடுத்துப் பாடுகின்ற குயிலே!

கூடற்கு இனிய குறிக்கோள்கள் குறித்து வைக்கும் தேடற்கு இனிய சீரளிக்கும் செம்மலே!

நீ, (உன்னை) ஊற்றி வளர்க்கின்ற இடத்தைக் கொள்கை எடுப்பென்பார்.

தேன் ஊற்றி வளர்க்கின்ற இடத்தைப் பூவென்பார்.

வான் ஊற்றி வளர்க்கின்ற ஒன்றை மழை என்பார்.

நான் ஊற்றிப் பாடுகின்ற இப்புகழை திக்கே, திசையே, முன்னே, பின்னே நடுவே, அண்டத்தின் வளைவே, அகிலாண்ட விரிவே, ஊழிக்கு உறையோட்ட ஊழியே, வெளியே உயிரணுக்கள் இருக்கிற இடமெல்லாம் போய் இதனைச் சொல்லாயோ!

தூயருக்குத் தொடுக்கின்ற புகழ் மாலை

மாலையிலுள்ள பூக்களை வண்டினங்கள் வாய்வைத்து உறிஞ்சி எச்சில் படுத்தவில்லை.

புத்தம் புதிய பூக்கள்-பொழுதுக்கே பூத்த பூக்கள்-சத்துடைய ஒருவனுக்கு சாற்ற வந்த பூக்கள்.

நிலாச் சொறிந்த வெள்ளிப்பூ!

ஓடும் மின்னற் கொடியில்—உதிர்ந்த பிழம் பொளிப் பூ! நல்லப் பூ!

இப்பூக்கள், அண்ணா என்னும் என்-இரு கண்களுக்கு இட்டப் பூக்கள்.

வீணுக்குத் தலை வைத்து—வெறுப்புக்கு வழி வைத்து மானிடராய்த் திரிபவர்கள் ஓதிய மரங்கள்!

ஓங்காரத் தமிழ்மொழியின் பயனை—ஓர்ந்தோர்ந்து—ஆங்கார அடுப்பவித்து—பாங்கான பண்பெனும் விளக்கேற்றி—

தீங்குக்கு உளம் நடுங்கும் தித்திக்கும் மனமுடையோர் வரிசை தன்னில்—ஓவியமாய்—காவியமாய்—ஜீவியமாய் இருப்பவரே—அறிஞர்

வையகமே வாழ்த்துகின்ற நிலைக்குக் கொண்டு வந்த அண்ணனே!
குல அரசே!
கண்ணுள்ளே விளங்குகின்ற மணியே—இன்பக் கனியே—நாவரசே—செங்கரும்பே—ஞானப் பண்ணுள்ளே விளைந்த அருட்பயனே!
உண்மைப் பதியே—ஓங்கும் நிதியே—விண்ணுள் விரிந்து ஒளிரும் புகழே!
தேர்ந்த உளத்திடையே மிகத் தித்தித்து ஊறும் செழுந்தேனே—சொல்லரசே!
சார்ந்து திகழும் சண்பக எழுத்தாளா! பொறுமையின் பெருந்தகையே!
கூர்ந்த மதி நிறைவே! தமிழ்க்கொழுந்தே!
தீர்ந்த் பெரும் குறள்நெறித் துணையே! ஒப்பில்லாச் செல்வமே! எனது அரசியல் குருவே!
சிறப்படையச் செல்வனே!
அறப்படைக்குத் தலைவனே!
இலை குளிர்ந்து நிழல் பரப்பும் தருவே! தலை குளிர்ந்த அறிவே!
கலை குளிர்ந்த கலையே! மலைக்குமேல் நிற்கும் முனையே!
மதியணிந்த ஒருவா! தமிழர் துதியணிந்த ஒருவா! ஒழுக்க விதியணிந்த ஒருவா!
தேன் படிக்கும் அமுதா! நான் படிக்கும்—நூலே! ஊன் படிக்கும்—உளம் படிக்கும்—உயிர் படிக்கும்—உயிர்க்கும் உயிர்தான் படிக்கும் அனுபவங்கள் படிக்கும் கருணைக் குன்றே, பொறுமையின் வானே!
உலகம் பரவும் பொருளெல்லாம் அறிவான் என்கோ!
கலகம் பெறும் ஐம்புலனை வென்றவன் என்கோ!
தமிழ்த் திலகம் பெற்றவன் என்கோ!
உலகம் தலைவணங்க உயர்ந்தோன் என்கோ!
மாணித்த ஞானமருந்தே! என் கண்ணின் ஒளியே! ஆணிப்பொன்னே!
சீர்கொண்ட திரள் அறிவு நுதல் சுருங்கும் அறிவு நிறைச் சுருக்கமே!
உனக்கே விழைவு கொண்டு ஓலமிட்டு இங்கே எனக்கென்று இருக்கின்ற இருதயத்தை உன்பால் வைத்தேன்.
தனக்கென்றும் ஒன்றுமில்லாத தயவே! பிறர்க்களிக்க மனக்கதவைத் திறந்து வைத்த அன்பு மாளிகையின் வாயிலே!
குடி வாழ்த்தும் கோனே! உன் வாய்ப்பட்ட வார்த்தையெலாம் மணக்கும்—சிந்தனைக் கரம் பட்ட பொருளெலாம் மணக்கும்! நோய்ப் பட்ட சமுதாயத்தின் மருந்து நீ!
ஓயாத புகழ் வாசம் வீசுவாய் நீ!
படுக்காத அறிவனே! எடுத்த புகழத்தனையும் இந்நாட்டுக்கே நீ எடுத்த புகழ்!
அடுத்துவரும் புகழெல்லாம் தமிழ்நாட்டுக்கு அன்றி எதற்குண்டு?
வாங்கி ஒளிக்கீற்றை, வாரி இறைக்கும் திங்கள் தீங்கு தருவதில்லை—அங்கும் வளம் தருமே!
மூங்கை வாய் திறந்து மொழி நலனில் பேச வைக்க—நீங்கள் செய்யும் பணி நிலமுள்ள வரை நீடிக்கும்.
தோள் சமந்த புகழ்த் தோளே! நீர் செய்த செயல் எல்லாம் சேவற்சொண்டை நிறப் பூ பூக்கும் புகழ் மொய்க்கும்.
அதைக் கண்டு என் அன்னை நிலமே இன்பம் துய்க்கும்.
கொழுந்தேனும் செழும்பாகும் குலவும் பசும்பாலும் கூட்டி உண்டார்போல் இனிக்கும் குணங்கொண்டவனே!
உன்னில் என்னைச் சேர்ப்பாய்?
என் அஞ்சலியை நின் மலரடியில் வைக்கிறேன்.

---

அன்னை தமிழ்மேல் அளப்பரும் ஆர்வம் மிகுந்தவராய்
தன்னை அடுத்த தகவுடை நண்பர்க் கருந்துணையாய்
பொன்னை நிகர்த்த பொருண்மனம் கொண்ட புரவலராய்
அன்பால் நிறைபே ரகமே உடையர் கலைமணியே!

செந்தமிழ் கற்றச் செருக்குடன் பேச்சுத் திறலினையும்
சிந்தனை செய்யெனும் தோந்த எழுத்துச் சிறப்பினையும்
அந்தமும் ஆதி இலாததை உள்ளும் அறிவினையும்
சொந்தமாய்க் கொண்டவர்! சொந்தம் கொண் டாடச் சுடர்மணியே!

தொல்லறி வாளர் தொகைநூல் படித்துப் பயன் துய்ப்பார்
சொல் எரி யீட்டி தொலைபலகை நோக்கித் தொடுத்திடுவார்;
சொல்வெறி யில்கழ கந்தனைக் காட்டிக் கொடுப்போரின்
சொல்—பொருள் கேளாக் குணங்கொள் கழகக் குலமணியே!

எழுதிடும் ஆற்றலைப் பெற்றிருந் தாலுமிந் நாட்டினிலே
எழுத்தா ளரும்நற் கவிஞர் பலரும்பல் ஏட்டினிலே
எழுதிட வைத்திந்த நாட்டில் அறிமுகம் செய்தாரிந்த
பழுத்த விதைகொண்ட பைங்கனி நெஞ்சப் பழமணியே!—

# நினைக்கிறேன்... நெஞ்சமெல்லாம் நிறைகிறது!

ஓவியர் மா. முத்து

இனிய நினைவுகள் என்றுமே இனிப்பது; இன்பம் தருவது; பசுமையாக நிலைப்பது; ஆம் அறிஞர் பெருந்தகை அண்ணாவைப்பற்றி எண்ணும்போது ... ......நினைக்கிறேன்; நெஞ்சமெல்லாம் நிறைகிறது.

ஒவ்வொரு தம்பிமார்களிடத்திலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. அவைகள் எல்லாம் வரலாற்று ஏடுகளின் பக்கங்கள்! இனிக்கும் இன்பத்தேன் அடைகள்!

மதுரை சென்ட்ரல் சினிமாவில் ஓவியராக இருக்கும் திரு மாயாண்டி என்பவரிடம் ஓவியம் கற்றுக்கொண்டிருந்த காலம் வேலைக்காரி படத்திற்கு திரை ஓவியங்கள் (Banners) எழுதும்படி பணித்தார்கள் அப்பணியினை ஆர்வத்துடனும் மிகச்சிறப்பாகவும் செய்து முடித்ததும் திரையரங்கு உரிமையாளர்களும் ஜுபிடர் பிக்சர்ஸ் உரிமையாளர்கள் சோமுவும் முகைதீனும் பார்த்து பாராட்டியும் தொடர்ந்து பல படங்களுக்கு வேலையும் கொடுத்தார்கள். வேலைக்காரி படத்தின் மூலம் இளம் வயதிலேயே புகழும் கிடைத்தது. திரைப்படத்தின் வசனங்களும் அரிய கருத்துக்களையும் அறிந்த நான் அண்ணாவின் தம்பியாவேன் என்று நினைத்ததில்லை.

1949 ம் ஆண்டில் சூழ்நிலை காரணமாக சென்னைக்கு வர நேர்ந்தது, நண்பர் ஒருவரால் ஏமாற்றமடைந்த நான், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் ஆதரவளித்து இல்லத்தில் தங்க இடம் அளித்தார்கள். நண்பர்களான திரு. சண்முகம் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களும் எனக்குப் பெரும் ஆதரவுதந்தனர்.

ஒருநாள்! அந்தநாள்தான் எனது வாழ்நாளின் வரலாற்றுப் பொன்னாளாக அமைந்தது.

மதுரை நண்பர் T. N. C. மீனாட்சிசுந்தரமும் நண்பர் திரு சத்தியேந்திரன் திரு சண்முகநாதன் மற்றும் சில நண்பர்களும் அறிஞர் அண்ணாவின் இருப்பிடமான பவளக்காரத் தெரு இல்லத்திற்குச் சென்று அண்ணாவைக் காணக் காத்திருந்தோம்.

மாலை 4 மணியளவில் அண்ணா அவர்கள் எழுந்து வந்து எங்களை வரவேற்றுத் தேனீர் விருந்தளித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள் பின் என்னை அண்ணாவுக்கு சத்தியேந்திரன் அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார்கள். வேலைக்காரிக்கு நான் ஓவியம் எழுதியதையும் கூறினார்கள். சிறிது நேரத்தில் விடைபெற்றுச் சென்றோம்.

எங்களுடைய இதயங்களை அண்ணாவிடம் விட்டு விட்டு ...நான சந்தித்த அண்ணாவைப் பற்றிச் சிந்தித்தேன்! அந்தக்காட்சி... தான் போட்டுக்கொண்டிருந்த சட்டையைத் தலைக்கு வைத்துப் படுத்துறங்க அண்ணா அவர்கள் அதனை அப்படியே போட்டு எங்களைப் புன்முறுவல் பூக்க வரவேற்றார்கள். அண்ணா இவ்வளவு எளிமை நிறைந்தவரா? என்று வியந்தேன்! இவர்தானா வேலைக்காரி எழுதிய அறிஞர் என்று வினா எழுப்பியவண்ணம் நடந்துவந்த என்னைத் திரு. சத்தியேந்திரன் அவர்கள் அண்ணாவின் கொள்கைகள், திறமைகள், பண்புகளைப் பற்றியும் மற்ற தலைவர்களின் கொள்கைகள், திறமைகள் பண்புகள் பற்றியும் கூறினார்கள். அன்றிலிருந்துதான் நான் அண்ணாவின் தம்பியருள் ஒருவன் ஆனேன். அந்தப்பசுமை நினைவுகள் நினைக்கிறேன்; நெஞ்சமெல்லாம் நிறைகிறது!

திருச்சி மாநாட்டுக்குத் திருக்குறள் ஓவியங்கள் தீட்ட என்னை குளித்தலைக்குத் திரு இளமுருகு பொற்செல்வி அவர்கள் அழைத்தார்கள். அவரின் இல்லத்தில் முப்பத்திரண்டு குறளுக்கு ஓவியங்களைக் கற்பனையில் வண்ண ஓவியமாக்கி மாநாட்டில் ஓவியக்கூடத்தில் வைத்திருந்தோம். பல பாராட்டுகள் பெற்றன. மறுநாள் காலையில் அண்ணாவைப் பார்க்க நானும் எஸ். என். லிங்கம் அவர்களும் சென்றோம்.

பின் அண்ணாவிடம் ஓவியம் பற்றிக் கேட்டு விட்டு அங்கு இருந்த என்னிடம் மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள் "எவ்வளவு பணம் வேண்டும் முத்து?" என்றார்கள். எனக்

குப் பணமே வேண்டாம்" என்றேன் நான். உடனே, அண்ணா அவர்கள் என்னைப்பார்த்துப் புன்முறுவல் பூத்தார்கள். அந்தப் புன்னகை தான நான் பெற்ற பெரும்பேறு! அந்தச் செல் வத்தைத்தானே அவர்களிடம் எதிர்பார்த் தேன்! அதற்குப் பணம் ஈடாகுமா? பகல் உணவுக்குப் பின் நான் விடைபெற்றுச் சென்றேன்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா விற்கு ஓவியப் பணிக்காகச் சென்றிருந்த நான் அண்ணா அவர்கள் தங்கிய திரு டாக்டர் அருணா சலம் இல்லத்தில் சென்று அண்ணாவுடன் எனது நண்பர்கள் புகைப்படம் எடுக்க வேண்டும் என விரும்பி அதற்கான ஏற்பாட்டுக் காத்திருந் தேன் அண்ணா அவர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். எழுந்ததும் விபரம் கூறினேன். அப்போதுதான் கோனார் புத்தகக் கடையில் நந்திக்கலம்பகம் நூல் வாங்கி வரப் பணித்தார்கள் நானும் நண்பர் பழனியப்பனும் ஓடோடி வாங்கி வந்தோம். ஓடிய ஓட்டம் இருக்கிறதே......புகைப்படத்திற்கு உட்கார்ந்த அண்ணா அவர்கள். பின்புறம் திரும்பிப்பார்த்து பின்னால் உள்ள பாட்டில்களை எடுத்துவிடக் கூறினார்கள். டாக்டர் வீடாகையால் அலமாரி யில் காலிப்பாட்டில்கள் இருந்ததைக் காட்டி புகைப்படத்தில் பின்னால் இருந்தால் தவறாகப் படும் என்பதை உணர்ந்த நாங்கள் எல்லோரும் சிரித்தோம் அண்ணாவும் சிரித்துக்கொண்டார். கள், அந்த நிகழ்ச்சியை நினைக்கிறேன் நெஞ் சமெலாம் நிறைகிறது.

மாண்புமிகு நாவலர் அவர்கள் நடத்தி வந்த மன்றம் இதழுக்கு ஓவியங்கள் தீட்டி வந்தபோது அடிக்கடி அண்ணா பார்த்துப் பாராட்டுவார்கள் இயக்க வளர்ச்சிக்கு ஈடு படுத்திக்கொண்ட நான் புதுமுறை ஆட்டோ வும் அண்ணாவைப்பற்றிய ஆங்கிலக் கவிதையும் பொங்கல் வாழ்த்தில் வெளியிட்டேன். பெரிய குளத்தில் நடந்த மாநாட்டிலும் ஓவியப்பணி செய்து பாராட்டும் பெற்றேன்.

காஞ்சி இதழிலிருந்து ஒருநாள் கடிதம் வந்தது. உடன் வரவேண்டும் என்று இருந்தது. நண்பர் சுதர்சன் என்னைக் காஞ்சிக்கு அழைத் துச்சென்றார். அறிஞர் பெருந்தகையைக் கண் டேன். வணக்கம் கூறி நின்றேன். அருகி லேயே அமரவைத்து, கதைக்கான குறிப்பினைப் படித்துக் காட்டி "என்ன முத்து! புரிகிறதா? காலம் உடைகள் எல்லாம் கெய்சர் காலம்! தலைப்பு—"இரும்பு முள்வேலி" என்றார்கள். காஞ்சி அலுவலகத்திலேயே தங்கி ஓவியங்கள் தீட்டித் தந்தேன்.

"திங்கள் கிழமை சென்னை வருகிறேன் ஸ்கெட்ச் பார்த்துப் படம் போடலாம்" என் றார்கள்" "சரி அண்ணா" என்று சொன்னதும் "முத்து! நானே 'காஞ்சி'க்கும்படம் போட எண்ணினேன். இவர்கள் எல்லாரும் ஒத்துக் கொள்ளவில்லை" என்று புன்னகை பூத்திடச் சொன்னார்கள்.

அப்போது அண்ணா அவர்கள் எழுதிய இரும்பு முள்வேலிக்கான குறிப்புகளை பத்திரப் படுத்தி வைத்துள்ளேன். இன்னும் அதனைப் பார்த்து மகிழ்கிறேன்.

இப்படிப் பல இன்ப நினைவுகள் தான் எனக்கு நிறைவு அளிப்பவை, அண்ணாவுடன் இருந்த அந்தப் பொன்னான வாய்ப்புகள் கிடைத்தற்கரியவை; என்னுடைய வாழ் நாளில் பசுமை நிறைந்தவை? ஆம்! அந்தப் பழைய நினைவுகளை இன்னும், நினைக்கிறேன்? நெஞ்சமெல்லாம் நிறைகிறது!

---

எட்டய புரம்என் றாலே
இருந்தமிழ் நெஞ்சத் தெல்லாம்
சட்டென நினைவிற் றன்னால்
வருதல் 'பா' 'ரதி தான்! அந்த
மட்டிலாப் புகழ்சேர் ஊர்தான்
தந்துள்ள திந்நாள் வண்ணம்
தொட்டெழு தோவி யத்தில்
சுடரும்மா முத்தை முத்தாய்!

'பண்டையத்' தமிழர் மாட்சி
பகரும்நல் இலக்கி யங்கள்!
விண்டுரை குறள்நூல்—சொல்லும்
விளக்கஓ வியங்கள் தாரீர்!
எண்டிசை வியக்கும்; ஏற்றம்
கண்டிடும்!" என்றார் அண்ணா!
கண்டுநேர் அச்சொல் ஏற்றுக்
கடமைசெய் கின்றார் முத்து!

---

'ஜாதி' என்ற சொல்லே தமிழில் இல்லை! அதன் முதல் எழுத்தான 'ஜ' தமிழ் எழுத் தில்லை. ஜாதியை ஏற்றுக்கொண்டது போலவே 'ஜ'வுக்குப் பதில் சொல்லுக்குச் சாதியையும் ஏற்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.'

—பேரறிஞர் அண்ணா

முக்கோணத் தெற்கு நாட்டின்
முன்னவன் 'அண்ணா' மூவாத்
தக்கணத் தீப கற்பத்
தனிப்பெருந் தலைவன் அண்ணா!
மிக்காரும் ஒப்பா ரில்லா
மேதையும் 'அண்ணா' எல்லா
மக்களும் 'தலைவன்' என்றே
வழுத்திடத் தகுந்தோன் அண்ணா!

—கவிஞர் வில்லவன் கோதை

# அண்ணுவுக்குப் பிறந்தநாள் பரிசு!

புகைப்பட வித்தகர்: ஏ. சுந்தரம்

அண்ணுவை அவர்பிறந்த தினத்தன்று விடியற்காலையிலேயே போய் சந்தித்து விடுவேன். அண்ணு அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் அந்த ஆண்டில் 59—வது பிறந்த தினம் வந்தது. அண்ணு அவர்களின் தாயாரை படமெடுத்து படத்தின் கீழ் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்—தன் மகனைச் சான்ருேன் எனக் கேட்டதாய்" என்ற குறள் வரியை எழுதி அப்புகைப்படத்தை அண்ணு அவர்களுக்கு பிறந்த தினப் பரிசாக அளித்தேன். புன்முறுவலோடு என்னுடைய சிறிய அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டு சிறிது நேரம் படத்தைப் பார்த்தார். பிறகு 'எப்பொழுது இந்தப்படத்தை எடுத்தாய்' என்ருர்.

நேற்று இரவு காஞ்சி சென்று எடுத்து வந்து இரவே பிரிண்ட் செய்து கண்ணுடி போட்டு இப்பொழுதுகொண்டு வந்தேன்" என்றேன். அருகில் இருந்த உதவியாளரை அழைத்து அவரிடம் படத்தைக் கொடுத்து தனது தனி அறையில் அந்தப் படத்தை வைக்கும்படி சொன்னுர்கள்,

முந்திய ஆண்டுகளைவிட அந்த ஆண்டு கூட்டம் மிக அதிகமாக வந்தது மதியம் சாப்பாட்டு நேரத்தில் கூட்டம் சிறிது குறைந்ததும், அருகிலிருந்த என்னிடம், "பார்க்காத முகத்தைதையெல்லாம் பார்க்கிறேன். போடாத கரமெல்லாம் மாலை போடுகிறது," என்ருர். எந்த நேரத்திலும் எதையும் உடன் அடையாளம் கண்டு கொள்ளுகிறவர் அண்ணு புகழ்ச்சி என்ற திரையைக்கொண்டு அண்ணுவின அறிவுக்கண்ணை மறைத்து விட்டோம். தங்கள் உள எண்ணத்தை அவர் அறிய மாட்டார்," என்று எவரும் நினைக்க முடியாது. என்பதை இதுபோன்த பல நிகழ்ச்சிகள் எனக்கு உணர்த்தியிருக்கிறது.

'முரசொலி' வெளியிட்ட அண்ணு 60-வது பிறந்த தின மலருக்கு அண்ணு அவர்களைப் படம் பிடிக்கச் சென்ற நிகழ்ச்சியை சகோதரர் தினகரன் அவர்கள் அண்ணு 60-வது ஆண்டு மலரில் விரிவாக எழுதியிருநதாகள். அண்ணு அவர்கள் தன் உடல் வலியையும் பொருட்படுத்தாது சுமார் இரண்டே முக்கால் மணி நேரம் எங்களோடு படமெடுக்க ஒத்துழைத்தார்கள்.

முடிக்குமுன்பு, 'போதுமா?" என்று முறுவல் செய்தார். முகத்தில் சோர்வு காணப்பட்டது. நான் கடைசியாக அண்ணு அவர்களை பிரத்தியேகமாக படம் எடுத்தது அதுதான் கடைசி முறை. நான் முதலில் தனியாக அவரை படம் எடுக்கும்போது கழகத்தின் தலைவர் அண்ணு! கடைசியாக தனியாக அவரைப் படம் எடுக்கும்போது தமிழ்நாட்டின் முதல்வர் மாண்புமிகு அண்ணு. படம் எடுத்து முடித்ததும்,"போதுமா?" தனக்கே உரிய புன்னகை. இடைக்காலத்தில் அவர் புகழ் ஓங்கிற்று. அந்தஸ்து கூடிற்று. ஆனல் அவர் அப்படியே இருந்தார்.

---

## தென்னவர் தெய்வம்!

தென்னவரின் தெய்வமலர்: இனித்திருக்கும்
தேன்தமிழின் தந்தையவர்! அறிவுலகின்
மன்னவருள் மன்னரவர்; பதவிக்காய்த்தன்
மானந்தன்னை விற்றவரை வென்றவீரர்!
சின்னமொழி பேசிநின்ற மனிதர்தம்மின்
சினமழித்துச் சிந்தனையை யூட்டுவித்து
தன்னையவர் தலைவரென்று ஏற்கச்செய்த
தமிழினத்தின் தகைமைசால் வேந்தரவர்!

கொழுத்திருந்த கூட்டமதை எதிர்த்துவேர்வை
கொட்டிநின்ற மானிடர்க்குத் துணையானவர்!
பழுத்தறிவுப் பேராசான் காந்தியார்க்குப்
பக்கததில் நிறுத்துதற்கு இணையானவர்!
அழுத்தமாய்த் தனகருத்தைக் கூறுங்காலை
அஞ்சாது; வரும்பகையை முறிக்கும்சூரர்!
எழுத்தாற்றல்-பேச்சாற்றல் இவையிரண்டின்
இலக்கியமாய்-இலக்கணமாய் வாழ்ந்த தீரர்!

கலையோசை முழங்கும நாடாம்
கனித்தமிழ் நாட்டு மக்கள்
நிலையோசை உலகம் கேட்க
நடுநிலை ஏடா யோங்கும்
'அலையோசை! அறியும் (நாடு)அவ்
விதழின்ஆ சிரியர்—நட்பின்
வளஓசை கேட்கும் வேட்கை
மனத்தவர் பரசு ராமன்!

மன்னவர் காலந் தொட்டு
மக்களின் ஆட்சி காணும்
இன்றுளார் காலம் மட்டும
தன்னல மின்றி நாடு
இன்தமிழ் தமிழர் ஏற்றம்
காணவே உழைத்த தாலே
தென்னவர் தெய்வம் என்று
செப்பினர் பரசு ராமன்!

—ஏ. பரசுராமன்

காஞ்சிபுரத்தில் எத்தனை வகையான ஆலயங்கள் இருந்தாலும் வரகுவாசல் தெருவில் உள்ள அண்ணா வாழ்ந்த இல்லம்தான் அறிவாலயமாக, அன்பாலயமாக, அறநெறி ஆலயமாகக் காட்சியளிக்கிறது.

ஆலயங்களில் பழம்பெரும் பெருமை கூறும் கலைச் செல்வங்களைப் பாதுகாத்து வைத்திருப்பதுபோல் அண்ணா அவர்களின் அழியா நினைவுச் சின்னங்களாக, அவர் கைபட்ட பொருள்கள் கண்ணே போல் காத்து வைக்கப்பட வேண்டும். — தினகரன்

## எண்ணுகின்றேன் . . . எழுதமுடியவில்லை . . .

குமாரி விஜயா

அகம் நிறைந்த தெய்வமாம் நம் அண்ணா அவர்களைப்பற்றி நாள்தோறும் ஊர்தோறும் சென்று ஆயிரம் ஆயிரம் மக்களிடையே பேசுகின்றேன்; பாடுகின்றேன். ஆனால் அதனையெல்லாம் எழுதிட எண்ணுகின்றேன்; முடியவில்லை!

கண்விழித்து எழும்போதும் உறங்கிடப் போகும் முன்பும் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தைத்தான் காணுகின்றேன்; கண்ணீர் உதிர்க்கின்றேன்; கரங்களைக்கூப்பிகின்றேன். இதையன்றி, அண்ணா அவர்களைப் பற்றி எண்ணுகின்றேனே தவிர எழுத முடியவில்லை.

நாடும் தமிழ்மொழியும் நற்றமிழர் எல்லோரும்
பீடுடனே வாழ்ந்திடவே பேரறிஞர் அண்ணா பண்
ணுடும் புகழ்ந்தேற்றும் நல்லாட்சி தந்துசென்றார்;
நாடி வருமுன்னம் மக்களுக்கு நன்மையெலாம்
தேடிச்செய் சீர்கலைஞர் ஆட்சித் திருப்பணிகள்
ஏடும் எழுதும் அடங்காதென் றூரூராய்
கூடற் கினியதமிழ் மக்க ளிடம்கூறிப்
பாடும் விஜயாள் தமிழ்க்குயிலாள் எம்பாவாய்!

## அண்ணா ஒரு ஞானி!

குமரி முத்து

அறிஞர்: பேரறிஞர்; அறிவுலக மேதை; அறிஞர் பெருந்தகை; அறிவுப் பேரொளி; அறிவுச்சுடர் இப்படி அடுக்கடுக்காக ஆயிரம் சொல்லினும் அகமாரப் புகழ்ந்துரைப்பினும் அண்ணா ஓர் அறிஞர்தானா?

அறிவு என்னும் சொல்லுக்கு முன்னும் பின்னும் எந்தச் சொல்லைப் போட்டு ஆயிரம் புகழ்ந்தாலும் அறிவறிந்த அறிஞர்கள் எல்லாம் ஆசைக்கு உட்பட்டவர்கள்; ஆறாத சினத்துக்கு ஆட்பட்டவர்கள்; தான், தனது, தனக்கு, தன்னைச் சார்ந்தோர்க்கு என்ற பாசத்திற்கு உடந்தையானவர்கள்தாம், அவர்களெல்லாம் அறிஞர்கள்—அறிவியல் அறிஞர்கள்! அப்படிப்பட்டவர்களின் வரிசையில வைத்தெண்ணிப் பார்க்கத் தகுந்த அறிஞர்தானா அண்ணா? இல்லை; இல்லை; இல்லை..!

அறிவு கலை, அறிவியல் ஆக அத்தனைத் துறைகளையும் கடந்து நிற்கும் ஞான நிலையில் அல்லவா அண்ணா அவர்கள் இருந்தார்கள்!

அண்ணா ஓர் அறிஞர்தானா என்றால் இல்லை! அண்ணா ஒரு ஞானி!



குமரியின் கழுத்தும் முகத்தின்
பிறப்பிடம்! நிகண்டு கூறும்!
குமரிமுக் கடல்சேர் வட்டம்
குவித்தமுத் துக்கள் தம்மில்

'குமரிமுத்' தென்பார் நல்ல
நகைச்சுவை நடிகர்! அன்புத்
தமிழ்வடி வான அண்ணா
ஞானியெனச் சாற்று கின்றார்

### வாரியார் கூறுகிறார்

தண்ணார் தமிழ் தழைக்க
சாந்திச் சிறை சார்ந்த
பண்ணார் தமிழ்ச் சோலைப்
பைங்கிளியாம்—அண்ணா

மறைந்தா ரிலையே! இம்
மாந்தருள மெல்லாம்
நிறைந்தாரே என்றும்
நிலைத்து!

# உழைப்பின் உயர்வு



டி.வி. இராமமூர்த்தி J.P

"உழைப்பின் மேன்மை ஒருவரின் உயிர் வாழ்வின் மேன்மை: அவரது குடும்பமேன்மை! அவர் சார்ந்துள்ள சமுதாயமேன்மை; அதுவே நாட்டின் மேன்மையாகி நானிலத்தின் மேன்மையாகவும் மாறும்! அத்தகு மேன்மைக் குரிய உழைப்பினை மறந்து உழைக்காமல் பிழைப்பவர்கள் சமுதாயத்தில் ஒட்டுணிகள்! உயிர் வாழ்ந்தும்—பிழைத்தும் உலாப் பிணங் கள்! வெற்று உடலம் சுமப்பவர்கள்! ஆதலால் நாம் ஒவ்வொருவரும் தகுதிக் கேற்ப உடல் வலிமைக் கேற்ற உழைப்பினை மேற்கொள்ள வேண்டும். அதுதான் நமது வருங்கால வாழ் வுக்கு—உயர்வுக்கு வழிவகுக்கும். உலக உயர் வுக்கும் வகை பிறக்கும்!" இப்படியெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேருரை ஆற் றிடக் கேட்டிருக்கிறேன். உள்ளத்தில் அதனைப் பதித்தும் இருக்கிறேன்: என்னையும் அப்படிப் பழக்கிக் கொண்டு வந்திருக்கிறேன். நான் என்ன? இலட்சோபசலட்சம் பேர்! தங்களை உழைப்பினால் உயரும் உயர்வுக்கு ஒப்படைத் துக்கொண்டு உயர்ந்திட ஊக்கமும் ஆக்கமும் தந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறருக்குச் சொன்னதோடு மட்டும் அமைந்து விடவில்லை; ஓய்வற உழைத்தார்கள்; உயர்ந்தார்கள்; முன்னேற்றம் கண்டார்கள்; எண்ணற்றோரை உயரவும் முன்னேற்றம் காணவும் செய்தார்கள் இதை நாடே அறியும். அதற்குச் சான்றாக பளிச்செனச் சுட்டிக்காட்ட வேண்டுமானால், இந்தியத் துணைக்கண்டத்திலேயே திறமான நிலையான—புகழான ஆட்சி நடத்திவரும் நமது தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர் களைத்தான் குறிப்பிடவேண்டும்.

அறிஞர் அண்ணாவின் அருமருந்தன்ன அறி வுரை அன்புரைகளை ஏற்று அயராது உழைத்து முன்னேற்றம் கண்ட கலைஞர் அவர்களின் உழைப்பிற்கும் அதனால் பெற்றுவரும் புகழுக்கும் எல்லையில்லை என்றே சொல்லலாம் அத்தகு கலைஞரை முன் மாதிரியாகக்கொண்டு உழைம்பின் உயர்வுக்கு எடுத்துக்காட்டாகக் கொண்டு நாமும் உழைப்போம் உயர்வினைக் காண்போம். அடுத்தவர்களுக்கும் உயர்வுகாண உழைப்போம்! அதுதான் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு அவர்தம் உழைப்பின் உயர்வுக்கு நாம் செய்யும் நன்றியும் வணக்கங் களும் ஆகும்.

பொழுதெல்லாம் உழைத்து ழைத்து
புழுதியில் பூத்து தன்முன்
அழுபவா தம்மைக் கண்டே
அகங்குழைந் தியன்ற தெல்லாம்
வழங்கிய மனமும் கையும்
வாய்த்தவர் இராம மூர்த்தி!
பழுதுபட் டாலும் நெஞ்சம்
பதைப்பவா உதவு தற்கே!

---

## இலக்கண இலக்கியம்

அன்புக்கு இலக்கணம் அன்னையின் இதயம்
அறிவுக்கு இலக்கணம் காஞ்சியின் உதயம்
பொறுமைக்கு இலக்கணம் விளைகின்ற நிலம்
புகழுக்கு இலக்கணம் வானுயர்ந்த இமயம்

கருணைக்கு இலக்கணம் வான்சிந்து மாமழை
வாழ்வுக்கு இலக்கணம் வள்ளுவனார் திருக்குறள்
இத்தனை இலக்கணங்களும் எழிலாட்சி
செய்யும் இலக்கியமே பேரறிஞர் அண்ணா

—நெல்லைராஜன்

---

தலைக்கனி அறிவே என்னும் சான்றுக்குச் சான்று காட்ட
தலத்தணி காஞ்சி தந்த தமிழ்த்தலை மகனார் அண்ணா
இலக்கணம் பலவற்றிற்கோர் இலக்கியம் ஆம் என்கின்றார்
கலைக்கனி செய்யும் நெல்லை ராசனார்! விளக்கம் காண்க!

# அண்ணா தேசியவாதி தெய்வபக்தர்

**டி.என்.ஆர்**

1909ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் காஞ்சி மண்ணில் பிறந்து 1969ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2ம் நாள் தமிழகத்தையே சோகக்கடலில் மூழ்கவிட்டு வங்கக் கடல் மண்ணில் மீளாத் துயில் கொள்ளச் சென்றாரே...தமிழக முதல்வர்... பேரறிஞர் அண்ணா அவர்களது பெயர் மூன்றெழுத்தைக் கொண்ட வெறும் பெயர் அல்ல; தமிழ்ச் சமுதாயத்தின் ஓர் புகழ் மிக்க சகாப்தம்; ''பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்றார் பாரதி. ஆனால் பேச்சுத் திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட வைத்தார் அறிஞர் அண்ணா.

*அண்ணா ஓர் தனி மனிதரல்ல!*
*ஓர் வரலாற்று நாயகர்!*
*தமிழர்களின் தலைவர்!*
*எழுத்து வேந்தர்!*
*ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் ஈடு*
*இணையற்ற பேச்சாளர்!*
*கலையுலகின் ஒளி நிலா!*
*பகுத்தறிவு பகலவன்!*
*நாலரைகோடி தமிழரை வழிநடத்தும்*
*நம்பிக்கை நட்சத்திரம்!*
*அரசியல் வித்தகர்!*
*அறிஞர்க்கெல்லாம் அறிஞர்!*
*தலைசிறந்த ஜனநாயகவாதி!*
*அன்பும், பண்பும் அமைந்த*
*கண்ணியவான்!*
*ஏழைப் பங்காளன்!*
*எளிமையின் சின்னம்!*

எல்லாவற்றிற்கும் மேலாக ..அறிஞர் அண்ணா அவர்கள் நாடுபோற்றும் நல்லவர், உத்தமர் என்றெல்லாம் தமிழ்நாடும், தமிழர்களின் ஏடும் புகழாரம் சூட்டி மகிழ்ந்தன; புகழின் உச்சியில் வைத்து மெச்சி மகிழ்ந்தன. அரசியல் வாழ்வில் பேரறிஞர் அண்ணாவின் எதிரிகள் கூட இக்கூற்றுக்களை எதிர்க்கத் துணியார். ஏனெனில் அவை யாவும் ஆய்ந்து அலசி கண்ட தீர்க்கமானமுடிவுகள் என்றாலும் இக்கட்டுரை எழுதுவதன் நோக்கமே அறிஞர் அண்ணா அவர்கள் வெறும் அரசியல்வாதியாக மட்டும் வாழ்ந்து மறையவில்லை, அவர் ஓர் தேச பக்தர் ஆகவும், ஓர் தெய்வ பக்தராகவும் வாழ்ந்து மறைந்துள்ளார் என்பதனை விளக்குவதற்காகவும் தான்!

## அண்ணா ஓர் தேச பக்தர்

இந்திய மண்ணிலிருந்து ஆங்கிலஅரசை அண்ணல் காந்தியார் அறவழியால்அகற்றிய போது இந்திய நாடே ''ஆடுவமே பள்ளு பாடுவமே—ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'' என்று தெம்மாங்கு பாடிய போது தமிழக தலைவர் பெரியார் அவர்கள் சுதந்திர நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று கட்டளையிட்டபோது அக்கழகத்தின் தளபதியாக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தனது திராவிட நாடு இதழில் அதனை மறுத்து சுதந்திர நாளை ஏற்றி போற்றி. அடிமை விலங்கொடித்த ஓர் இன்பநாள் என்று எதிர்ப்புக் கொடியினை அன்றே பிடித்தார். இந்த செயலால் தலைவர் பெரியார் அவர்களது சீற்றத்துக்கு அவர் ஆளானபோதும் தான் ஓர் சிறந்த தேசீயவாதி என இந்திய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

அடுத்து 1962ம் ஆண்டில் ''தூங்கும் அரக்கன்'' என நெப்போலியனால் அழைக்கப்பட்ட வஞ்சக சீனா தனது நஞ்சு மனத்

தால் நீசக் கரத்தால் ''மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்று உரிமை கொண்டாடி உலகத்து கூரையாம் இமயமலை உச்சியின் கூரையேறி சண்டையிட்ட போது வேலூர் வெஞ்சிறையில் முந்தைய அரசால் தான் அடைக்கப்பட்டு பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டு வெளியே வந்ததும் இந்தியப் பேரரசுக்கு தனது நேசக் கரத்தை நீட்டி சீன ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு உறுதுணையாக தன் கண்ணே போல காத்து வந்த ''திராவிட நாடு திராவிடர்க்கே'' என்ற உயரிய லட்சியத்தை தயக்கமின்றி கைவிட்டு தான் ஓர் ஒப்பற்ற தேசியவாதி என்ற பெயரை நிலைநிறுத்திச் சென்றார்.

எனவே தான் காங்கிரசு அரசின் தேச பக்தி மிகுந்த இருபெரும் முதல்வர்கள் வங்க முதல்வர் பி சி ராய் அவர்களும் மராத்திய முதல்வர் பல்வந்தராய்மேத்தா அவர்களும் இறந்த போது இந்தியப் பேரரசு இராணுவ மரியாதை வழங்கி அவர்களை கௌரவித்தது, அண்ணா காலமான அத்துயரச் செய்தியைக் கேட்டவுடன் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் இந்தியப் பேரரசின் சார்பில் உள்துறை அமைச்சர் சவாணை அனுப்பி மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்து கௌரவித்தார். தென் பிராந்திய இராணுவ தளபதி ''திரேவல்'' இராணுவ முறைப்படி இறுதி வணக்கம் செலுத்தினார். அண்ணாவின் இறுதியாத்திரையில் முப்படை வீரர்களும் கலந்து இராணுவ மரியாதை செய்து உடல் அடக்கம் செய்யவும் பாரதப் பிரதமர் ஏற்பாடு செய்தார்.

நாட்டின் பெருந் தேசியத் தலைவர்கட்கு கிடைக்கக் கூடிய மரியாதை அண்ணாவுக்கு வழங்கப்பட்டதே...... அவர் ஓர் தேசியவாதி என்று அங்கீகாரம் பெற்றதனால் தான்! இதைத் தவிர கேரளம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் அண்ணாவிற்கு இரங்கலைத் தெரிவித்து கௌரவிக்க முழுஅளவில் விடுமுறை விட்டு துக்கம் கொண்டாடின. அவர் இறந்த போது எந்தெந்த சட்டமன்றங்கள் செயல் பட்டனவோ......அந்த சட்டப் பேரவைகளில் அண்ணா மறைவிற்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்பட்டு தங்கள் அஞ்சலியைச் செலுத்தி கௌரவித்துள்ளன. இஃது எந்த தேசிய தலைவருக்கும் கிடைக்காத மிகப் பெரிய கௌரவம், ஓர் சிறந்த தேசிய அந்தஸ்து. அண்ணா உடல் நலங் குன்றி மருத்துவ மனையில் உள்ள போது பாரதப் பிரதமரும் உதவிப் பிரதமரும் அண்ணாவைக் கண்டு உடல் நலம் உசாவியது... அரசியல் வரலாற்றில் நாம் முதல் முறையாகச் சந்தித்த அரசியல் புதுமை. இவையாவும்...அண்ணா அவர்கள் ஓர் சிறந்த தேசியவாதி என்று தெள்ளத்தெளிய காட்ட வல்ல சான்றாகும்.

## அண்ணா ஓர் தெய்வ பக்தர்!

''மக்கள் குரலே...மகேசுவரன் குரல்'' என்பது அண்ணா கண்ட தாரக மந்திரம்..

நடமாடுங் கோயிலான பாமரர்கட்குச் செய்யும் தொண்டு படமாடுங் கோயில் பரமர்க்குச் செய்யும் தொண்டு.. ஆகக் கருதினார்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்னும் கொள்கையை அவர் உயிரென ஓம்பினார். ஏழையின் சிரிப்பினிலே இறைவனைக் காண அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார் அண்ணா... அவர்கள் வாழ்வில் எந்த கோயிலுக்கும் சென்றதில்லை; எந்த ஆண்டவனையும் கரங் கூப்பி வணங்கியதில்லை.. எந்த திருக்குளத்திலும் நீராடவில்லை... திருத்தணி முருகன் திருக்கோயிலுக்கு... மலைப்பாதையைத் திறந்து வைக்கச் சென்றதைத் தவிர!

ஆனால் அண்ணா அவர்கள் உடல் நலம் குன்றி அமெரிக்க நாட்டின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை நிகழ்ந்த போதும் மீண்டும் அடையாறு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடந்த போதும். அண்ணா அவர்கள் பூரண குணமடைய ''பரிபூரணனை'' வேண்டி தமிழகத்தில் கோயில் கொண்டுள்ள எல்லா தெய்வங்

கட்கும் அபிஷேகம் செய்து ஆராதனை செய்து விபூதி குங்குமம் அனுப்பப்பட்டது... இந்து ஆலயங்களைத் தவிர தமிழகத்திலுள்ள மசூதிகளிலும் மாதா கோயில்களிலும் வழிபாடு நடத்தப் பெற்றன. அண்ணாவின் நலன் வேண்டி தேவாலயங்கள் அனைத்திலும் மணியோசை கேட்டது. இத்தகைய அற்புத வழிபாடு அல்லும் பகலும் வழிபாடு ஒன்றையே உயிராகக் கொண்டு வாழும் அருளாளர்கட்குக் கூட கிட்டாத ஒன்று. ஆண்டவன் திருநாமம் ஒன்றையே அனுதினமும் பூசிக்கும் அரனடியாளர்களுக்குக் கூட காசி முதல் கன்னியாகுமரி வரைஉள்ள ஆலயங்களில் அர்ச்சனை நடந்திருக்க முடியாது. காலமெல்லாம்... ஏழைகளின் விழிகளில் வழிந்தோடும் நீரைத்துடைக்கும் ஒப்பற்ற பணியில் ஈடுபட்ட அண்ணாவின் மக்கள் தொண்டை மகேசுவரன் தனக்குச் செய்த தொண்டாக ஏற்றுக் கொண்டதாக நாம் ஏன் கொள்ளக் கூடாது?

அமரர் ஆன அண்ணா அவர்கள் இப்போது நாம் அனைவருக்கும் தெய்வமாகி விட்டார். அண்ணா சமாதி இப்போது ஓர் யாத்திரைத் தலமாகி விட்டது. திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை பயபக்தியோடு வழிபடுவது போல மக்கள் அண்ணா சமாதிக்கு சரமாரியாகச் சென்று வழிபட்டு வணங்கிச் செல்லுகிறார்கள்.

அண்ணா அவர்கள் நேரு மறைவுக்குப் பின் இந்திய அரசியல் வானில் கருமேகம் சூழ்ந்து இந்திய நாடு கொந்தளிக்கும் கடலில் சிக்கித்தவித்து திசைக் கருவியில்லாத நாவாயாக தவித்த போது பூகோள வரம்பு கண்ட மாலுமியாக, திசைகாட்டும் கலங்கரை விளக்கமாக, இருளில் ஒளிகாட்டும் ஒளிவிளக்காக, தீப ஸ்தம்பமாக நம்மை வழி நடத்தும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கி இந்திய நாட்டின் இரட்சகராக தோன்றி பாரத நாட்டின் சாசனமாக திகழ்வார் என்று இந்திய அரசியலைக் கூர்ந்துகவனித்த இந்திய அரசியல் நோக்கர்களது எண்ணம் மண்ணாகச் சாவு என்ற கொடிய அரக்கன் அண்ணாவின் இனிய உயிரைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான்.

சாவு என்பது நாம் கட்டாயம் கொடுத்துத் தீர்க்க வேண்டிய கடன். அது உயர்ந்தாரையும் தாழ்ந்தாரையும் நல்லாரையும் பொல்லாரையும் சமமாகவே பார்க்கிறது. பூனையாக இருந்தாலும் பூவுலகை ஆளும் மன்னனாக இருந்தாலும் விட்டு வைக்காது.

"விதி கட்டளையிடும் போது மன்னாதி மன்னர்களும் மண்டியிடத்தான் வேண்டும்" என்ற ட்ரைடன் கூற்றுக்கு ஒப்ப கூற்றுவன் அண்ணாவின் உயிரைக் கொத்திக் கொண்டு போய் விட்டான்.

"வாழ்வு எல்லா மனிதர்களையும் சமப்படுத்துகிறது; சாவோ... சிறப்பினை வெளிப்படுத்துகிறது"

"Life Levels all men
Death Reveals eminent"

என்று பேரறிஞர் பெர்னாட்ஷா கூறியதைப் போல, சாவு, தமிழ்நாட்டு பெர்னாட்ஷா அண்ணாவின் சிறப்பினை, திறனை, பெருமையினை ஒளிவிடச் செய்கிறது.

அறிவியல் பயின்றவர்;
அரசியல் புரிந்தவர்;
அறிஞர் அண்ணா உளம்
உணர்ந்தவர்!

நிறை மனம் கொண்டவர்;
உதவிடும் நெஞ்சினர்;
நினைவினிற் கொள்ளவும்
தகுந்தவர்!

அற நிலையத்துறை
துணை ஆணையராய்
மயிலை கபாலீச் சரத்தில்

நறும் பணி செயும்-த.
நாகராசன்-இவர்
நற்பெயர்! 'டி.என்.ஆர்.'
சுருக்கம்!



# தூயனவன் தூங்கட்டும்



கவிஞர் "முரசொலி" மணிமொழி

ஓலக் கடலலைகாள்!
ஓயாமல் நிதமுழைத்து
மீளாத் துயில் கொள்ளும்
வேந்தனை நீர் எழுப்பாதீர்;

தண்ணார் கடலிருந்தே
தாலாட்டுப் பாடுங்கள்!
அண்ணல் புகழிசைத்தே
ஆராரோ பாடுங்கள்!

ஆராரோ நீயாரோ
அற்புதனின் ஊர்யாதோ
பேரெதுவோ என்றங்கே
பேதையெனப் பாடாதீர்!...

ஊரே அறியு மந்த
உத்தமனின் பேர்சொன்னால்!
பாரே அறியும்; அந்தப்
பரம் பொருளும் தானறியும்!

தூணும் துரும்பு மந்தத்
தூயவனின் பேர்பாடும்!
வானும் கதிர் மதியும்
வாயாரப் பாடிவரும்

அண்ணாத் துரை யென்றே
அன்னையவள் பேர் வைத்தாள்
எண்ணாத் துறைகளிலே
ஏந்தலவன்பேரெடுத்தான்!

இந்நா நிலமெல்லாம்
எம்மான் புகழிசைக்கத்
தந்நாத் திறத்தாலே
தனிச்சிறப்பைப் பெற்றமகன்!

காஞ்சீ புரமென்றால்
கவின்பட்டுச் சேலைகளே
மாந்தர் நெஞ்சத்துள்
மலர்ந்துவரும் நினைவாகும்;

அந்த நினைவையெல்லாம்
அப்புறமாய்த் தள்ளி விட்டே
இந்தத் தூயவனின்
எழில் முகமே இன்றுவரும்!

காஞ்சீ புரமென்றால்
கண்ணியனின் பேர்சொல்வார்
காஞ்சீ புரமென்றால்
காவலனின் ஊரென்பார்!

'கஞ்சி வரதப்பா!'
எனக் கஞ்சிக் கேகியவர்
கஞ்சி வருதப்பா
என்றதெவர் காலத்தில்?

அரிசி இல்லை யென்ற
அரசில்லை இந்நாளில்
அரிசி கொடுத்தோரின்
அரசே நடக்கிறது!

நலந்தா கலைக்கழகம்
நசிந் தெங்கோ போகவில்லை;
வலந்தான் வந்ததுவே
வல்லவனின் வடிவினிலே!

பசுமைப் புரட்சி யெனும்
பாங்கு மிகும் திட்டத்தால்
பசிக்கொடுமை தீர்த்ததெலாம்
பசுமையென் றிருக்கிறது!

நாற்றக் கூவத்தை
நீறுமணநீர் வீதியென
மாற்றும் திட்டத்தை
மலர வைத்த வித்தகனை

போற்றிப் புகழ்ந்தேதான்
பொழுதெல்லாம் படகிழைவோர்
நாற்று நட்டவனின்
நல்லறிவைப் பாடுகிறார்...

சரிகைத் தலைப்பாகை;
சமைசமலைகள்; சீமான்கள்
பெருகத் துணையிருந்த
பேரியக்கம் தனையெடுத்து

அன்றுடங் காய்ச்சிகளின்
அருந்துணையாய் ஆக்கிடவே
மன்றாடி நின்றதொரு
மக்கள் தலைவனவன்!

உப்பரிகை தனிலிருந்த
உயர்வான கட்சியினை
உப்புக்கே அலைவோரின்
உள்ளத்தில் வைத்தமகன்!

மேனாட்டுக் குடியினரின்
மேனா மினுக்கிகளின்
வேட்டைத் தர்பாராய்
விளங்கிவந்த கோட்டையினை

பாட்டாளி வர்க்கத்தின்
பாசறையாய் ஆக்கியவன்!
கூட்டாளி இவரென்று
குனிந்துவரச் செய்தவனே!

எவரும் வர முடியா
தென்றெண்ணும் பலஇடத்தில்
எவரும் வருக வென
இரு கதவம் திறந்ததெவர்?

பட்டாணிப் பொறிகடலை
பாதையிலே விற்றவனை
பட்டாடை அணியவைத்துப்
பார்த்ததெவர் சொல்லுங்கள்!

எங்கோ எப்படியோ
இருந்தபலர் இந்நாளில்
இங்கே வசதி மிகப்
பெற்றுயர்ந்தார் எப்படியா?

அட்சயப் பாத்திரமாய்
அவனளித்த 'சீட்'டாலே
பிச்சாதி பதிகளெலாம்
லட்சாதி பதியானார்!

கீழே கிடந்ததுகள்
கிளர்ந்திங்கே மேல்வந்தால்
வாழப் பிடிக்காத
வன்னெஞ்சர் காழ்ப்பாலே

ஊழல் என்றிடுவார்
உடற்புண்ணில்வழிந்தோடும்
சீழுக்குச் சமமானோர்
'சீ! கழுதை!' என்றிடுங்கள்!

அழுது புலம்பியவன்
அகமலர்ந்து சிரிப்பதுதான்
தொழுது வணங்க வல்ல
சமதர்மச்சித்தாந்தம்!

ஏழை சிரிப்பதற்கே
எருவானால் இறைவனவன்
ஏழை உயருதற்கே
ஏணியென்றன் அண்ணனவன்!

திக்குத் தெரியாமல்
திகைப்பவர்க்குத் திசைகாட்டி;
எக்காலும் நல்வாழ்வை
இயக்கிவரும் தேரோட்டி!

தென்றல் துணையுடனே
பன்னீர் தெளியுங்கள்!
வண்ண முத்தெடுத்தே
மாலையெனப் போடுங்கள்!

மன்னன் கனவுகளை
மண்ணில் நனவாக்கிச்
சின்னவர்கள் காட்டுகிறோம்
சீராளன் தூங்கட்டும்!

ஓ! ஓ! கடலலைகாள்!
ஓங்காரக் கடலலைகாள்!
சீலன் தூங்கட்டும்
சீராட்டிப் பாடுங்கள்!

தூங்காமல் தூங்குகிறான்
எழுப்பாதீர் தூங்கட்டும்!
தூங்காமல் தூங்குகிறான்
தூயனவன் தூங்கட்டும்!

இளமைத்துடிப்பு; எளிமைப் பதிப்பு
பழக இனிய நட்பு!
புலமை வகுப்பு; பொறுமை நடப்பு:
புதுமை காணும் விழிப்பு!

பணி யிவர்க்கு பனிமலர்ப் பூச்
சரம் நிகர் பா தொடுப்பு!
மணி மொழி யிவர் மானத் தமிழ்க்
கவிக்குல மணி விளக்கு!

முதல்வர் டாக்டர் கலைஞர் கண்ட
'முரசொலி நாளேட்டில்
இதய மாரப் பணி செயும் இவர்க்
கினிமை கவிதை நூற்பில்!

முதல்வர் பயண நிகழ்ச்சி யாவும்
முழுமை யாகத் தொகுத்து
புதிய நடையில் எழுதுவார் தமிழ்ப்
பூந்தேனில் தோய்த்தெடுத்து!



# செய்ந்நன்றி சிந்தையூத்த செந்தாமரைப்பூக்கள்

முருகுவண்ணன்

அறிஞர் அண்ணு அவர்கள் அருமை பெருமைபற்றிய தொகுப்பு ஒன்றினை வெளியிட வேண்டும் என்று அளப்பரும் ஆர்வமும் ஆவலும் இருந்தது. அது செயல் வடிவமாகிடத்தக்க ஊக்கம் தந்தது அன்பர் என். வி. கலைமணி அவர்களாகும்.

அறிஞர் அண்ணு அறுபத்தைந்தாவது ஆண்டு பிறந்த நாள் மலர் வெளியிடத் துணிந்தேன். முயன்றேன். ஆக்கப்பணிகளில் ஈடுபட்டேன். அன்பர்கள் நண்பர்களோடு அது குறித்துப் பேசினேன். தொடர்ந்தேன் பணியை— முதன் முதலாக

---

விளம்பரம் கொடுத்து உதவி ஊக்கம் தந்தவர் அருட்திரு சுவிசேஷமுத்து B.D., M.Th.,

---



மாண்புமிகு க. இராசாராம் அவர்கள்

மலருக்கான தொடக்கப் பணிகளுக்கென்று எந்தவித நிபந்தனையும் இன்றி (கடனுக்குஆயினும்) ரூ 500/- மனம் உவந்து உதவியவர்கள் உடன்பிறவா சகோதரரான எஸ். என். ராமமூர்த்தி அவர்கள்

---

மலருக்குக் கட்டுரை கேட்டு நிற்கிறேன். 'விளம்பரம் நிரம்ப கிடைத்துள்ளதா என்ன?'' வினவுகின்றார். ''ஒரே ஒரு விளம்பரம் தான் கிடைத்துள்ளது'' கவிஞர் கருணைதான் சொல்கின்றார்.

''அரசு விளம்பரங்கள்?'' அமைச்சர் வினா....

''இல்லை'' நான்.

அண்ணு கண்ட ஆட்சி; அதனைக் கட்டிக் காக்கும் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சவை. அரசு விளம்பரம் அண்ணுமலருக்கு இல்லையா? அப்படியென்றால் அரசுக்கே இழுக்கல்லவா என்று எண்ணினர் போலும்! வீட்டு வசதி வாரியத் தலைவர் வருகிறார்கள். விளமபரம் தந்துதவும்படி சொல்கிறார்கள் விளம்பரமும் கிடைத்தது. அந்த நன்றிக்கு உரியவர்—தொழிலாளர் நலன் மற்றும் வீட்டுவசதி வாரிய அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள்தான்!

மலரின் முகப்புக்கு அச்சுரு செய்திட வசதியின்மை கண்டு கவிஞர் கருணைதாசன் அவர்கள், அன்பர் திரு நாகராசன் அவர்களிடம் நிலைமையைச் சொல்லி திருவிளக்கு மலருக்கென்று இருந்த அண்ணுவின் வண்ண அரை உருவப்படம் மலருக்கு முகப்பாக அமைந்தால், என்று தொடர்ந்து சொல்லுமுன்பாக திரு நாகராசன் அவர்கள் இசைந்து தந்து 'கஸ்தூரி லித்தோ ஓர்க்ஸ்' அச்சகத்திலேயே அச்சிட்டு உதவினர்கள்.

---

அன்போடு அறிவுரைகள் மட்டுமல்ல தம் பட்டறிவையும் எடுத்துக் கூறி தடுத்துரைத்தார்கள். மறுத்துரை கூறாமல் என் பணியைத் தொடர்ந்தேன். அச்சிடும் கட்டம் வந்தது, தாள் விலை ஏற்றம். காசும் இல்லை; கைகொடுப்பாரும் இல்லை, 'தாள்பற்றிக் கேளாத குறை! 'தாள்பற்றி' கேட்டேன். 'கவலை வேண்டாம் இந்தாருங்கள்' என்று கனிமொழி பேசி தாள் தந்து உதவியவர் திருவிளக்கு ஆசிரியர் திரு. ஜி. நாகராசன் அவர்கள்!

அன்பாய்ப் பழகும் அருள் நெஞ்சும்
அடக்கம் மிகுந்த அரும்பண்பும்
தன்பால் வருவோர்க் குதவிசெயும்
தகைமை யுடைய தனிக்குணமும்

இன்பா யெவரும் அணுகுவண்ணம்
இயங்கும் இயல்பும்: இனிதாக
நன்றே ருருவா யமைந்த நண்பா
திரு நாக ராசன் எனில்தகுமே!

விண்ணை யரணு யமைத்திடவே
வீணு யலையும் மனமில்லா!
கண்ணுங் கருத்தும் கடமையில
செலுத்திநற் காலம் கனிந்திடவே

எண்ணி யிருப்பவர்' பட்டறிவை
ஏற்போர்க் கிசைந்தே எடுத்துரைப்பார்!
எண்ணிக கொடுக்கும கணக்குமனம்
இவருக் கில்லையெனில் மெய்யே!



திரு. ஜி. நாகராசன் அவர்கள்

---

ஒரு பகுதி அச்சிட்டுத் தருகிறேன்! என்று சொல்லி அச்சிட்டுத் தந்தவர் டைனமிக் அச்சகம் திரு மணியம் அவர்கள்

கொடுத்த தொகைக்கும் மேலாக அச்சிட்டுத் தந்தவர். தமிழ்நாடு பாக்ஸ் மேக்கர்ஸ் அண்ட் பிரிண்டர்ஸ் தங்கவயல் லோகிதாசன் அவர்கள். எண்ணற்ற தலைப்புகள் வரைந்து தந்தார் ஓவியர் செல்லப்பன் அவர்கள். இப்படி அனைத்தும் சொன்னால் விரியும் என்பதால் குறிப்பாக சிறப்பாக சுருக்கமாக விளக்க விழைகின்றேன்.

விளம்பரம் அளித்து உதவியதன் வாயிலாக வீசுதென்றலாக வந்தவர்கள்:-

1. மாண்புமிகு அமைச்சர் க. இராசாராம் அவர்கள்
2. அருட்திரு, சுவிசேஷமுத்து அவர்கள்
3. கவிஞர் முரசொலி மணிமொழி அவர்கள்
4. திரு. காந்தராஜ் அவர்கள்
5. டாக்டர் மெ சுந்தரனார் அவர்கள்
6. கவிஞர் கருணைதாசன் அவர்கள்
7. கவிஞர் பி. எல் ராசேந்திரன் அவர்கள்
8. முரசொலி சங்கரய்யா அவர்கள்
9. திரு. மு. வரதராசன் அவர்கள்
10. திருமதி மனோவா அவர்கள்
11. குமாரி விஜயா அவர்கள்
12. திரு. உலகநாதன் அவர்கள்
13. திரு. டி. என். நாகராசன் அவர்கள்
14. திரு. நாராயணன் அவர்கள்
15. திரு. டி வி ராமமூர்த்தி அவர்கள்
16. திரு. எஸ். ஜகதீசன் அவர்கள்
17. திரு. பி. எம். ரெக்ஸ் M D. அவர்கள்
18. திரு. எஸ். கனகசுந்தரம் அவர்கள்
19. திரு. புலவர் மி. ச. நடேசன் அவர்கள்

வீசுந்தென்றலுக்குப் மாலைப் பொழுதாக விளம்பரம் தந்திடும் பொறுப்பில் இருந்து உதவியவர்கள்:-

1. திரு. லட்சுமிகாந்தன் பாரதி அவர்கள்
2. திரு. கஸ்தூரி பிள்ளை அவர்கள்
3. திரு. பழனிவேல்ராசன் M. L. A. அவர்கள்
4. திரு. பி. எச் சாமுவேல் அவர்கள்
5. திரு. ஆறுமுகனார் B A. B. L. அவர்கள்
6. திரு. பு. க பத்மநாதன் அவர்கள்
7. திரு. கோ முத்துப்பிள்ளை அவர்கள்
8. திரு. நாராயணன் அவர்கள்
9. திரு இரா. சிதம்பரம் B.A., அவர்கள்
10. க்டீரியன் கம்பெனி

இத்துணைக்கும் அப்பாற்பட்டு இசைந்தும் இணைந்தும் செயல்பட பேரன்பு உள்ளங்கள:

1. திரு. விசுவநாதன் அவர்கள்
2. திரு. வேல்முருகர் அவர்கள்
3. திரு. திருஞானம் அவர்கள்
4. திரு. தாசன் அவர்கள்
5. திரு. ராசகோபாலன் அவர்கள்
6. திரு. சாமிநாதன் அவர்கள்
7. திரு. நமசிவாயம்

ஆகியோருடன், என்னை இறப்பின் பிடியிலிருந்து மீட்க உதவிய டாக்டர் சந்தோஷம் அவர்கள் டாக்டர் மணி அவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக அடிக்கடி இராப்பகல் பாராமல்

என்னையும் என் குடும்பத்தையுமே மருத்துவ உதவியினுல் காத்துவரும்
டாக்டர் வி. டி. பலராமன் எம். டி. அவர்கள்.

ஓவியங்கள் : தலைப்புகள்

திரு. முரசொலி செல்லப்பன் அவர்கள்
திரு. கனகம் அவர்கள்
திரு. முத்து அவர்கள்
திரு. சோமு அவர்கள்
திரு. சாலமோன் அவர்கள்
திரு. ராஜு அவர்கள்

உருவச்சுகள்

1. செவன் ஆர்ட்ஸ்
2. தயா ப்ராசஸ்

அச்சிட்டவர்கள்

1. கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், சென்னை-6.
2. டைனமிக் பிரிண்டர்ஸ், சென்னை-18.
3. தமிழ்நாடு பாக்ஸ் மேக்கர்ஸ் அண்ட் பிரிண்டர்ஸ்; சென்னை - 14.
4. செல்வின் பிரிண்டர்ஸ், சென்னை-18.

நன்கொடை அளித்த நற்றமிழ் நெஞ்சங்கள்:

| | | | |
|---|---|---|---|
| அருட்திரு | சுவிசேஷமுத்து | அவர்கள் | 50-00 |
| கவிஞர் | மணிமொழி | ,, | 50-00 |
| திரு. | டி. வி. ராமமூர்த்தி | ,, | 50–00 |
| திருமதி | சுப்புலட்சுமி | ,, | 50-00 |
| திரு. | கவ ஞர் குடியரசு | ,, | 50·00 |
| ,, | வெங்கட்ராயலு | ,, | 35-00 |
| குமாரி | விஜயா | ,, | 33 00 |
| திரு | மனோவா | ,, | 30 00 |
| திரு. | எம். வி. பதி | ,, | 25-00 |
| திரு. | மா செங்குட்டுவன் | ,, | 25-00 |
| திரு, | R. பிரசாத் | ,, | 25-00 |
| திரு. | ஜேக்கப் பீட்டர் | ,, | 10-00 |
| திரு. | மெய்கண்டார் | ,, | 10-00 |
| திரு. | A. லட்சுமணன் | ,, | 10-00 |
| திரு. | குமரிமுத்து | ,, | 10-00 |
| திரு. | என் ஆறுமுகம் | ,. | 10–00 |
| திரு. | நாகேந்திரன் | ,, | 10-00 |
| திகு | புண்ணியகோடி | ,, | 10·00 |
| திரு. | சங்கர் | | 15-00 |
| திரு. | திருவாழ்மார்பன் | அவர்கள் | 10-00 |
| திரு. | R. மோகன் | அவர்கள் | 10-00 |
| திரு. | எம். எஸ். பத்மநாபன் | அவர்கள் | 25-00 |
| திரு | தணிகை வளவன் | அவர்கள் | 10-00 |
| திரு. | அசோகன் | அவர்கள் | 10-00 |
| திரு. | சாம்பசிவம் | அவர்கள் | 20-00 |
| திரு. | சங்கர நாராயணன் | ,, | 5-00 |
| திரு. | சேஷாசலம் | | 45-00 |

அரை ரீம் தாள்

மலரில் முக்கால் பகுதிக்கு மேல் அச்சிட்டு மலரை முடித்து உதவியவர்கள் செல்வின் பிரிண்டர்ஸ், சென்னை-18.



தம்பியா யென்னைப் பெற்றத்
தமிழ்க்கவி யிசைக்கூத் தன்பன்
வெங்கட ராயல்—அண்ணன்.
விளங்கி நான் புகழில் வாழ
தன் கடன் தீர்க்க—மும்மைத்
தமிழ் உணர் வீந்தார் வாழி!
என்கடன் பணிசெய் தெல்லாம்
இன்புற கவிஞன் ஆவேன்!



பணமிருக்கட்டும், வேண்டிய அளவிற்கு உருவச்சு (Block) செய்து தருகிறேன் என்று சொல்லிய வண்ணம் செய்தும் தந்தவர்கள் செவன் ஆர்ட்ஸ் இரத்தினம் அவர்கள்.

# கலைஞர் வாழ்க!

முருகுவண்ணன்

தாயினும் மேலாய்த் தனியன்பு காட்டும் தமிழ்முதல்வன்!
ஆயிரம் ஆண்டுக் கொருமுறை தோன்றும் கலையறிவன்!
பாயிரம் பன்னூறு பாராட்டும் மக்கள் பணித்தலைவன்!
ஈயிதை என்னுமுன் ஈந்தேன் எனும்மக்கள் ஆட்சியனே!

அண்ணா யிசத்தின் அருங்கலைக் கூடம் எனவமைந்தோன்!
அண்ணா வசம்பயின் றங்கிங் கெணுமல் அளாவிநின்றோன்!
அண்ணா அகமாகக் கொண்டால் கழகப் புறம் இவன் ஆம்!
அண்ணா விசைகொண் டரசாள் அமைச்சின் அமைப்பிவனே!


திக்கு குலைந்து பகைவர் விழச்செய் திறல்மிகுத்தோன்!
திக்கற்றோர் வாழச் செயல்படு சீர்மனச் செம்மலிவன்!
திக்கெட்டும் போற்றும் திறனுடைச் செங்கோல் செயும்அறவோன்!
'திக்'கெனில் அண்ணா திருவடி எண்ணிடும் சிந்தையனே!

முத்தமிழ்க் காவியத் தோவியன்! மூவா முழுமதியோன்!
முத்தமிழ் நாட்டோர்முன் னேற்றம் முரசொலி செய்மொழியோன்!
முத்திரைப் பொன்விழா கண்டு முறுவல்செய் முல்லைநெஞ்சன்!
முத்துவேல் அஞ்சுகம் பெற்ற புகழ்மொய் முகத்தினனே!

கருணா நிதியோர் இலக்கிய மாமல்லை! காலம்வென்றோன்!
கருணா நிதியோர் அரசியல் போர்க்கள வாகைத்தொகை!
கருணா நிதிதமிழ் சொற்கலை நுண்மான் நுழைபுலக்கண்!
கருணா நிதிதான் நம் அண்ணா கலைக்கோயில் கண்டவனே!

கருணா நிதியே அறிஞர்அண் ணாகண்ட கட்சித்தொண்டன்!
கருணா நிதியே நமதண்ணா கண்ட கழகநிதி!
கருணா நிதியோர் அமைதிப் புயல்! கார் முகில்மனத்தோன்!
கருணா நிதியேகாண் மாநிலத் தன்னாட்சி காண்பவனே!

கணக்காய் எழுத்தெண்ணிப் பாடும் கலித்துறை கட்டளைபோல்
கணக்கிட்டு காலம்பொன் போலும் கடமைகண் போல்கருதி
கணக்கினில் ஐம்ப தகவை கடந்தோன்; கடமைஎண்ணில்
கணக்கைக் கடந்தோன் கருணா நிதிவாழ்க எக்காலுமே!




## உருவம்

உச்சிமேல் வைத்துவந்துப் போற்றி அறிவுலகம்
மெச்சும் வணந்திகழ்ந்த மேலவன் — கச்சித்
திருச்செல்வர் அண்ணா கலையறிவின் மொத்த
உருவமென் றோதும் உலகு!

## மனம்

வாழ்த்து வசைமொழிக்கு; பாராட்(டு) எதிர்ப்பினுக்கு;
பாழ்த்தப் பகைக்கும் பரிந்துதவல்; — வீழ்த்த
முனைந்தார்க்கும் நன்றே முனைந்தாற்றும் தாயின்
மனந்தான்நம் அண்ணா மனம்!

## கண்ணோட்டம்

ஒளியாண் டளக்கும் சுடர்ப்பரப்பை உட்கொள்
ஒளிக்கண்கள் போலும் உடையர் — ஒளிமிகுந்தப்
பேரறிவுப் பெட்டகமாம் அண்ணாவின் கண்ணோட்டம்
பாரினையே ஈர்க்கும்தன் பால்!

## பேச்சு

பேசாரும் பேசவைத்தப் பேராற்றல்; நாளும், நா
கூசாது தூற்றியோரும் கூசவைத்த — மாசில்லா
வைர மொழிச்சிலம்பம்; வாய்மைக்(கு) அரசரண்ணா,
மெய்யுரையின் சொற்கோல மே!

## எழுத்து

அமிழ்தப் பெருக்கு; அழியாக் கவிதை;
தமிழின் மறுமலர்ச்சி; தாரே — கமழும்
இலக்கியப் பூங்கா; எழுதுகலை வல்லார்க்(கு);
இலக்கணம் அண்ணா எழுத்து!

## நடை

தாய்நாட் டெழுச்சி; தமிழ்காப்பு; சூழ்ந்துநமைத்
தீய்த்திடும் தீயணைப்பு; செந்தமிழ்ச் — சேய்களுக்கு
தன்னாட்சி வேட்கை; தனையே தரும்அன்பின்
நன்மாட்சி அண்ணா நடை!

•

## அறிஞர் அண்ணா அறுபத்தைந்து

எண்ணில் அறுபத்து நான்குகலை யோடறிஞர்
அண்ணா அறுபத்தைந் தாம்கலையாய் — எண்ணிடவே
ஒண்ணாதோ சொல்லாய் அறிவுக் கலையுலகே?
அண்ணா அறுபத்தைந்(து) ஆய்!

# மாநிலத் தன்னாட்சி

**கவிஞர் முருகுவண்ணன்**


மாநிலத் தன்னாட்சி — தன்
மானம் செய் பொன்னாட்சி
மத்தியில் கூட்டாட்சி — மக்கள்
மனத்திற்கு நிறைவாட்சி! (மாநில)

மாநிலத் தன்னாட்சி—அண்ணா
மனமலர் கமிழ் ஆட்சி!
மத்தியில் கூட்டாட்சி—என்றும்
வலிமைசேர் நாட்டாட்சி! (மாநில)

(வேறு)

தேவைகள் யாவும் நாமே அடைந்திடத்
தேவை மாநிலத் தன்னாட்சி!
சீரிளந் தமிழை வையம் அளாவிடச்
செய்திட மாநிலத் தன்னாட்சி! —பொற்
காலத்தைக் காணவே அண்ணா வகுத்துக்
காட்டிய மக்கள் மனசாட்சி!
காவியக் கலைஞர் அணிசெய் கருத்துப்
போர்க்கள வெற்றிச் செயல் மாட்சி (மாநில)

மக்கள் தம் மரபும் தனித் தன்மைச் சிறப்பும்
விளங்கவே மாநிலத் தன்னாட்சி!
மாநிலம் தனது தகுதியைக்காட்டும்
வடிவழகே தனிக் கொடிக்காட்சி!
மக்கள், தம் உரிமை பெற்றவ ராக
வாழவே மாநிலத் தன்னாட்சி!
மாபெரும் நாட்டில் சமரச ஆட்சி
உதயமே மாநிலத் தன்னாட்சி! (மாநில)





# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,

## திருத்தணி. [செங்கை மாவட்டம்]

திரு முருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளாகும். அந்த ஆறு படை வீடுகளில் ஐந்தாவது படைவீடாகும் திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், வாக்கில் சிறந்த அருணகிரிநாதர், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்

இத்தகு சிறப்பு வாய்ந்த இத்தணிகை, செங்கை மாவட்டத்தில் சென்னை-பம்பாய் இருப்புப்பாதையில் அரக்கோணம் சந்திப்பிலிருந்து வடக்கே 14 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து 84 கிலோ மீட்டர் தொலைவிலும், அமைந்துள்ளதாகும்.

இத்தலத்தில் நடைபெறுகின்ற ஆடிக்கிருத்திகை பெருவிழாவில் லட்சோப லட்சம் காவடிகள் செலுத்துவதும், ஆயிரமாயிரம் அன்பர்கள் பிரார்த்தனைகள் முடிப்புகள் செலுத்துவதும், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்துவதும், தெப்போற்சவம் மூன்று தினங்களிலும், லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வது கண் கொள்ளாக் காட்சியாகும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31-ஆம் நாள், ஜனவரி 1-ஆம் நாள் திருப்புகழ் திருப்படி திருவிழாவில், திருப்படிகள்தோறும் திருப்புகழ் பாடிச் செல்வது கண் கொள்ளாக் காட்சியாகும்.

நாள்தோறும் இத் தலத்தை நாடி ஆயிரமாயிரம் அன்பர்கள் வருகின்றனர். வருகின்ற அன்பர்களுக்கு தங்குவதற்கு குடில்கள், குடியிருப்பு அறைகள், தங்கும் விடுதியும், யாத்ரிகர்கள் வசதிக்கு சிற்றுண்டிச் சாலையும், மலைக்குச் செல்வதற்கு மலைப் பாதையும், வாகன வசதியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

தணிகை முருகனுக்கு தங்கத்தேர் திருப்பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. அன்பர்கள் மேற்படி பணிக்கு, பணமாகவும், தங்கமாகவும். வெள்ளியாகவும் நன்கொடை கொடுக்க வேண்டுகிறோம்.

நினைத்ததை அளித்திடும் மனத்தினை உருக்கிடும், வழித்துணை வந்திடும், திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்!

திரு. கி. சிதம்பரம் பி.ஏ.,
நிர்வாக அதிகாரி.

1. திரு. புலவர் மீ. ச. நடேசன், தலைவர்.
2. திரு. கே. கன்னைய நாயுடு, அறங்காவலர்.
3. திரு. வி. எம். துரைசாமி ரெட்டி, அறங்காவலர்.
4. திரு அ. கோபாலகிருஷ்ணன், அறங்காவலர்.

தொலைபேசி எண்கள்:

1. திருக்கோயில் அலுவலகம் 25
2. திருக்கோயில் (மலை) 43
3. நிர்வாக அதிகாரி (குடியிருப்பு) 47
4. யாத்ரிகர்கள் குடியிருப்பு இல்லம் 87
5. மலைப்பாதை 96

கயிலையே......  மயிலை!

தந்தி: கபாலீச்சரம்  தொலைபேசி: 71670

# திருமயிலை கபாலீச்சரர் ஆலயம்

## கருங்கல் தளவரிசை திருப்பணி : : நிதி உதவ வேண்டுகோள்

---

தொண்டை நாட்டுத் திருப்பதியாகிய திருமயிலைக் கபாலீச்சரம் மிகத் தொன்மை வாய்ந்த சிவத்தலம். நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர் என்பை எழிலுரு கொண்ட ஏந்திழையாகச் செய்த அற்புதத் திருத்தலம். அருணகிரியாரால் பாடப்பெற்ற சிங்காரவேலர் கோயில் கொண்டுள்ள திருத்தலமும் இதுவே! அம்பிகை மயிலுருவில் வழிபட்ட அரியத்திருத்தலம், அப்பரால் பாடப்பெற்ற அழகொழுகும் ஆலயம். இத்தனை புகழ் மலிந்த மயிலையம்பதியில் உள்ள கற்றூர்கள் ஏத்தும் காபாலீச்சரர் ஆலய பிரகாரத்தில் கருங்கல் தளவரிசை அமைக்கும் திருப்பணியினை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. மு. கண்ணப்பன் அவர்களால் 22-8-71ல் துவக்கப்படுள்ளது.

இத்தகைய திருப்பணிக்கு ஆகும் செலவு ஏறக்குறைய இரண்டு லட்சம். நூறு சதுர அடிக்கு ஆகும் செலவோ ரூ 400/- தான்!

தமிழகததின் தலைநகராம் சிங்காரச் சென்னையில் உலகோர் அனைவரையும் தன் கலைய முகால் ஈர்க்கும் இவ்வாலயத்தில் அரிய திருப்பணிக்கு அன்பர்கள் இருநிதியினை வாரி வழங்கி இறை பணியினை இனிதே முடித்துத் தருமாறு வேண்டுகிறோம்.

நன்கொடை வழங்குவோர்கள், "நிர்வாக அதிகாரி, திரு கபாலீச்சரர் ஆலயம், மயிலாப்பூர் சென்னை-4" என்னும் முகவரிக்கு அனுப்பி அச்சு ரசீதுப் பெற்றுக் கொண்டு திரு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரரின் திருவருள் பெற்று வாழ வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

டி. பாலகிருஷ்ணன்,
ஆர். கோதண்டராமன்,
எஸ். ஜெயராமன்,
ஜி. குசேலர்,
அறங்காவலர்கள்.

சி. செல்வராஜ முதலியார்
தலைமை அறங்காவலர்.

த. நாகராஜன், பி.எஸ் ஸி.,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி.

பேரறிஞர் அண்ணாவின்
பெயரும்-புகழும் ஓங்குக

❋

பாக்யம் ஸ்டோர்ஸ்,
ஸ்டேஷன் ரோடு,
பெரம்பூர், சென்னை-600011

சிறந்த அச்சு வேலைகளுக்கு

சிறந்த இடம்

கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ்,
2/142, அண்ணாசாலை, சென்னை-600006


# இசையோடு இயலும் இலக்கியமும்
# இழைந்தோடத் தமிழ்த் தொண்டு!

| | | |
|---|---|---|
| 19 மீட்டரில் நாள்தோறும் மாலை 7-15—7-55 | தமிழ் | |
| 25, 49 மீட்டரில் இலங்கை வானொலி மூலம் புதன், வெள்ளி மாலை 6-45—7-00 வானமுதம் | தமிழ் | வானொலி நிகழ்ச்சிகள் |
| 49 மீட்டரில் இலங்கை வானொலி மூலம் மாலை 3-30—3-45 வியாழன், சனி இரு நாட்களில் | மலையாளம் | |
| தித்திக்கும் தேன் சுவையோடு திங்கள் ஒருமுறை மலரும் தமிழ் ஏடு தனிப்பிரதி : 30 காசு. ஆண்டு சந்தா ரூ. 3/- | தொடர்பு | |
| ஆங்கில ஏடு, மாதம் ஒரு முறை ஆண்டு சந்தா ரூ. 3/- | MEDIARTS | |

அது மட்டுமா ?

இசைப் பயிற்சி, நடனப் பயிற்சி, இசைக் கருவிகள் பயிற்சி
இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள், நாடகம், நாட்டிய நாடகம்,
நற்செய்தி கூறும் நல்லுரைகள், நூல்கள் இன்னும் பலப் பல.

அத்தனையும் உங்களுக்காகத் தயாரித்தளிப்பது :



## கிறிஸ்தவக் கலை-தொடர்பு நிலையம்,
சென்னை-600018.